# பாரத மணி

“உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்”

—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.


| மாலை 3 | ஞாயிறு 22-10-39 பிரமாதி௵ ஐப்பசி௴ 6௳ | முத்து 4 |
| --- | --- | --- |


## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
| --- | --- | --- |
| போகிற போக்கில் | ... ... ... ... ... | 97 |
| ஸரஸ்வதி பூஜை | ... ... ... “ ரஸிகன் ” | 99 |
| வாழும் வகை | ... ... சுத்தானந்த பாரதி | 105 |
| ரோஜா | ... கு. ப. வெங்கடாசலம் | 106 |
| ஏமாற்றம் | ... ... கிருஷ்ண குமாரி | 107 |
| நகரமும் நாகரகனும் | திவான் பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி | 111 |
| எதிர்பாராதது | ... ... “ குகப்ரியை ” | 113 |
| தொட்டில் | ... ... வே. ராகவன் | 117 |
| எங்கள் குறைகள் | ... ... ... செல்லம் | 120 |
| தமிழ் நாவலும் மாதவய்யாவின் சேவையும் | P. கோதண்டராமன் எம். ஏ. | 123 |
| சரீரப் பாதுகாப்பு | ... டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி | 130 |
| நவராத்திரி பொம்மை | ... ... கி. வா. ஜகந்நாதன் | 138 |
| பெருச்சாளி | ... ... ம. கிருஷ்ணன் | 142 |
| நமது சங்கீதம் | ... ஏ. என். கலியாணசுந்தரம் | 143 |
| மிருதங்க வித்வான் | ... ய. மகாலிங்க சாஸ்திரிகள் | 146 |
| தீராத கடன் | ... த. நா. குமாரஸ்வாமி | 148 |
| என் கனவுகள் | ... ... “ தூங்கு மூஞ்சி ” | 151 |


“ பாரத மணி ” யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

# போகிற போக்கில்—



நண்பர்களே! பாரதமணிக்கு இந்த வாரமும் கொண்டாட்டம். ஆண்டு நிறைவு விழாவை இரண்டு தடவை கொண்டாட இடங் கொடுத்திருக்கிறது. ஆங்கில தேதியை ஒட்டி (இல்லாவிட்டால் தமிழனுக்கு ஜன்ம சாபல்யமேது) அக்டோபர் மாதம் முதல் தேதியில் பிறந்த இதழில் நான் ஒரு தடவை பிறந்ற நாள் கொண்டாட்டம் கொண்டாடி உங்களிடம் கலந்து சில இரகஸ்யங்களைச் சொன்னேன். மறுபடியும் இன்னும் சில ரகசியங்களைச் சொல்ல இப்பொழுது ஒரு சமயம் நேர்ந்திருக்கிறது.

"பாரத மணி" பிறந்த ஜன்மநக்ஷத்திரம் சரஸ்வதி பூஜை தினமே. இந்த சுப தினம்தான் உண்மையான ஆண்டு நிறைவு. தாய்க்கல்லவோ, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்க் குழந்தையை வளர்க்கும் சிரமமும் சந்தோஷமும் தெரியும்? ஸ்வானுபோகமில்லாமல் மொழியின் வன்மையால் இதையெடுத்துச் சொல்ல இயலாது. தினசரி போலவே, வாரப் பத்திரிகையிலும் வேலைக்கு ஓய்வு, ஒழிவு கிடையாது. யானைக் குட்டிக்குத் தீனி போடுவது போல், தென்னம் மட்டை தீர்ந்து போனால் வேப்பந்தழையையாவது ஒடித்துப் போடவேண்டும், நமது சோழ நாட்டில் கருப்பங் தோட்டம் ஏது?—கங்கை தீரத்திலல்லவோ கருப்பங் கொல்லையும் கவிதையும்! தினசரி பத்திரிகையிலாவது விடா முயற்சியுடன் கொஞ்ச காலம் தீனி போட்டால் யானைக்கு தந்தம் முளைக்கும். அதுகூட வாரப் பத்திரிகையில் கிடையாதே! வாரப் பத்திரிகை அடிமைப் பெண் குட்டியாயிற்றே!

ஒரு வருஷத்துத் தொண்டை "ஆடிட்" செய்து சீர் பார்க்க இந்த சமயம் தவிர வேறு ஏது? பல நினைவுகளும், கனவுகளும் தோன்றுகின்றன. வயலுக்கு நாற்றங்கால் எவ்வளவு அவசியமோ, இலக்கியச் செழிப்புக்கும் நாகரீகத்தின் மேன்மைக்கும் தினசரி பத்திரிகை, வாரப் பத்திரிகை, மாதப் பத்திரிகை முதலியவைகள் மிக்க அவசியம் என்பது என்னுடைய வெகு நாளையக் கொள்கை. இது சரிவர நமது நாட்டில் வெகு காலமாக நடந்து வாராதபடியினால்தான் இலக்கியத்தின் செழிப்பும் செல்வமும் ஏற்படவில்லை. இந்தத் துறையில் "கலைமக"ளும், "ஆனந்த விகடனு"ம், "மணிக்கொடி"யும், "சுதேசமித்திர"னும் நல்ல தொண்டு செய்து வருகின்றன. இவைகளுக்குப் பக்க பலமாக கிராம முன்னேற்றத்தை யொட்டி நானும் ஒரு சிறிய பத்திரிகை நடத்த வேண்டுமென்ற ஆசை எனக்கு வெகு காலமாயுண்டு.

20 வருஷங்களுக்கு முன்பு நான் ஆங்கிலத்தில் எழுதிய "பேபர் போட்ஸ்" என்னும் புத்தகத்தை கவி ரவீந்தரநாத் தாகூர் படித்து எனக்கொரு கடிதமெழுதினார். "இவ்வளவு நேர்த்தியாக எழுதும் நீ, ஏன் தாய்ப்பாஷையில் எழுதி, தாய்ச் செல்வத்தைப் பெருக்கக் கூடாது?" என்று கேட்டார்? உடனே அப்பொழுதே நான் பத்திரிகைத் துறையிலிறங்கினேன். பிற்காலம் வரக்கூடும் அட்வகேட் ஜெனரல் வேலையை யிழந்தேன்! "தமிழுலகு" என்று பெயரிட்டு ஓர் தமிழ் வாரப் பத்திரிகையை ஒரு வருஷ காலம் மிக்க சிரமத்துடன் நடத்தினேன். பிதிரார்ஜிதத்தில் ஒரு வேலி

இழந்தேன். அந்தத் தொண்டும், அதன் கஷ்டமும், நஷ்டமும், வயலுக்கு எருப் போட்டதுபோல், ஆனது கண்டு களித்தேன்.

ஆகையால் மறுபடியும் நான் வக்கில் தொழிலை விட்டு விட்டு கிராம சேவை செய்ய வேண்டுமென்று தீர்மானித்தபொழுது பழைய வாசனையை இரத்தத்திலிருந்து விலக்க முடியுமா? அதோடு ஒரு வாரப் பத்திரிகையை, கிராம சேவைக்கு நாக்குப்போல், போட வேண்டுமென்று அவா கொண்டு தீர்மானித்தேன். ஒரு வருஷ காலம் தயங்கித் தயங்கி நின்றேன். கிளர்ச்சி வேகத்தில் அச்சுப்போட்ட நோட்டீஸை, வெளிவிடாமல் 1 வருஷம் இருந்தேன். சட்டையையும் தலைப்பாகையும் மாட்டிக் கொண்டு கோர்ட்டுக்குப் போனேன். ஆனால் மனதில் சாந்தமும் சமாதானமும் ஏற்படவில்லை. வயசு 48. பல பெரிய பத்திரிகைகளிலிருந்து எழுதச் சொல்லிப் பல வேண்டுகோள்கள் அடிக்கடி எனக்கு வருவதுண்டு. அவைகள் என்னைத் தூண்டுவதில்லை. இயற்கையில் நான் ஓர் சுயம்பாகி. ஆனால் பலர் சேர்ந்து விருந்துண்ண வேண்டும். நான் மாத்திரம் எழுதினால் போதுமா? தனியாய் விருந்துண்டால் ஸந்தோஷமுண்டா? கவிதை ஒரு நிலாச் சாப்பாடுபோல் அல்லவா? ஒரு கோஷ்டியை அல்லவோ சேர்த்துக் கும்மாளமடித்து அவர்களுடன் சேர்ந்து கைகொட்டி ஸந்தோஷிக்க வேண்டும்.

இப்படிப்பட்ட தீவிரமான எண்ணங்கள் புகுந்து என்னைத் தூண்டிக்கொண்டேயிருந்தன. சென்ற வருஷம் சரஸ்வதி பூஜை நெருங்க நெருங்க மனதுக்குத் தீர்மானமேற்பட்டது. என் ஆப்த நண்பர் ஒருவர் இந்தத் தொண்டை அவசியம் செய்ய வேண்டுமென்று சொன்னார். ஆனால் பல நண்பர்கள், "மணி, உனக்கு ஏன் இந்த அவ்வியாக்ருத வியாபாரம்? தேசத்தின் காலத்தின் நிலை தெரியவில்லையே! நீ சும்மாயிருந்து, உனக்கு ஈசன் அளித்திருக்கும் கவிதையைப் போற்றக் கூடாதா! அதுவே உனக்கும் சுகம். எங்களுக்கும் சுகம். பத்திரிகை மடுவில் மீனுண்டா? எல்லாம் முதலைகள் தானே." இவர்கள் சொல்வது நியாயமென்றே மனதுக்குத் தோன்றினாலும், எனக்குச் சமாதானம் ஏற்படவில்லை. 100-க்கு 95 பேர் படிப்பற்றவர்ளாகயிருக்கிற இந்நாட்டில், எப்படிச் சமாதான மேற்படும்!

* * *

வெகு காலமாய் என் கனவு:—இகலோக பரலோக சாதகங்களைச் சுக துக்கமன்னியில் ஒன்று சேர்த்து வாழக்கூடிய ஓர் கிராம சமூகத்தைச் சிருஷ்டி செய்து இதை உதாரணமாக உலகம் முழுவதும் பரப்பவேண்டுமென்ற கனவு என்னை வெகுநாட்களாய்க் கொள்ளையிட்டுக் கொண்டேவந்திருக்கிறது. அதையொட்டி ஒரு ஆச்ரமம் அதாவது ஒரு கிராம மேற்படுத்தி அதில் ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடம், ஒரு தொழிற்சாலை, ஒரு பண்ணை, ஒரு கோ சாலை, ஒரு பிரசுராலயம், இவைகளை வட விருக்ஷத்தின் கீழ் ஒன்று சேர்த்து வளர்த்து வைக்கவேண்டுமென்பதுதான்.

"பாரதமணி"யை ஆறுமாதகாலம் கூவத்தின் தண்ணீரை இறைத்து வளர்த்து கொஞ்சம் வேரூன்றியதும் நாற்றங்காலிலிருந்து நாத்தடித்து கிராம வயலில் கொண்டுபோய் நட்டுவிடலாமென்பது என் எண்ணம். மின்சார வசதி தமிழ்நாடு முழுவதும் மூலை முடுக்கில்கூட ஏற்பட்டுவிட்டது. ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யருக்கு எங்களின் தினசரி வந்தனம்—ஆகையால் "தந்தி" மரத்தின்கீழ் ஓர் கிராமத்தில் ஓர் அச்சாபீஸை ஏற்படுத்தி, "பெலிகன்" "பெங்க்வின்" போலொத்த பிரசுராலயத்தைத் தமிழில் உண்டுபண்ணி லக்ஷக்கணக்காய் இரண்டுபடி நெல்லுக்கு ஒரு புஸ்தகமாக வாரியிறைத்து எல்லா சேரியிலும் இந்த மின்சார ரசத்தையும் நுழைய வைக்கலாமென்றபது என் எண்ணம் அலர் பிடித்த தமிழ் நாட்டைத் தேய்த்துத்தேய்த்துக் குளிப்பாட்டிச் செப்பனிடலாமென்ற சொப்பனவஸ்தையில் இன்னம் முழுகி நிற்கிறேன். ஆனால் நான் எதிர் பார்த்த

படி எனக்கு இன்னம் ஆதரவு கிடைக்க வில்லை. சுப்ரமணிய பாரதியை பட்டினி போட்ட தமிழ் நாடல்லவோ. 60 வருஷ காலமாய்ப் பாடுபாட்டுவரும் மஹாமஹோ பாத்யாய உ. வே. சாமிநாய்யருக்கே தமிழ் நாடு இன்னம் தக்க ஆதரவே அளிக்கவில்லையே. நான் காத்துக் கைகட்டி வெகுகாலம் நிற்கத் தயாராயிருக்கிறேன்.

* * *

நண்பர்களே! நான் உங்களைச் சலிக்க அடிக்கும் வரையில் எழுத எண்ணமில்லை. குடிக்கும் காப்பியை விட்டு விட்டுக்கூட "பாரத மணி" யை நடத்தத் தயாரா யிருக்கிறேன். எறும்பு ஊறக்கல்லும் குழியாதா? "பாரத மணி" வேரூன்றித் துளிர் விட்டவுடன்—இன்னும் பட்டை காயவில்லை—அதை சென்னை சகதியி லிருந்து தந்திரமாக வேருடன் பெயர்த் தெடுத்து நதி தீரத்தில் ஓர் கிராமத்திற் குக் கொண்டுபோய் ஆலமரத்தடியில் அச் சாபீஸை நிர்மாணம் செய்து ஒருபிரசுரால யத்தையும் வைத்துத் தமிழில் 100 புஸ்த கங்கள் வெளியிட்டுவிட்டு ஸந்யாசம் வாங் கிக்கொள்ளலாமென்று நினைக்கிறேன். அதுவரையில் என்மனது ஓய்வடையாது.

நண்பர்களே! நீங்கள் தான் நான் கண்டிருக்கும் கனவை நிறைவேற்ற வேண்டும். ஆலமரத்துக்கு விழுதுபோல் கல்விக்குக் கால் கொடுத்து, நிறுத்தும் தூணல்லவா, பத்திரிகையும், பிரசுராலய மும்!

* * *

கடைசியாக ஒரு கடமை. என்னுடன் ஒத்துழைத்த பல நேயர்களுக்கும், பாரத மணிக்கு இதுவரையில் விஷயதானம் செய்தவர்களுக்கும், விளம்பர உதவி செய் தவர்களுக்கும், சந்தா அனுப்பியவர்களுக் கும், வாராவாரம் கிழமை தவறாமல் அழ காக அச்சிட்டுத் தயார் செய்து கொடுத்த "ஜூபிடர் பிரஸ்" சுக்கும் என்னுடைய மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவிக்கி றேன்.

மணி.

---

# சரஸ்வதி பூஜை

"ரஸிகன்"

மறுநாள் ஸரஸ்வதி பூஜை. ரங்கஸாமி ஐயர் தன் வீட்டில் புஸ்தக அறையில் இடுப்பில் ஒரு துண்டைக் கட்டிக்கொண்டு தரையில் உட்கார்ந்து புஸ்தகங்களைப் பிரித்துப் பார்த்துப் புழுதிபோகத் தட்டி வைத்துக்கொண்டிருந்தார். எங்கே பார்த் தாலும் புஸ்தகமயம். நாற்காலிகளிலும், மேஜைகளிலும், பீரோக்களிலும், பீரோக் கள் மேலும், ஜன்னல் படங்குகளிலும் தரையிலுமாக நூற்றுக்கணக்கான புஸ்த கங்கள் திறந்தும், மூடியும், செங்குத்தாக வும், படுக்கையாகவும், கும்பலாகவும் அடுக்கடுக்காகவும், ஒரே அலங்கோல மாய்க் கிடந்தன. ரங்கசாமி ஐயர் ஒரு எழுத்தாளர். பத்திரிகைகளி லிருந்து விமர்சனத்துக்காக வரும் புஸ்தகங்கள், தன்னைப்போன்ற இதர எழுத்தாளர் தங் கள் நூல்களை மரியாதையை முன்னிட்டு அவருக்கு இனாமாய்க் கொடுத்தவகையில் கிடைத்த புஸ்தகங்கள், தன் வரும்படியி லிருந்து மாதம் ரூபாய் 50, 100 செலவு செய்து அவர் வாங்கின புஸ்தகங்கள், ஆகப் பலவழியாய்ப் புஸ்தகங்கள் குவிந்து கிடந்தன. அவ்வளவு புஸ்தகங் களும் அவர்கூட முழுவதும் ஒருமுறை வாசித்திருக்க முடியுமா என்று எனக்குச் சந்தேகம்தான். ஆயினும், அவர் ஆஸ் தைக்களவில்லை. கவிதையில் நுட்பமான அறிவும் நுகர்ச்சியும் உள்ளவராயினும், இந்த ஆயிரக்கணக்கான புஸ்தகங்களைத் தராதரப்படி வகுத்து, அதிகப் பிரயோ ஜனமில்லாதவைகளை நீக்கிவிட்டால் இட அடைசல் குறையும் என்று யாராவது சொன்னால் சாந்த ஸ்வரூபியான அவருக்

குக் கொஞ்சம் கோபம் உண்டாகும். ஒருவனுக்குப் பத்துப் பிள்ளை யிருந்து அதில் நாலு கவைக்குதவாததா யிருந்தால் அதற்காக அவர்களை வீட்டைவிட்டு விலக்கிவிட முடியுமா? அந்தப் புஸ்தகங்களிடத்தில் அவருக்கு அதுபோன்ற பித்ருபாவம்தான்.

அதுவும் அவர் ஸம்ஸாரம் இறந்த பிறகு இந்தப் புஸ்தகப்பித்து ஜாஸ்தியாய் விட்டது. மனையாள் இல்லாத அந்த வீட்டுல், ஸதா இடம் ஒழிக்கவும், தட்டவும் கொட்டவும், சுத்தம் பண்ணவும் ஒருவரும் அதிகமாய்ச் சிரமப்படுவதில்லை. புஸ்தக அறையோ வருஷத்துக்கு ஒரு முறைதான் சீர்திருத்தப்படும். சரஸ்வதி பூஜைக்கு முதல்நாள் அந்த ஆயிரக்கணக்கான புஸ்தகங்களையும் ஐயர் தன் கையாலேயே தட்டித் தடவி, மருத்துவம் பார்த்து அதற்காக ஓர் விமானம் அமைக்கப்படும். ஓர் அகண்டமேடையில் யுத்தத்துக்குத் தயாராய் அணிவகுத்து நிற்கும் சிப்பாய்கள் போல் அவைகளை யடுக்கி அலங்காரம் செய்து தூபதீபாதி நியமங்களுடன் ஸரஸ்வதி தேவியை ஆராதனை செய்வது வழக்கம்.

இது அவர் பிள்ளைகள் இருவருக்கும் ஓயா விநோதத்தை தரும். ஒருவனுக்கு வயது 16, மற்றவனுக்கு 14 நிரம்பவில்லை. இளமையிலேயே தாயாரை யிழந்த அக்குழந்தைகளை அய்யர் வெகு செல்லமாய் வளர்த்து வந்தார். வாசனைப் பலனுக அக்குழந்தைகளுக்கும் படிப்பிலே மிகப் பிரியம் 'இதை வாசி' அதை வாசிக்காதே' என்ற நிபந்தனை நிஷேதங்கள் ஒன்று மில்லாமல் இஷ்டப்பட்ட புஸ்தகங்களை எடுத்துப் படிக்கும் வழக்கம் இருந்தபடியால் அச் சிறுபிராயத்திலேயே நூற்றுக்கணக்கான புஸ்தகங்களை அவர்கள் படித்திருந்தார்கள். ஆனல் புஸ்தகங்களிடத்தில் கொஞ்சம் கூட மரியாதை கிடையாது. வாசித்துக் கொண்டிருக்கும் போது யாராவது கூப்பிட்டால் விட்ட இடம் மறவாமலிருப்பதற்கு திறந்தபுஸ்தகத்தை திறந்தபடியே தலைகீழாய்த் தரையில் அமர்த்திச் செல்வார்கள். வாசிக்கும் போது நன்ருய் பைண்டு செய்யப்பட்ட புஸ்தகங்களையும் பிரித்து மடக்கி இடுப்பை முறிப்பதில் அவர்களுக்குத் தனியான ஒரு உற்சாகம் காணப்பட்டது· இவர்களா காலில் தவறிப்பட்டால் அப் புஸ்தகத்தை உடனே கண்ணில் ஒற்றிக் கொள்வது, புதுப் புஸ்தகத்துக்கு அட்டை போடுவது, வெள்ளிக்கிழமை தவருமல் சாம்பிராணி போடுவது முதலான பிராசீன சம்பிரதாயங்களை அனுஷ்டிக்கிறவர்கள்? அப்படிச் செய்யாததற்காக ஐயர் சற்றும் அவர்களைக் கடுப்பதில்லை. எவ்விஷயத்திலும் தங்கள் மனப் போக்கையே அவர்கள் நாடுவது நலமென்றும், தன் மதத்தை அவர்கள் இஷ்டமிருந்தாலும் இல்லாவிட்டாலும் கைப்பற்றித் தீரவேண்டுமென்று நினைப்பது சுத்த முட்டாள்தன மென்பது அவர் அபிப்பிராயம். ஆகையால் ஸரஸ்வதி பூஜையன்றுகூட அவர்கள் இஷ்டமிருந்தால் ஆசார அனுஷ்டானமாய் வந்து சேர்ந்து அவருக்கு வேண்டிய உபகாரங்களைச் செய்வார்களே யொழிய, அவர் நிர்ப்பந்திப்பதில்லை.

இப்படியிருக்க அன்றையதினம் ஐயருக்கு உடம்பு சற்று சௌகரியக்குறைவாயிருந்தபடியால் அதைக்கண்ட பையன்களும் உடன்இருந்து புஸ்தகங்களைச் சீர்பண்ணிக் கொண்டிருந்தார்கள். மாலை 4 மணியாயிற்று. பெரியவன் சின்னவனை நிண்டினுன். அவன் அடுத்தவீட்டு டென்னிஸ் **கோர்ட்டில்** தாங்கள் ஏதோ மேட்ச் விளையாடுவதாய் ஒப்புக்கொண்டிருப்பதாகவும் அதற்குச்சற்று முன்னமேயே போய்ச் சேர்ந்தால் தேவலையென்றும் தகப்பனுரிடம் சொன்னுன். ஒரு நாளும் மறுக்காதவர், அன்று உடம்பு வலியால், "5 மணிக்குதானே மேச்ட், சற்றுக் கழித்துப் போனுல் போறது இந்தப்புஸ்த கத்தையெல்லாம் கொஞ்சம் நேர் பண்ணிப் போங்களேன்," என்ருர், 10 நிமிஷம் எல்லோரும் மௌனமாய் வேலையைப் பார்த்தார்கள், திடீரென்று " இந்தக் கந்தல் புஸ்தகங் களைக் கட்டிக்கொண்டு மாரடிப்பாளோ. முக்காவாசி சொக்கப்பானை கொளுத்தத்தான் பிரயோஜனம்" என்று சின்னவன் சற்

றுப் பதட்டமாய்ச் சொன்னான். தன்னைத் தெரியாமல், அந்த வார்த்தை வந்தது. அவன் திடுக்கிட்டான். அவன் தமையன், தம்பியின் ஆண்மையைக் கண்டு பிரமித்துப்போனான். ஐயர் ஒருநாளும் காணாத ஆத்திரத்தோடு சின்ன பிள்ளையை ஏறிட்டுப் பார்த்துவிட்டு "இங்கே நிற்க வேண்டாம், போகலாம்" என்று கடிந்து சொல்லித் தலை குனிந்தார். பையன்களும் மனதில் ஒரு புறம் வெட்கமும் பயமும் வாதாட ராக்கட்டை க்கையிலெடுத்துக் கொண்டு வாசலில் போய் விட்டார்கள்.

ஐயர் புஸ்தகங்களைத் தட்டவுமில்லை கொட்டவுமில்லை. முப்பது வருஷத்துக்கு முந்தி நடந்த ஒரு சரஸ்வதி பூஜை அவர் ஞாபகத்திற்கு வந்தது. அப்பொழுது அவநுக்குப் பத்து வயதிருக்கும். தன் மாமன் வீட்டில் படித்துக் கொண்டிருந்தார். அவர் மாமா சுந்தரமய்யருக்குக் குழந்தைகள் கிடையாது. தன் சகோதரி பிள்ளையைத் தன் பிள்ளை போல் கருதி அவனுக்குப் படிப்புப் புகட்டுவதில் வெகு தீவிரமாக இருந்தார். சுந்தரமய்யருக்குப் படிப்பு சொற்பம். புஸ்தகங்களிடத்தில் அவருக்குள்ள அன்புக்கு எல்லை கிடையாது. ஸரஸ்வதி பூஜை அவர் வீட்டில் பெரிய திருவிழா. முதல் நாளே கூடத்துசரப்பலகையிலிருந்து புஸ்தகப் பெட்டிகளை இறக்கி விடுவார். ஓலைக் கணக்கும் ராமாயணச் சுவடிகளும் நிறைந்தபழைய காலத்து மரப்பெட்டி ஒன்றும், பூட்டுப்போன இரண்டு தகரப்பெட்டிகளுமே அவர் பொக்கிஷம். தகரப் பெட்டிகளில் அவர் மெட்ரிகுலேஷன் வரையில் படித்த புஸ்தகங்களும், மூர் மார்க்கெட்டில் மலிவாகக் கிடைத்ததென்று, தனக்கு உபயோகம்உண்டு, இல்லை என்பதைக்கூட யோசிக்காமல் வாங்கின புஸ்தகங்களும், அட்டைபோய், பக்கம் போய் அழுக்கேறினதால் தனக்கு வேண்டாமென்று அவருக்கு இனமாய் நண்பர்களால் கொடுக்கப்பட்ட புஸ்தகங்களும் நிரம்பியிருந்தன. இந்தப் புஸ்தகங்கள் பெரும்பாலும் சுந்தரமய்யர் கையால் தடவிக் களித்தவரேயொழிய, வாசித்தவரல்ல. அந்த ரஹஸ்யம் ரங்கசாமிக்குத் தெரியாது. ஸரஸ்வதி பூஜைக்கு முதல்நாள் புஸ்தகங்களை இறக்கிப் பரிசோதனை பண்ணும்போது அவனும் கூட இருப்பான். 'இதையெல்லாம் நீ எப்போ வாசிக்கப்போகிறாய்,' என்று அவனைக் கொஞ்சம் ஏளனமாய் அவர் கேட்பதுண்டு. அப்போது அவன் வெட்கித் தலைகுனிவான். அவன் புத்திசாலி, வாசிப்பு நன்றாய் வருகிறது என்று அவருக்கு மனதுக்குள் சந்தோஷ மிருந்தாலும், அதை வெளிப்படையாய்க் காட்டிவிட்டால் அகந்தை கொள்வான் என்று நினைத்து, கடுமையாயும், அவன் படிப்பைச் சற்று தாழ்த்தியுமேதான் அவர் பேசுவது வழக்கம். இந்த சூக்ஷ்மம் அறியாத அவன் தான் மக்கென்று நினைத்து சில சமயம் ஏங்கினாலும் படிப்பதில் குறைவில்லை. குறைந்தால் யார் விடுகிறார். வருஷம் 360 நாளைக்கு ஸரஸ்வதி பூஜை ஒருநாள்தான் அவனுக்குப் படிப்பு விடுமுறை. அன்றைக்கு அம்மன் கொலுவிருப்பதால் புஸ்தகத்தைக் கையிலெடுப்பது அபராதமென்பது ஐயர் கொள்கை. அன்றைக் காலையில் ஸ்நானம் பண்ணி, பட்டு வேஷ்டி கட்டிக்கொண்டு பீடத்தில் பெட்டிகளையும், தன் பள்ளிக்கூடத்துப் புஸ்தகங்களையும் ஏற்றி வைத்து மாமா பூஜை முடிக்கும்வரை வணக்கமாய்ப் பக்கத்திலிருந்து, பிறகு போஜனம் முடித்துக்கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பினால் சாயந்திரம் 6-மணிக்குத்தான் வீடு திரும்புவான். எங்கே போனாய் என்று மாமா கேட்பதில்லை. விளக்கு வைத்ததும் சோற்றைத் தின்று ஆனந்தமாய் நித்திரை செய்வான். மறுநாள் 10-மணிக்கு விஜயதசமி பூஜை முடிந்த பிறகுதான் புஸ்தகத்தைக் கையில் எடுப்பது. எடுத்த புஸ்தகத்தை அடுத்த ஸரஸ்வதி பூஜையன்றுதான் கீழே வைப்பது. இப்படி நடந்துவந்தது ரங்கசாமியின் வாழ்க்கை.

அந்த வருஷம் சுந்தரமய்யர் எங்கேயோ ஊருக்குப் போய்விட்டு ஸரஸ்வதி பூஜையன்று காலையில் தான் வீடுவந்து சேர நேர்ந்தது. அவர் வீட்டைவிட்டு இலே

சில் கிளம்புவதில்லை. கிளம்பினால் சீக்கிரம் திரும்புவதுமில்லை. வந்தால் 10 நாளைக்கு வீட்டில் அமுளி துமுளிதான். 'அதை இங்கே வச்சிருந்தேனே, யாரெடுத்தா?' 'இந்த விளக்கை யாருடைத்தா?', 'கொல்லை வாழை யெல்லாம் நாசமாய்ப் போய்ட்டதே, இதை ஒத்தாரும் கேழ்வி கேழ்ப்பாரில்லையா?', என்றெல்லாம் குற்றம் கண்டுபிடித்து, முணு முணுத்துக்கொண்டே வீட்டில் இருப்பவர்களை இம்சிப்பார். நல்ல வேளையாய் ரங்கசாமி ஐயர் தாயாராவது அவர் ஸம்ஸாரமாவது எதுக்கும் பதில்சொல்லுவதில்லை. ஆகையால் பொங்கித் தாமாகவே அடங்குவார். அதுபோலவே அன்றும் ரயிலிலிருந்து வந்து இறங்கின அவர், இரவில் கண் விழித்த சிரமம் ஒரு பக்கம், ஒருமாதமாய் ஊரிலில்லாததால் வீட்டில் எல்லாம் கோணலாய் அவர் கண்ணுக்குப் புலப்படுவதால் உண்டாகும் வெறுப்பு ஒரு பக்கம், நொண்டி ஏணியை வைத்துக்கொண்டு கூடத்துச் சரப்பலகையிலிருந்து அந்த கனமான பெட்டிகளை இறக்கவேண்டுமே என்ற சலிப்பு ஒரு பக்கம், வீட்டில் ஒருவர் கூடப் பாக்கியில்லாமல் எரிந்து விழுந்துகொண்டு பெட்டிகளை எடுக்க உயர ஏறினார். ஏறி முன்னடியில் இருந்த மரப்பெட்டியை இழுத்தார், நகரமுடியவில்லை. 'இது என்ன எழவாயிருக்கே' என்று முணு முணுத்துக்கொண்டே வலிந்து இழுத்தார். 'சொர்' என்ற சத்தத்தோடு பெட்டி நகர்ந்தது. தூக்கிப் பார்த்தால் பச்சையாய்க் கறையான் மண் மூக்குச்சளி ஈஷினாப்போல் சரப்பலகையிலும பெட்டியின் அடியிலும் ஈஷிக்கொண்டிருந்தது. சுந்தரமய்யருக்கு வயற்றில் 'சொரே'ரென்றது. அவசரமாக மரப்பெட்டியைக் கீழே வைத்துவிட்டு, ஏணியில் ஏறி தகரப்பெட்டியை இழுத்தார். கைக்கு லேசாக இருந்ததோடு, அதற்குள்ளிருந்து தகரத்தில் காற்றால் ஆட்டப்பட்ட உராய்வதுபோன்ற ஒரு சத்தம் அவர் காதில் விழுந்தது. கால் கை விலவிலக்க இரண்டு பெட்டிகளையும் கீழே இறக்கி மேல் மூடியைத் தள்ளினார். ஒரு கோரமாண காட்சி கண்ணில் தென்பட்டது. புஸ்தகங்கள் அநேகமாய் உருத்தெரியாமல் கறையான் கூடுகளாய்க் காணப்பட்டன. முரட்டு அட்டையுள்ள புஸ்தகங்களுக்கு அட்டைமட்டும் பாக்கி. இதர புஸ்தகங்களில் அதுவுமில்லை. வெள்ளைப்பாய் விரித்தாற்போல் இடுக்கு முடுக்கு ஒன்றும் பாக்கியில்லாமல் நிரம்பியிருந்த கறையான் பூச்சிகள் வெளிச்சத்தைக்கண்டதும் கொலேலென்று நாலாபக்கமும் வழிய ஆரம்பித்தன. 'அய்யோ, இதென்ன அனியாயம்!' என்று அலறிக்கொண்டு சுந்தரமய்யர் பெட்டியை எடுத்துப்போய் முற்றத்து வெயிலில் சாய்த்தார். ஒவ்வொரு பெட்டியிலும் அடியில் 5, 6 புஸ்தகத்தில் இன்னும் கறையான் சரியாகப் பிடிக்கவில்லை. அவை தவிர பாக்கி யெல்லாம் கரையான் மண்ணாகவே மாறி நின்றது.

இதைக் கண்ட சுந்தரமய்யர் பித்துப் பிடித்தவர்போல் கூடத்துத் தூணில் சாய்ந்து விட்டார். அவர் மனது காரியத்தில் ஓடவில்லை. போராத தற்கு அவர் தாயார், "இதென்ன, அச்சானியம்போலே, கறையான் வந்து தலெமொரை தத்துவமா வந்த செவுடி யெல்லாம் தின்னுட்டுதே! இன்னிக்காலமே வாசல்லே நான் கோலம் போட மாவைக் கையிலெடுத்ததும், அந்த எதிராளாத்துத் தடியன் தும்பினவொடனேயே ஏதோ ஆபத்து வந்துட்டுதுன்னு நெனச்சேன். பகவானே, குட்டி கொழந்தைகளுக்கு ஒண்ணுமில்லாமெ இருக்கணுமே, நாம் போனப்போரேன். இந்தக் கெழங் கட்டைக்கு என்ன வச்ருக்கு?" என்று பரிதபித்தாள். 'சரி, சரி. வாயை மூடு' என்று அவளை அதட்டிவிட்டு, கறையான் வந்ததற்குத் தான் ஜவாப்புதாரிபோல் நடுங்கி நின்ற ரங்கசாமியை 'வாயைப்பொளந்து நிக்கரையே, தடிக் கழுதை, மீதி மிச்சம் இருக்கர்தை எடுப்போமென்னு துப்பில்லாதே, அதிர்ஷ்டம் தான் தெரிஞ்சேருக்கே' என்று சீறி இரண்டு அறை வைத்துவிட்டு, சுமாராய் இருந்த புஸ்தகங்களைத்தட்டிக் கறையான் ஈரம் காயும்படி சற்று வெயிலில் உலர்த்தி எடுத்து வைத்தார். பிறகு ஸ்நானம் பண்ணி பூஜையை

ஏதோ 'காமாச்சோமா' என்று முடித்தார். மூஞ்சியில் ஈயாடவே யில்லை.


அன்று தற்செயலாய் ரங்கசாமி தகப்பனர் அங்கே வந்து சேர்ந்தார். கரையான் பிடித்த வரலாற்றைக் கேட்டு 'சே, இதுக்காகவா, சுந்தரம், இவ்வளவு துக்கப்படரே. அந்த மண்ணுங் கட்டிப் பொஸ்தகமெல்லாம் ஒழிஞ்சது நல்லதாச்சு. வீணு சரப்பலகைக்குப் பாரம். நீ ஒரு நாக்கூட அந்த புஸ்தகங்களை எடுத்து வாசித்ததை நான் பார்த்ததே யில்லையே,' என்று சற்றுக் கேலியாய்ச் சொன்னர். சுந்தரமய்யருக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. இருந்தாலும் தன் அத்திம்பேரிடம் ரொம்ப மரியாதை உள்ளவராதலால், ஒன்றும் சொல்ல மாட்டாமல் உதட்டைக் கடித்துக்கொண்டு பேசாமலிருந்தார். மத்தியானச் சாப்பாடு முடிந்தது, எல்லோரும் சற்று இளைப்பாறினர்கள்.

அன்று மாலை நாலு மணிக்கு, பெரிய கோவிலில் திருப்பயணம் பஞ்சாப தேச பாகவதர் கதை. ரங்கசாமி தகப்பனருக்கு பாகவதரிடத்தில் ரொம்பப் பிரேமை. கதை கேட்கவென்றே ரயிலோடு ஊருக்குப் போகாமல் அன்று அங்கு இறங்கினர். ரங்கசாமிக்கும் கதை கேட்க ஆவல். ஆனல் 'நானும் வரேன்' என்று சொல்ல பயந்தான். ஏனென்ருல் அவன் மாமாவுக்கு ஹரிகதை சொல்லுபவர், பாட்டுப்பாடுபவர் இவர்களைச் சுத்தமாய்ப் பிடிக்காது. அவர்களெல்லாம் கூத்தாடி யென்றும் குரங்கோட்டி யென்றும் வாயில் வந்தபடி நிந்திப்பார். கதை கேட்பது, கச்சேரி கேட்பது, நாடகம் பார்ப்பது இதெல்லாம் முழுச் சோம்பேறிகள் செய்யும் காரியம் என்பதும் படிக்கும் பிள்ளைகள் அதில் இறங்கினல் படிப்புக் கெட்டுப்போமென்றும் அவர் நம்பிக்கை. ஆகையால் ரங்கசாமியை அவன் தகப்பனர் 'கோவிலில் கதை போகலாம் வா' என்று கூப்பிடவே, அவன் சற்று தயங்கினலும், அவாமேலீட்டால் சட்டையைப் போட்டுக்கொண்டு கிளம்பினன். சுந்தரமய்யருக்கு வந்தது சன்னதம். "சரி, சரி, கதை கேட்கப்போறையா, உருப்பட்டாப் போலேதான்! கணக்கிலே போனபரீக்ஷையில் 'இட்டா' வாங்கியாச்சு (வாஸ்தவத்தில் ரங்கசாமி நூறுக்கு அறுபது வாங்கியிருந்தான். நூற்றுக்கு நூறு வாங்காபோனல் 'இட்டா' போட்டான் என்றேதான் அவர் சொல்வது). சீ, மானங்கெட்ட கழுதை சிலேட்டுப் பலகையும் கணக்குப் புஸ்தகத்தையும் எடுத்து வா" என்று கர்ஜித்தார். ஒரு நாளுமில்லாமல் இப்படி ஸரஸ்வதி பூஜையன்றைக்கூட கணக்குப் போடவேண்டுமென்ற உத்திரவு பிறந்தவுடனே ரங்கசாமிக்குக் கண்ணில்ஜலம் கலகலவென்றுவந்தது. இதைந் கண்ட சுந்தரமய்யர் எட்டி ஒரு அறை அறைந்தார். ரங்கசாமி தகப்பனருக்குக் கண் சிவந்தது. 'அடியாத மாடு படியாது', குழந்தைகளைத் தடவிக்கொடுத்தால் படிப்பு வராது என்றெல்லாம் கேள்விப்பட்டிருந்தாலும், காரணமில்லாமல் ரங்கசாமி அடிபட்டதைக் கண்டு அவர் சினங்கொண்டு, அழுதுகொண்டிருக்கும் பையனை 'சரிதாண்டா, வாடா' என்று எரிச்சல் தொனிக்கும் குரலில் சொல்லிக் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வெளியே சென்ருர். ரங்கசாமி, மாமா மூஞ்சியை பார்த்துக்கொண்டே நகர்ந்தான். அவர் கண்ணில் ஒலிக்கும் துக்கத்துக்கும், ஏமாற்றத்துக்கும் அளவு சங்கையில்லை. அந்தப் பார்வை இன்றும் ரங்கசாமி ஐயர் மனதைவிட்டு அகலவில்லை.

சுந்தரமய்யர் காலஞ்சென்று எவ்வளவோ நாளாய்விட்டது. ரங்கசாமி ஐயருக்கு வினத் தெரிந்தபிறகு மாமனிடமிருந்த பயமும், அவர் அளவிலாக் கவிதையுடையவர் என்ற மூட நம்பிக்கையும் மாறிவிட்ட போதிலும், அவரிடத்தில் ஒரு தனியான பிரியம் ஜனித்தது. குழந்தைகளை நடத்தும் விஷயத்தில் சுந்தரமையர் வழியை முற்றிலும் அவர் தள்ளிவிட்டார். ஸரஸ்வதியிடத்தில் சுந்தரமய்யருக்கு இருந்த பக்தியையும், படிப்பில் அவர் கொண்ட ஏராளமான ஆவலையும் மட்டும் இவர் கைப்பற்றினர். அது காரணமாகவே, வேறு பூஜை புனஸ்காரங்களில் அதிக சிரத்தை யில்லாமலிருந்தும், இந்த ஸரஸ்வதி பூஜையைமட்டும் தவருு

மலும், சிரத்தைக் குறைவில்லாமலும் நடத்திவந்தார்.

இப் பழய சம்பவங்கள் ஞாபகத்துக்கு வரவே காலப்போக்கையும், மாறும் கொள்கைகளையும் எதுவும் வளர்ந்தழியும் இவ்வுலகில் அழிவில்லாமல் நிற்கும் அன்பையும் சிந்தித்து வெகுநாழி அசைவற்று உட்கார்ந்துகொண்டிருந்த அவர், காப்பி கொண்டுவந்த சமையற்காரன் குரலைக் கேட்டு, தூங்கி விழித்தவர்போல் சுற்று முற்றும் பார்த்தார். மாலை சாய்ந்து விட்டது. அறையில் இருட்ட ஆரம்பித்துவிட்டது. புஸ்தகங்கள் போட்டது போட்டாப்போலேயே கிடந்தன. "அப்பா, இதெல்லாத்தையும் தோட்டக்காரர் ராமசாமியை வைத்துக்கொண்டு ஷெல்புகளில் அடுக்கு, நான் வெளியே போரேன், என்று சொல்லிவிட்டு வேஷ்டியைக் கட்டிக்கொண்டு, குடித்துணியை மாட்டிக்கொண்டு 'அடே' நானும் வரேண்டா, எனக்கொரு ஸெட்டுக் கொடுங்கோ' என்று சொல்லிக்கொண்டே அடுத்த வீட்டு டேன்னிஸ் கோர்ட்டை அடைந்தார்.



# வாழும் வகை

(சுத்தானந்த பாரதி)

வாழும் வகையினைக் கேளீர்—இந்த
வையகக் கோயிலில் வாழ்வீர்...
சூழும் உயிர்க்குல மெல்லாம்—உங்கள்
சொந்த வுயிரெனக் கொள்வீர்.

கூட்டுக் கிளியினைப் போலே—பூதக்
கூட்டில் வளரும் சுத்தான்மா;
நாட்டி மனத்தை யதனில்—அது
நாளெனும் ஞானத்தில் வாழ்வீர் (வாழும்)

இதயக் குகைக்கனல் கொண்டே—வாழ்வை
இன்பக் கனலெனச் செய்தார்
சுதந்திர தீரர்க ளாவார்—அவர்
தொல்லுலகை முற்றும் வெல்வார். (வாழும்)

மலையிற் பிறக்கும் அருவி—இந்த
மண்வளமை பெறப் பாய்ந்தே
அலையிற் கலப்பதைப் போலே—உயிர்
ஆட்டமும் ஓட்டமும் ஆகும். (வாழும்)

இன்றிருப்போர் நாளை யில்லை—என்றே
ஏங்கியிருப்பவர் மூடர்...
நன்றிந்த வாழ்வை வளர்ப்போம்—ஓங்கும்
நற்கனிச் சோலையைப் போலே. (வாழும்)

அல்லியும் தாமரையும் போல்—இங்கே
ஆகும் இருவிகற் பங்கள்
வெல்லும் சமபுத்தி யாலே—ஆத்ம
வீரர் அமைதியைச் சார்வார் (வாழும்)

ஆக்க மழிவியல் பாகும்—இங்கே
அல்லும் பகலு மெனவே
பூக்கும் புதுமலர் போலே—நாம்
புன்னகை கொண்டுப் பொலிவாம்... (வாழும்)

ஆற்றலை நாளும் வளர்ப்போம்—நல்
அறிவினை மிக்க வளர்ப்போம்
கூற்றிற்கும் அஞ்சாமல் வாழ்வோம்—ஜீவ
கோடிக் கினியதைச் செய்தே. (வாழும்)

கல்வியும் வீரத் திறனும்—மானங்
காத்திடத் தக்க தொழிலும்
எல்லாரும் கற்றிட வேண்டும்—உழைத்
தேகோபித் துண்டிட வேண்டும் (வாழும்)

சாதிமத விவகாரம்—மனச்
சந்தையிடும் கூச்ச லாகும்
ஆதிப் பரம்பொரு ளொன்றே—அதில்
அன்புடன் கூடிச் செழிப்போம் (வாழும்)

# ரோஜா

(கு. ப. வெங்கடாசலம்)

தீராக்கவலை வாழ்க்கையிலே—மனம்
சிதைய இல்லற ஞானிபோல
கூரான முட்கள் பலசூழ—ரோஜா
கொஞ்சி மலர்ந்திடக் கண்டேனம்மா!

அந்த நிறத்தினைப்போல—என்றே
அந்தி வானத்திடையே பார்த்தேனம்மா!
சுந்தரமோ! சொல்லத் தரமுமுண்டோ?—அதில்
சொக்கி மதியுமிழந்தேனம்மா!

புன்னகை பூத்துத் தலை குனிந்தாள்—காற்றில்
புதுப்பெண் போலொரு ரோஜா நங்கை
என்னுள்ளங் கொண்ட நிலைமைதனை—இங்கு
எழுதிட என்னிடம் வார்த்தை இல்லை.

தேனைச்சொரிந்து கொடுத்தாளம்மா! அந்தச்
சின்ன வண்டினை அணைத்தாளம்மா!
கானத்தைச் சுற்றிப் பறந்திடுந் தும்பியின்
கன்னத்தில் தட்டி நகைத்தாளம்மா!

மங்கையர் ரோஜாவைக் கிள்ளிடுவர்—அதன்
மணத்தைத் தலையிலே சூடிடுவர்
பொங்கிய ஆசையில் ஆண்களுந்தான்—அந்தப்
பூவைப் பறித்துச் சுவைப்பாரம்மா.

ஏற்றத்தாழ்வான குணத்தினாலே—இங்கு
எத்தனையோவிதம் வாழ்வாரம்மா!
சீற்றஞ் சிறிது மில்லாமலே—ரோஜா
சிரிப்பதில் சாந்தி நிறையுதம்மா!

# "ஏமாற்றம்"

"கிருஷ்ணகுமாரி"

துரைசாமி எப்படிப்பட்ட மனிதனென்று கேட்டால் என்ன சொல்வது? உலகில் அவனைப் போன்றவர்கள் எவ்வளவோ பெயர்கள் இருக்கிறார்கள். ஆளைப் பார்த்தால் எப்பொழுதும் சுத்தமாய் வெகு நாகரீகமாயிருப்பான். ஒவ்வொரு நாளும் புதிதாய்ச் சலவை செய்த வேஷ்டி, சட்டைதான் அணிந்து கொள்ளுவான். கையிலோ எப்பொழுதும் ஸில்க் கைக்குட்டை, அதை எடுக்கும் பொழுதெல்லாம் அதிலிருந்து ஸெண்ட் வாசனை கம்மென்று வீசும்.

இவ்வளவிருந்தும் ஒருவரும் அவனை ரொம்ப மதிக்கவில்லை யென்றால் அது ஆச்சரியமல்லவா? அவனுடைய ஆடம்பரமான தோற்றத்தில் பிறர் கண்களுக்கு ஒருவித அற்பத்தனம்தான் வெளியாயிற்று. ரூபத்திலும் அவனிடம் கவனிக்கும்படியான அம்சம் ஒன்றுமில்லை. கட்டை குட்டையான உருவம். மூக்குப் பரந்து கண்கள் சிறுத்திருந்தன.

துரைசாமிக்கு 35 வயதிருக்கும். ஒரு ஜவுளிக் கம்பெனியில் மானேஜர் வேலையிலிருந்தான். ஆதியில் எவ்வளவோ சிரமப்பட்டு இப்பொழுதுதான் வியாபாரம் சற்று நல்ல ஸ்திதிக்கு வந்திருந்தது. ஆயினும் மானேஜர் என்ற ஹோதாவில் துரைசாமி காட்டிக்கொள்ளும் அமுத்தல் மட்டும் வெகு அதிகம். தானில்லாவிட்டால் கடையை மூடிவிட வேண்டியதுதான் என்பதுபோல் வெகு ஜம்பமாய் நடப்பான்.

அவன் டவுனிலுள்ள ஒரு கிக்கிடமான சந்தில் ஒரு சிறிய வீட்டில் குடியிருந்தான். கூட அவனின் தாயும், அவன் ஒரே தங்கையும்தானிருந்தனர். துரைசாமி கல்யாணம் செய்துகொள்ளவில்லை. அவன் மனத்தில்கூட அதைப்பற்றி அதிகக் கவலை கொள்ளவில்லை. வீண் தொல்லைச் செலவு அத்துடன் தன் சுயேச்சையையும் பாதிக்கக் கூடும். அப்படிப்பட்ட காரியத்தைச் செய்வதைவிட செய்யாதிருப்பதே மேலென்று கருதலானான். தான் வேலுசாமி கம்பெனி மானேஜராயிற்றே; இவ்வளவு கிக்கிடமான சந்தில் குடியிருப்பதா வென்றும் அவன் கவலைப் படவில்லை. ஏனெனில், தன்னை ஒருவரும் வீட்டில் வந்து பார்க்கும்படியாய் வைத்துக்கொள்ளும் உத்தேசம் அவனுக்குக் கிடையாது. அவனுடைய 75 ரூபாய் சம்பளத்தில் மாதம் 30 ரூபாய்தான் வீட்டுச் செலவுக்கென்று அம்மாவினிடம் கொடுப்பான். அந்த ரூபாயில்தான் அவனுக்குத் திருப்தியான சாப்பாட்டுடன் குடித்தனச் செலவு முற்றும் நடந்தாக வேண்டும். ஞாயிற்றுக்கிழமைகளில் மத்தியானம் வீட்டிலிருந்தால் நல்ல சிற்றுண்டிகள் பண்ணும்படி உத்தரவளிப்பான். இவ்வளவிற்கும் பணம் பற்றவில்லையே யென்று முணுமுணுத்துக் கொண்டே தாயார் செய்து போடுவாள். தங்கை சொர்ணத்திற்கு மட்டும் அப்படிப் பேசாமலிருக்க முடியாது. ஒழிந்த வேளைகளில் தானும் தன் தாயும் பலகாரங்கள் செய்து விற்று வந்த காசைக் கூடச் செலவு செய்யும்படி நேர்ந்தால், அவளுக்குக் கோபம் வராமல் என்ன செய்யும்? கோபம் தாங்காமல் ஒவ்வொரு நாள் அவள் நன்றாய்ச் சண்டை பிடித்து விடுவாள். ஆனால் அதற்காக துரைசாமி தன் மாமூலை மாற்றவில்லை.

சென்ற வருஷத்தில் சேர்ந்து குடியிருந்ததால் அவர்களுடன் நன்றாய்ப் பழக்கமாயிருந்த மரகதத்திற்கு அவனுடைய கருமித்தனத்தைக் கண்டால் சிறிதும் பிடிக்காது. அவளும் சொர்ணமும் தோழிகள். மரகதத்திற்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை.

"உனக்குப் பதில் நான் தங்கையாயிருக்க வேண்டும். அப்பொழுது தெரி

யும்" என்று அவள் சொர்ணத்தினிடம் அடிக்கடி சொல்லுவாள். இரண்டொரு வருஷங்களுக்கு முன்பு அவளைக் கல்யாணம் செய்து கொள்ளலாமென்ற ஒரு யோசனை துரைசாமிக்குச் சிறிதிருந்தது. ஆனால் வேலுசாமி கம்பெனி மானேஜராய் அந்தஸ்து உயர்ந்த பிறகு அவன் அந்த யோசனையை அகற்றி விட்டான்.

குடித்தனச் செலவுக்குக் கொடுத்தது போக பாக்கி ரூபாய் அவ்வளவையும் டாம்பீகமாய் உடையணிவதிலும் பாட்டுக் கச்சேரி, ஸினிமா முதலியவிடங்களுக்குச் சென்று உல்லாசமா யிருப்பதிலும் செலவழிப்பான்! ஏதாவது தன் கையிலிருந்து வீட்டுச் செலவின் நிமித்தம் கொடுக்கும்படி நேர்ந்து விட்டால் முதலில் கொடுத்த ரூபாயெல்லாம் எங்கு போயிற்றென்று தாயையும் தங்கையையும் கண்டபடி கோபித்துக் கொள்ளுவான்.

மரகதம் அவர்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவாள். துரைசாமியினிடமும் அவள் சகஜமாய்ப் பேசுவதுண்டு. கண்ணுக்கு லக்ஷணமாயிருந்ததுடன் அவள் சங்கோசமில்லாமல் பேசிப்பழகுவது அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆயினும் பணமில்லாத ஒரு ஏழைப் பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டு என்ன செய்வதென்று பேசாமலிருந்தான்.

ஒரு நாள் மாலை அவன் சிறிது சீக்கிரமாகவே வீட்டுக்குத் திரும்பிய பொழுது, மரகதம் சமயலறையில் உட்கார்ந்து மிகவும் உற்சாகத்துடன் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

"ஓஹோ! யார் மரகதமா?" என்று துரைசாமி உள்ளே எட்டிப்பார்த்துக் கேட்டான்.

"ஆமாம். அப்படித்தான் சொல்லிக் கொள்ளுகிறார்கள்" என்றாள் மரகதம் இடைவெட்டாய்.

"அடேடே! என்ன லாட்டரியில் ஏதாவது பிரைஸ் விழுந்து விட்டதா என்ன?

அதற்குப்பதில் மரகதம், சொர்ணத்தையும் அவள் தாயையும் பார்த்துச் சிரித்தாள். "வேடிக்கையில்லை. வாஸ்தவம் தான். லாட்டரி பிரைஸ் விழாமல் வேறு விதமாய்க் கிடைத்திருக்கிறது."

மரகதத்தின் பெரிய தந்தையொருவர் குழந்தைகளில்லாமல் இறந்து போனதால் அவர் உயில் பிரகாரம் ஒரு 5000 ரூபாய் மரகதத்தின் கல்யாண ஸ்ரீதனத்திற்கென்றுஅவளுக்குக்கிடைத்தது. அப்பணம் தகுந்தவிடத்தில் வட்டிக்கு விடப்பட்டிருந்ததால் நல்ல வட்டியும் வந்து கொண்டிருந்தது.

இச் சமாசாரத்தைத் திறந்தவாயுடன் கேட்டுக்கொண்டிருந்த துரைசாமி "அவ்வளவு பணத்தையும் வைத்துக்கொண்டு என்ன செய்யப்போகிறாய்?" என்று கேட்டான்.

"ஏன் நிறைய பணமிருப்பவர்களெல்லாம் என்ன செய்கிறார்கள்? பிறருக்கொன்றும் கொடுக்காமல் தாங்களே சந்தோஷமா யில்லையா? அம்மாதிரிதான் நானும் செய்யப்போகிறேன்."

அவள் யாரைச் சுட்டிச் சொல்லுகிறாளென்று துரைசாமிக்குத் தெரியும். சிரித்துக்கொண்டு பேசாம லிருந்துவிட்டான். இக் குத்தலான வார்த்தைகள் ஒன்றையும் அவன் லக்ஷ்யம் செய்யவில்லை.

அன்றிரவு வெகுநேரம் வரையில் அவனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. 5000 ரூபாய் ஆஸ்தி என்றால் லேசா? அப்பணமிருந்தால் எவ்வளவோ காரியங்களுக்குப் பிரயோசனப்படுமே! மரகதமும் லக்ஷணமான பெண். லக்ஷ்மி களை அவள் முகத்தில் நன்றாய்ப் பிரகாசித்தது. தன் உத்தியோகச் செல்வாக்கு அந்தஸ்து இவைகளைப் பார்த்து, நிச்சயம் மரகதமும் அவள் தாயும், தான் கல்யாணம் செய்து கொள்ளக் கேட்டால் சம்மதித்துவிடுவார்களென்று நினைத்தான்.

மரகதத்தின் தாய் சற்று நோயாளியாயிருந்தாள். அத்துடன் அவர்கள் குடியிருந்த வீடு தன் வீட்டிற்கு வரும் வழியிலிருந்தமையால் துரைசாமி உள்ளே நுழைந்து மிகவும் பரிவாய் விசாரிக்கத் தொடங்கினான். இவ்வாறு அநேகமாய்ப் பிரதிதினமும் செய்யலானான்.

ஒருநாள் மரகதம் "ஏது எங்கள் மேல் இவ்வளவு பக்ஷமாயிருக்கிறீர்கள்! அண்டை அயலிலிருப்பவர்கள் எல்லாரும் எங்களை லக்ஷ்யம் பண்ணி நீங்கள் வந்து

போவதைப்பற்றி ஆச்சரியப்படுகிறுர்களே!" என்றுள்.

இதைக்கேட்க துரைசாமிக்கு மிகவும் சந்தோஷமாயிருந்தது. ஒருநாள் மரகதம் அம்மாவிற்காக பழங்கள் வாங்கிவர வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தாள். துரைசாமி மறுநாள் வரும்பொழுது 5 ரூபாய் செலவழித்து ஆரஞ்சு ஒரு டஜன், ஆப்பிள் அரை டஜன், பம்பாய் திராட்சை 2 சேர் இவைகளை வாங்கிக்கொண்டு வந்தான். இவைகளுக்காக மரகதம் பணம் கொடுத்து விடுவதாகச் சொல்லுவாளென்று அவன் எண்ணியிருந்தான். ஆனுல் அவள் பேசாமலிருந்துவிட்டாள். இது அவனுக்குச் சற்று கோபத்தை உண்டாக்கியது. சொளேபோல் 5 ரூபாய் கையை விட்டுச் செலவழிந்தது அவனுக்கு இஷ்டமில்லே. போகட்டும்; 5000 ரூபாய் ஸ்ரீதனம் வருகிறதே அது பெரிதல்லவாவென்று நினைத்தான்.

மற்ருெருநாள் மரகதமும் அவள் தாயும் வருவதாயிருந்தால் அவ்விருவரையும் ஒருநாள் ஸினிமாவுக்கு அழைத்துச் சென்று காட்டி வருவதாக அவர்களிடம் கூறினுன்.

"ஆம். :நாங்கள் ஒன்றும் பார்த்ததேயில்லே. எப்பொழுது போய் வரலாம்!" என்று மரகதம் குதூகலத்துடன் கேட்டாள். "எங்களே மட்டுமல்ல; சொர்ணத்தையும்கூட அழைத்துப்போகவேண்டும்.

"சீசீ! சொர்ணம் என்னத்திற்கு? அவளுக்கொன்றும் தெரியாது. வீண் செலவுதான்." என்ருன் துரைசாமி.

சொர்ண மில்லாவிட்டால் தான் வர மாட்டேனென்று மரகதம் பிடிவாதம் பிடித்தாள். "நீங்கள் அவளேயும் அழைத்துப் போவதாயிருக்கிறீர்கள் என்று நான் நாளே அவளேக்கண்டு சொல்லிவிடுகிறேன். அவள் வேண்டாமென்று நீங்கள் வேடிக்கைக்குச் சொல்லுகிறீர்கள். எனக்குத் தெரியும்" எள்ருள் அவள் குழந்தை போல் உற்சாகத்துடன்.

துரைசாமிக்குச் சம்மதமேயில்லே. பல்லேக் கடித்துக்கொண்டு பேசாமலிருந்தான். எல்லாம் கல்யாணமாகும் வரையில் தானே; பொறுத்துக் கொள்வோமென்றிருந்தான்.

மறுநாட்காலே அவன் வெளியே கிளம்பும் சமயம் மரகதம் வந்து சமையலறையில் காரியமாயிருந்த சொர்ணத்தைக் கூப்பிட்டு "சொர்ணம் சனிக்கிழமை சாயந்திரம் உன்னேயும் என்னேயும் ஸினிமாவுக்கு அழைத்துப் போவதாக துரைசாமி மாமா சொல்லுகிறுர்" என்றுள்.

"வெகு அழகு! இந்த சர்வ கந்தலேக் கட்டிக்கொண்டு நான் எப்படிப் போகிறது?" என்றுள் சொர்ணம் சற்றுக் கோபமாய்.

"இது ஒரு பிரமாதமா? நல்லதாய் ஒரு புடவை வாங்கிக்கொண்டு விட்டால் போகிறது. எல்லாம் அண்ணு வாங்கிக் கொடுப்பார்" என்றுள் மரகதம்.

"ஓஹோ! யார் சொன்னுர்கள்?" என்ருன் துரைசாமி மெதுவான ஆக்ஷேபணேக் குரலில்.

ஆனுல் சிரித்தவண்ணம் மரகதம் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவேயில்லே. நான்கு ஐந்து ரூபாய்கள் போட்டால் பேஷான மில் புடவையாயிற்று. அதைச் சொந்த தங்கைக்கு வாங்கிக் கொடுக்க துரைசாமியைப்போன்ற ஸ்திதியிலிருப்பவர்கள் முடியாதென்றுல் யார் நம்புவார்கள்? இவ்வாறெல்லாம் பேசி அவள் அவனேச் சம்மதிக்கச் செய்து விட்டாள்.

"வா; இன்றே கடைக்குப் போய் உனக்குப் பிடித்த மாதிரியாய் இரண்டு புடவைகள் வாங்கிவந்து விடலாம். மாற்றிக் கட்டிக்கொள்ள இரண்டு புடவைகள் இல்லாவிட்டால் முடியாது." என்று அவள் சொர்ணத்தை அழைத்தாள்.

துரைசாமி கையைவிட்டு 10 ரூபாய்க்கு மேல் செலவாய் விடும் போலிருந்தது. அவ்வளவு செலவழிக்க அவனுக்குச் சற்றும் சம்மதமில்லே. ஆனுல் மரகதத்தின் முன்னிலேயில் அற்பமாய்க் காட்டிக்கொள்ளவும் அவனுக்கு விருப்பமில்லே. விதியேயென்று வேறு வழியில்லாமல் கொடுத்துத் தொலேத்தான்.

சனிக்கிழமை எல்லோரும் ஸினிமா சென்று வந்தனர். வேடிக்கை விநோத

மொன்றும் பார்த்தறியாத சொர்ணத்திற்கு அன்று ஓர் சிறந்த நாளாயிருந்தது. அதற்குப் பிறகு ஊரில் புதிதாய் என்ன வேடிக்கை விசேஷமிருந்தாலும் மரகதம் யோசிக்காமல் போய் வரலாமென்று சொல்லி விடுவாள். துரைசாமி அவர்களை யழைத்துக்கொண்டு போகும்படியாயிற்று.

ஒருநாள் மரகதம் தைரியமாய் அவனிடம் "இருந்தாலும் நீங்கள் வீட்டுச் செலவு விஷயத்தில் மிகவும் கண்டிப்பாய்த்தானிருக்கிறீர்கள். நீங்கள் கொடுக்கும் 30 ரூபாயை அவர்கள் எவ்வளவோ ஜாக்கிரதையாகக் காப்பாற்றிச் செலவு செய்கிருர்கள். நானுயிருந்தால் மாதம் 10 தேதியாவதற்குள் அவ்வளவையும் செலவழித்துவிட்டு நிற்பேன். இன்னும் பத்தோ பதினைந்தோ சேர்த்துக் கொடுப்பதில் உங்களுக்கு என்ன சிரமம்?" என்ருள்.

கேவலம் லோபகுணம் படைத்தவனென்று எண்ணி எங்கு தன்னைக் கல்யாணம் செய்துகொள்ள மரகதம் யோசிப்பாளோ வென்ற பயமெழுந்தது துரைசாமிக்கு. தான் கருமியில்லை; உதார சுபாவமுள்ளவனென்று காண்பிப்பதற்காக அவள் கூறியபடி செய்தான். துரைசாமியின் மாறுதலுக்குக் காரணம் மரகதம்தான் என்று சொர்ணத்திற்கும் அவள் தாய்க்கும் நன்ருய்த் தெரியும். எப்படியாவது விவாஹம் நடந்தேறிஞல் சரியென்று தாயார் நினைத்தாள். ஆனல் மரகதத்திற்கு அந்த உத்தேசம் சிறிதுமில்லை யென்று சொர்ணம் நன்ருய் அறிவாள்.

இப்படி யிருக்கையில் துரைசாமிக்குக் கடை முதலாளியினிடமிருந்த செல்வாக்கு திடீரென்று குறையத் தொடங்கிற்று. கொஞ்சநாட்களாய் வியாபாரம் சரியாய் நடக்காமலிருந்ததுடன் துரைசாமியும் சரியாய்க் கவனிக்கவில்லை யென்ற புகார் அவன்மீது ஏற்படவே முதலாளி அவனுக்குப் பதில் வேறொருவனை மானேஜராக நியமித்து அவன் கீழ்க்குறைந்த சம்பளத்தில் துரைசாமியை வேலை பார்க்கும்படி ஏற்பாடு செய்துவிட்டார். இது அவன் மனக்கோட்டையில் இடி விழுந்தது போலாயிற்று. இனிக் கல்யாண விஷயத்தில் தாமதம் செய்யலாகாதென்று உறுதி செய்துகொண்டான்.

மரகதத்தின் தாயினிடம் தன் எண்ணத்தைக் கூறினன். மரகதம் இஷ்டப்பட்டால் தனக்கும் சம்மதம் தானென்று அவள் கூறிவிட்டாள்.

"மரகதத்தின் தயவு எப்படியோ!" என்று துரைசாமி வேடிக்கையாய்க் கேட்பதுபோல் கேட்டான்.

"ஏன்? உமக்கு அவ்விஷயத்தைப்பற்றிச் சந்தேகம்கூட இருக்கிறதா?" என்ருள் மரகதம்.

"அதை நீதான் உன் வாய்ச் சொற்களால் தெளியவைக்க வேண்டும்" என்ருன் துரைசாமி ஆவலாய்.

மரகதம் சிறிது யோசித்தாள். அவன் செருக்கையடக்கி நன்ருய்ப் படியவைக்க வேண்டுமென்று அவளுக்கு ஆத்திரம் எழுந்தது.

"தன்னைச் சேர்ந்தவர்களிடம் நடந்துகொள்ளும் மாதிரியிலிருந்து ஒரு மனிதனுடைய சுபாவத்தை நாம் நன்ருயறிந்துகொள்ளலாமல்லவா? நீர் உமது தாயையும் தங்கையையும் நடத்தும் முறையைக் கண்ட பிறகு எந்த புத்தியற்றவள்தான் உம்மைக் கல்யாணம் செய்துகொள்ளச் சம்மதிப்பாள்? இனி அந்தப் பேச்சை எடுக்காமல் மரியாதையாய்ப் போய்ச் சேரும்"என்ருள்.

துரைசாமிக்கு அதைக் கேட்க யாரோ கன்னத்தில் பளீரென்று அறைவதுபோலிருந்தது. அவன் திகைத்து நின்றுவிட்டான். நாலைந்து மாதமாய் அவன் எதை நம்பி அவள் கூறியபடி யெல்லாம் கேட்டு அவ்வளவு செலவழித்தான்? இச்சிறுக்கி இப்படிச் செய்வாளென்று தெரிந்திருந்தால்? அவனுக்கு வந்த கோபத்திற்களவேயில்லை. ஆனல், பாபம்! அவன் என்னசெய்வான்! வாயில் வந்தபடி மரகதத்தையும் அவள் தாயையும் வைது தன் ஆத்திரத்தைத் தணித்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லாமற் போயிற்று.

# நகரமும் நாகரகனும்

(திவான் பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி)

நம்முடைய தேசமும் நாகரீகமும் பழமையானதால் அதன் விசித்திரத்தைப் புது நாகரீகச் செல்வமடைந்த மேல்நாட்டு விமர்சகர்கள் நன்கு அறிவதில்லை. அவசர ஆராய்ச்சியின் பயனுக ஏதாவது ஒன்றைக் குரங்குப் பிடியாக பிடித்துக் கொள்வதையே கைக்கொள்ளுகிறுர்கள். இந்தக் குறை நம்மவர்களுக்கும் இருக்கிறதென்றே சொல்லவேணும், இந்த மாதிரி குறுகிய மன முள்ளவர்களைப் பற்றித் தான் பகவத் கீதை 18-வது அத்தியாயம் 22-வது செய்யுளில் "ஒரு சின்ன சங்கதியையே முழு தத்துவம் என்று பிரமித்து அத்துடன் ஒட்டிக் கொண்டு யுக்தியாவது தத்துவ ஞானமாவது இல்லாமல் இருப்பது தாமஸ ஞானம்" என்று உரைத்திருக்கிறுர்.

நம்முடைய தாய் நாடு குக் கிராமங்களே நிறைந்த இடம் என்றும், நகரவாஸம் குறைந்த இடம் என்றும் சொல்வது ஒரு புது ஆராய்ச்சி வழி. இக்காலத்தில் மேநாட்டில் உள்ள பட்டணங்கள் போல் அல்ல நம்முடைய பட்டணங்கள். பெரிய இயந்திரங்களையும் ஆலைகளையும் நாட்டி, பெரிய ஜனக்கூட்டங்களை அங்கே திரட்டி, அவர்களுக்கு உரிமைகளாவது இன்பங்களாவது இல்லாமல் அவர்களை உயிரற்ற பொருள்களைப் போலவே உழைக்கச் செய்து பண்டங்களை அபரிமிதமாக உண்டாக்கி, ஏனைய நாடுகளிலெல்லாம் அவைகளைக் கொண்டு போய்த் தள்ளி, அந்நாட்டுத் தொழில்களை யெல்லாம் கொன்று அவைகளின் பணங்களை எல்லாம் கவர்ந்து தானும் கெட்டு பிறர்களையும் கெடுக்கும் நகரங்கள் இக்கால நகரங்கள். நம்முடைய தாய் நாட்டில் இருந்த நகரங்களோ, இக்கால நகரங்களைப்போல் தாய் நாட்டின் கிராமங்களையும் அன்னிய நாடுகளின் சாம்ராஜ்யங்களையும் அழிக்கும் நகரங்கள் அல்ல. கிராமங்களில் உற்பத்தியாகும் பொருள்களுக்குப் பண்டக சாலைகளாகவும், ராஜஸ்தானங்கள் தேவஸ்தானங்களாகவும், நாகரீக வளர்ச்சிக்கு இன்றியமையாத கோயில்களாகவுமே, அவைகள் இருந்தன. அவைகள் பெரிய கிராமங்களே. இக்காலத்தில் சொல்லப்பட்ட தோட்ட நகரங்கள் (garden cities) என்றே அவைகளைச் சொல்லவேண்டும். இக்காலத்தில் தொழிற்சாலைகளாகவும் வர்த்தக ஸ்தலங்களாகவும் இருக்கும் நகரங்களில் உள்ள நெருக்கடிகளும், அளவற்ற ஆசைகளும், தீமைகளும், பாவங்களும், கொடுமையான கோபதாபங்களும், அடிதடிகளும், அந் நகரங்களில் இல்லை.

அக்கால அரசாட்சி வரி வசூல் செய்யும் நோக்கத்துடன் மட்டும் இருந்தது என்று சொல்வது ஒரு பெரிய தவறு. அது அன்புடன் கூடி அரசன் நேராகக் கவனிக்கும் தன்மையுடனும் பொருந்தி இருந்த விஷயம், வெட்ட வெளிச்சமான விஷயம். இக்காலத்திய அரசாட்சியில் தான் எல்லாம் சட்ட திட்டம். அன்பே கிடையாது. சட்ட திட்டமும் சின்ன அதிகாரிகள் இஷ்டப் படியே பேசும். நியாயமயமாக இருப்பது போன்ற தோற்றம் வெளி மயக்கே. உதாரணமாக, கௌடில்யர் அர்த்த சாஸ்திரத்தைக் கவனித்தாலும் வாத்ஸ்யாயனர் காம சாஸ்திரத்தைக் கவனித்தாலும் இந்தத் தத்துவம் நன்கு விளங்கும். அறம், பொருள், இன்பம், வீடு என்று நான்கு நோக்கங்களில் நம்மவர்கள் எப்பொழுதும் அறம் வீடு என்ற இரண்டே பெரிது என்று நினைத்து அவைகளையே கவனித்து மற்ற இரண்டையும் மறந்தார்கள் என்று சொல்வது ஒரு பெரிய தவறு. அர்த்த காமங்களை நம்மவர்கள் மறக்கவில்லை. தர்மத்திற்கு விரோதமில்லாமலும், கடவுளிடம் அன்புக்கு ஹானி இல்

லாமலும் அவைகளைப் பரிபாலித்து வந்தார்கள். கௌடில்யர் சொல்லும் அரசாட்சியைக் கவனித்தால் அதில் அரசியல் அங்கமான சூத்ராத்யக்ஷர் (நூல் நூற்றல் நெசவு அதிகாரி) விதவைகள், ஏழைப் பெண்கள், வயது சென்ற பெண் பிள்ளைகள் நூற்கும் நூலையும், நெய்யும் சேலைகளையும், சரி பார்த்துப் பணங் கொடுத்து வாங்கும் வேலையுள்ளவர். வாத்ஸ்யாயனரும் அப்படியே சொல்லி இருக்கிறார். இக்காலத்திய அரசியல்களில் இந்த முறையைத் தழுவினால் நம்முடைய நாடு முன்னேற்ற மடைவது திண்ணம்.

நாகரகன் என்றால் நகரவாசி, நயமும் நாகரீகமும் உள்ளவன். நல்ல பயிற்சிகளால் மெருகிடப்பட்ட தன்மையுள்ளவன். அத்தகைய மனிதன் கிராமங்களில் இருந்தாலும் தன்னுடைய இயற்கையை இழக்கமாட்டான். அவ்விடங்களிலும் கிராமத்திலுள்ளவர்களுடன் நெருங்கிப் பழகி அவர்களுக்கு ஒற்றுமையையும் ஊக்கத்தையும் அளித்து நகரங்களில் உள்ள நல்ல பழக்க வழக்கங்களில் அவர்களைப் பழக்கி வைப்பான் என்று வாத்ஸ்யாயனர் சொல்லுகிறார் (காசிப் பதிப்பு, 57-ம் பக்கம்.)

வாத்ஸ்யாயனர் காமசூத்திரத்தில் நாகரகனுடைய தினசரி வழக்கங்கள் நேர்த்தியாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. அவனுடைய வீட்டை அவன் அழகாக அமைத்து அதை அவன் துய்மையாகவும் சிங்காரமாகவும் வைத்துக்கொண்டிருப்பான். அதிலுள்ள நாற்காலி, ஊஞ்சல் முதலிய தட்டுமுட்டுச் சாமான்கள் மனோகரமாக இருக்கும். வீட்டில் கிணறு அல்லது குளம் இருக்கும். பூச்செடிகளும் காய் கறிச் செடிகளும் மருந்துச் செடிகளும் உள்ள தோட்டம் இருக்கும். அதில் உட்கார மேடைகளும் ஊஞ்சல்களும் இருக்கும்.

இப்படி அழகு நிறைந்த வீட்டில் மிகவும் அழகும் தூய்மையும் நிறைந்த இடம் அந்தப்புரமே (பெண்கள் இருக்கும் இடம்.) சமையல் அறை மிகவும் குளிர்ச்சியும் காற்றுப்போக்கு உள்ளதாகவும் இருக்கும். தலைவி அதை மிகவும் சுத்தமாகவும் மனோகரமாகவும் வைத்துக் கொள்வாள். எல்லாவற்றைக் காட்டிலும் சௌந்தர்யமும் பரிசுத்தமும் நிறைந்த இடம் தேவபூஜை செய்யும் இடமே. அதை அலகிட்டுக் கோலம் போட்டுக் குளிர்ச்சியாகவும் மலர்கள் நிறைந்ததாகவும் நித்ய அகண்ட தீபப் பிரகாசம் உள்ளதாகவும் செய்ய மனைவி குதூகலம் கொண்டிருப்பாள்.

படுக்கை அறையும் வெகு அழகாக இருக்கும். இரண்டு கட்டில்கள் இருக்கும். அவைகளில் மிருதுவான படுக்கைகளும் தலையணைகளும் வெண்மையான விரிப்புகளும் இருக்கும். கலவைச் சந்தனமும் பரிமள திரவ்யங்களும் புஷ்பமும் தாம்பூலமும் இருக்கும். வீணை முதலான சங்கீத வாத்யங்கள் இருக்கும். சதுரங்கம் முதலான விளையாட்டுக் கருவிகள் இருக்கும். இது தவிர இஷ்டதேவதையின் சுந்தரப்பிரதிமை இருக்கும். அறைக்கு வெளியில் பறவைக் கூண்டுகளில் கிளி மைனா முதலிய பறவைகள் இருக்கும்.

காலையில் தூங்கி எழுந்தவுடன் சூர்யோதயத்துக்கு முந்தியே நாகரகன் பல்லை விளக்கி முழுகிக் கடவுளை வணங்கி நல்ல உடையையும் பரிமள திரவியங்களையும் அணிந்துகொள்வான். அழகிய மோதிரம் முதலிய ஆபரணங்களையும் அணிந்துகொள்வான். க்ஷௌரம் நாலு நாட்களுக்கு ஒருதரம் செய்துகொள்வான். கை நகங்களை அழகாக கத்தரித்துக்கொள்வான். வியர்வையைத் துடைக்கக் கைக்குட்டை (கர்ப்படம்) வைத்துக் கொண்டிருப்பான்.

போஜனத்துக்குப் பிறகு சிரம பரிகாரம் செய்துகொண்டு மாலைப் பொழுதில் வேடிக்கையாகக் காலங்கழிப்பான். பாட்டுக் கச்சேரியோ நாடகமோ பரத நாட்டியமோ அவனுக்கு மிகவும் பிரியம். நல்ல நண்பர்களுடன் காவியங்கள் படிப்பதிலும் நூல்கள் ஆராய்ச்சி செய்வதிலும் அவனுக்கு எப்பொழுதும் குதூகலமாக இருக்கும் அவனுக்கு வடமொழியிலும் தாய்மொழியிலும் பிரியமும் தேர்ச்சியும் இருக்கும்.

" நாத்யந்தம் ஸம்ஸ்க்ருதேனைவ
நாத்யந்தம் தேச பாஷயா !
கதாம் கோஷ்டீஷு கதயன்
லோகே பகு மதோ பவேத் ! !

நகரங்களிலும் நாகரகனுடைய நல்ல பழக்க வழக்கங்களால் தான் கலை வளர்ச்சி ஏற்படும். காவியக் கலையும் ஓவியக் கலையும் சங்கீதக் கலையும் நாட்டிய நாடகக்கலைகளும் சீராகவும் சிறப்பாகவும் இருக்க வேண்டுமேயானால் ஜனங்களுக்கு அவைகளில் உணர்ச்சியும் ஊக்கமும் ருசியும் இருக்க வேண்டும். அவைகளின் இன்பச்சுவையே தெரியாமல் ஜனங்களின் வாழ்க்கை ஏற்பட்டால் அவைகள் மேன்மை அடைய முடியாது. நாகரீக சோபையும் குன்றிக் கொண்டேவரும். கலையும் கல்வியும் கடவுளிடம் அன்பும் நாகரீக உயிர்நிலை என்று நாம் உணர்ந்து அவைகளை நன்றாக வளர்ப்பதே நம்முடைய கடமைகளில் முதன்மையான கடமையாகும்.

---

# எதிர்பாராதது

" குகப்ரியை "

" ஏய்! உன்னைத்தான். இங்கே எழுந்துவா." என்று உறுமினார் வக்கீல் பக்ஷிராஜய்யங்கார்.

" ஏன்! என்னவாம்? அடுத்த எலெக்ஷனைப்பற்றி யோசனையோ? என்று வெகு அலட்சியத்துடன் கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தாள் சம்பகம்மாள்.

" வேறொன்று மில்லா விட்டாலும் வாயாவது இருக்கிறதே வட்டியும் முதலுமாய்ச் சேர்த்துப் பேச. இந்தா! இதை நீயே படித்துப் பார்! என்று ஒரு கடிதத்தை வீசி யெறிந்தார் பக்ஷிராஜய்யங்கார்.

அதைக் கையிலெடுத்துக்கொண்டே பிரித்துப் பார்க்காமல் "ஏன்? என்ன சங்கதி" என்று கேட்டு விட்டாள்.

" உனக்குச் சொல்வதற்கு மனிதனால் முடியாது. தெய்வந்தான் வரவேண்டும்" என்று எரிந்து விழுந்தார் ஐயங்கார். அம்மங்கார் பயந்து உள்ளே போய் விட்டார்.

* * *

பக்ஷிராஜய்யங்கார் என்றால் சென்னையில் தெரியாத மனிதரே கிடையாது. அவ்வளவு பெயர் பெற்ற வக்கீல். கொழுத்த வருமானம். ஆனால் பண விஷயத்தில் சாக்ஷாத் பக்ஷிராஜனைவிடக் கூர்மையான திருஷ்டி. சுபாவத்திலேயே கொஞ்சம் கருமி. என்ன இருந்தாலும் மனிதன் தானே. கொஞ்சம் பதவி பட்டம் விஷயங்களில்...அப்படி இப்படி பணத்தை வாரி இறைப்பார் என்பது ஊரறிந்த ரகசியம்.

சம்பக லக்ஷ்மி அம்மாளுக்கு இந்த விஷயங்கள் கட்டோடு பிடிக்காது. எலெக்ஷன் விஷயம் நீங்கலாக மற்றப்படி எதிர் நின்று கூடப் பேசமாட்டாள். அவ்வளவு பயந்த சுபாவம். பரம சாது.

பிள்ளையாண்டான் ரங்கசாமி பி. எல். வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். சமீபத்தில் தான் சப் ஜட்ஜ் அப்பளாச்சாரியார் குமாரி சௌ. வாஸந்தியைக் கொடுப்பதாய் நிச்சயமாகி யிருந்தது, பையன் கொஞ்சம் தற்காலம். புத்த புதிய உடுப்புகள். புதிய மாடல் கார். வீட்டிற்குப் புதிய முறையில் அலங்காரம் இவைகளிலெல்லாம் விருப்பம்.

ஐயங்காரோ தான் முதல் முதல் வக்கிலாய்த் தொழில் ஆரம்பித்த சமயத்தில் வாங்கிய பழைய நேபியர் காரிலேயேதான் போக வேண்டு மென்பார். மீறி யாராவது கேட்டால் " நீங்க என்னமோ நெனச்சிண்டிருக்கேள் ஸார். இந்தக் கார் வாங்கினப்புறம் தான் ஸார், நம்ம அதிருஷ்டச் சக்கரம் சுற்ற ஆரம்பிச்சுது. அதிருஷ்டக் கார் ஸார்" என்பார். அவரிடமே ஜூனியராயிருக்கும் சில அப்பாவி வக்கீல்கள்

அவருடைய காருக்காக அதிக விலை கொடுக்கவும் தயாராயிருந்தார்கள். பாவம்! சங்கதி அவர் காது வரையில் எட்டவில்லை. தெரிந்திருந்தால் கொழுத்த லாபம் தட்டி யிருப்பார்.

சம்பக லக்ஷ்மி அம்மாள் தங்கமான சுபாவம். அகத்துக்காரருடைய கருமித்தனத்துக்கும், மூர்க்கத்தனத்திற்கும், பிள்ளையினுடைய டம்பாசாரித்தனத்திற்கும் நடுவில் அகப்பட்டுக் கொண்டு தவிப்பாள், பிள்ளை ஒரே பிள்ளை. அதிலும் செல்லப் பிள்ளை. கலியாணமும் நிச்சயமாகி யிருக்கிறது. பெண்ணோ சிநேகிதனின் தங்கை. அவர்கள் வீட்டில் வருஷத்திற் கொருமுறை புதிய மாடல் கார் வாங்கி விடுவார்கள்.

ரங்கசாமிக்கோ தானும் புத்தப் புதிய காரில் போய் பீச்சிலே அவர்களிறங்குமிடத்திற்குச் சமீபத்திலிறங்க வேண்டுமென்று ஆசை. அம்மாவிடம் ஆனமட்டும் சொல்லிப் பார்த்தான். அந்த மந்திரத்திலெல்லாம் மாங்காய் விழுந்து விடுமா? அதுவும் பக்ஷிராஜய்யங்காரா அசைகிறவர்? ஒரு நாள் நேரில் கேட்டும் பார்த்தான். ஐயங்கார் விசுவ ரூபம் எடுத்து விட்டார். பிறகு—அவ்வளவு தான்.

அதிலிருந்து தந்தையும் மகனும் ஒருவரோடொருவர் பேசுவதில்லை. ஒன்றாய்ச் சாப்பிடுவதில்லை என்று குமாஸ்தா ராமுவும் டிரைவர் தம்புவும் "கசு கசு" வென்று பேச ஆரம்பித்தார்கள். விஷயம் நிஜமோ! பொய்யோ! நமக்கென்ன தெரியும்?

* * *

"நாசமாய்ப் போக! எவன் செய்த வேலை இது? பெரிய கிரகசாரமாயிருக்கிறது. முதலில் கவர்னருடைய பதில், பிறகு வரிசை வரிசையாய் வந்து கொண்டே இருக்கிறதே! இதென்ன இழவு. பேரிழவாய்ப் போச்சு. டீக்கி கட்டாயம் வருகிறார்களாம். என்ன கஷ்டமோ? ஒன்றுமே புரிய வில்லையே. சரி எதற்கும் இந்தச் சனியனை அனுப்பித் தெரிந்து கொண்டுவரச் சொல்லுவோம்" என்று முணு முணுத்தவராய் "ஏய்! சொம்பு! சொம்பு!!" என்று மிகுந்த அகங்காரதுடன் கூவினார் ஐயங்கார்.

மறுவிநாடி ஸ்ரீமதி சம்பகலக்ஷ்மியம்மாள் பிரஸன்னமானாள்.

"உன் சிநேகிதி கமலா வகத்துக்குச் சமீபத்தில் போயிருந்தாயா?"

"நேற்றுத்தான் போனேன். நேற்றே அவள் கேட்டாள். எனக்குத்தான் தலைகாலே புரிய வில்லை. வீட்டிலேயே நடக்கும் விஷயம் கூட எனக்குத் தெரியவில்லை என்று பரிகாசம் செய்யப் போகிறாளே என்று கேட்டதற்கெல்லாம் ஒன்றிலும் ஒட்டாமல் 'ஞுஞுமிஞு' என்று ஏதோ பதில் சொல்லி வைத்தேன். எனக்குத் தகவலில்லாமலே இந்தகத்தில் எல்லாக் காரியங்களும் நடக்கிற வழக்கம் என்று நானே தம்பட்டம் கொட்ட வேண்டுமா? கொண்டவன் தூற்றினால் கூரையும் தூற்றும் என்று பாட்டி சொல்லுவாள். அதைத் தினம் நூறு தடவையாவது நினைக்கத் தான் வேண்டி யிருக்கிறது."

"போயிருந்தாயா? என்று தானே கேட்டேன். வாயைத் திறப்பதற்குள் பல்லைப் பிடுங்கி விடுவேன் என்கிறாயே! என்ன சொன்னாள் அதைச் சொல்லித் தொலையேன்" என்று கொஞ்சம் குறைந்த ஸ்தாயியில் சொன்னார் ஐயங்கார்.

"என்னடீ சம்பகம்! நாளை ஞாயிற்றுக்கிழமை உங்காத்திலே கவர்னருக்கு டீ பார்ட்டியாமே? என்னண்டை சொல்லக் கூடாதா? என்று கேட்டாள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. எப்படியோ சமாளித்துக் கொண்டு ஏதோ தெரிந்தவள் போல் பேசி வைத்தேன். பின் என்ன செய்கிறது. இந்த வீட்டிலே நான் புழுக்கைச்சிக்கு சமானம். நாய் குலைக்கிறதும் சரி என் வார்த்தையும் சரி—" என்பதற்குள்

"அந்த இழவைத் தான் நானும் கேட்க வந்தேன். நான் பார்ட்டியும் வைக்கவில்லை, ஒரு மண்ணும் வைக்கவில்லை. எந்த நாசகாலிப்பயலோ என் பெயரை வைத்துக் காகிதம் எழுதி கவர்னருக்கே முதல் அனுப்பி எல்லோரிடமிருந்தும் பதிலும் வந்திருக்கிறது. அந்த 'வரகு' இருக்கானே அவன் வேலையாய்த்தான் இருக்க

வேண்டும். போன எலெக்ஷனிலே அவன் வேண்டுமென்றேதான் ரோஜாப் பூ மாலேயும் கழுத்துமாய் நம்ம தெருவோடு ஊர்கோலம் போனுன். அதுவும் இப்பொழுது ராவ்சாகிப் வராகஸ்வாமி ஆய்விட்டாரோ இல்லேயோ தலேகால் புரியவில்லே! அவன் தான் செய்திருப்பான். இருக்கட்டும். பார்க்கிறேன் ஒரு கை! கெட்டிக்காரன் புளுகு எத்தனே நாள்?

"சரிதான்னு! எலெக்ஷன் எலெக்ஷன் என்று பிராணனே விட்டுக்கொண்டு, வீண் பொருமையும் சண்டை சச்சரவும் தான் மீதி. என்ன வேண்டிக் கிடக்கிறது! அங்கே போய் ஏறி உட்கார்ந்து கொண்டு புரட்டுகிறதை இங்கே செய்ய முடியாதா? நீங்களும் தான் பத்து வருஷமாய்ப் பணத்தை வாரி வாரி இறைத்தீர்கள். என்ன லாபம்? வீணுய் வராகசாமி பெயரை ஏன் இழுக்கிறீர்கள்? அவனேக் காங்கிரஸார் பார்த்து நிற்க வைத்தார்கள், ஜயித்தான். உங்களேப் போய்ப் பச்சைப் பெட்டிக்கு யார் நிற்கச் சொன்னுர்கள்? மனுஷனுக்கு நிஜமாய்ப் 'பவிஷி' ருந்தால் தானே வருகிறது இந்தப் பட்டமும் பதவியும்! இந்தக் கொம்பு தம்பட்டங்களெல்லாம் வேண்டுமா என்ன?

"சீசீ, அதிகப்பிரசங்கி. உன்னேத் தான் கேட்டார்கள்" என்று சீறினுர் பக்ஷி ராஜய்யங்கார்.

"கேட்டாலும் சரி, கேட்காவிட்டாலும் சரி, கடுதாசி போய் எல்லோரிடமிருந்தும் பதிலும் வந்து விட்டது. மேல் நடக்க வேண்டியதைப் பாருங்கோ, அந்தமட்டும் இன்னும் கேவலமாய் மூக்கறுக்காமல் "ஆர். எஸ். வி. பி." யாவது போட்டிருக்கானே, அதுவே பரம சந்தோஷம்!" என்று சொல்லிக் கொண்டே திரும்பினுள் சம்பகலக்ஷ்மியம்மாள்.

ஐயங்கார் மிகவும் தணிந்த குரலில் "சொம்பு! நீ கமலா வகத்துக்குப் போய் அந்தக் கார்டு எங்கேயாவது கிடந்தால் எடுத்துக் கொண்டு வா. எந்த அச்சாபீஸ் என்று பார்த்து அங்கே போய் விசாரிக்கலாம்" என்று மிகவும் கெஞ்சலாய்க் கேட்டார்.

"போகிறேன். ஆனுலும் தற்செயலாய்க் கிடைத்தால் தானுண்டு. இல்லாவிட்டால் அவளேப் போய்க் கேட்கிறதா? அதுவும் அவர்கள் வீட்டில் "ஆனந்த விகட"னே அட்டையோடிராது! அது எந்தக் குப்பைக் கூடைக்குப் போயிருக்குமோ?

"வேறு ஒருவர் வீட்டிலிருந்தும் கிடைக்காது. வெளியிலே தெரிந்தால் வெட்கக் கேடு. எதற்கும் பொன்னுசாமியை வையாபுரிப் பிள்ளே வீட்டிற்கு அனுப்பு......வேண்டாம், வேண்டாம், நானே நேரில் போகிறேன்" என்று சொல்லியவராய் "அடே! பொன்னுசாமி" என்று உச்ச ஸ்வரத்தில் கூப்பிட்டார் ஐயங்கார்.

வெகு அடக்கத்துடன் வந்து நின்ருன் பொன்னன். "அடே! பொன்னு! நாளே ஞாயிற்றுக்கிழமை நம்ப பங்களாவிலே கவர்னருக்கு 'டீபார்ட்டி' தெரியுமா? தோட்டக்காரனேத் தோட்டத்தை ஒழுங்காய்ச் சுத்தம் செய்யச் சொல்லு. பாணும் பட்டு ஜமீன்தார் வீட்டிற்குப்போய்க் கொஞ்சம் நல்ல தினுசு குரோட்டன்கள் கொண்டுவா, வேறு ஒருத்தனேயும் அனுப்பாதே நீயே போ. ஏய் சொம்பு! எங்கே அந்தக் கவர்னர் காகிதத்தை எடு. எத்தனே பதில் வந்திருக்கிறது எண்ணித் தொலே. கவர்னர் கடிதத்தில் என்ன போட்டிருக்கிறதோ பார்ப்போம்."

"என்னத்தைப் பார்க்கிறது. உங்களுடைய அழைப்புக்கு வந்தனம். மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் வந்து சேவை தந்து உங்களேக் கிருதார்த்தராக்கிவிடுவதாக ஒப்புக்கொண்டார். வேறென்ன வேண்டும். நேரே மோக்ஷம்தான். என்று முணகிக்கொண்டே போய்விட்டாள் சம்பகம்மாள்.

"என்ன முணுமுணுப்பு" என்று எரிந்து விழுந்தார் ஐயங்கார். "முணுமுணுப்பானேன். ஸ்பஷ்டமாய்த்தான் சொல்லுகிறேன் நீங்கள் நிஜமாய்த்தான் சொல்லுகிறீர்களோ என்னே அளப்பறியத்தான் சொல்லுகிறீர்களோ. யார் கண்டார்கள்" என்று சொல்லும் பொழுதே முன்பு ஒருசமயம் திவான்

பகதூர் பட்டம் கிடைத்துவிட்டதாகவும் வீர ஆஞ்சநேயர் சன்னிதியில் அர்ச்சனை செய்வதாகவும் வடை மாலை சாற்றுவதாகவும், திவான்பகதூர் பக்ஷிராஜய்யங்கார், பரணி நக்ஷத்திரம் வாதுலகோத்ரம், கும்பலக்னம், என்று உளறிக்கொண்டே இவர் எழுந்ததும் நினைவுக்குவரத் தன்னையும் மீறிக் 'களுக்' கென்று சிரித்துவிட்டாள் சம்பகம்மாள்.

"ஓகோ! யார் கண்டார்கள் என்கிருயே! எனக்குத்தான் விஷயமே புரியாமல் தவியாத் தவிக்கிறேனே! அந்தப் பைத்தியத்தை யெல்லாம் தொலைத்துத் தலைமுழுகி எந்த யுகமாயிற்று? இன்னும் என்ன பாக்கி? வேண்டியது தொலைத்தாயிற்று. அதற்கெல்லாம் 'கொசரு' போலிருக்கிறது ஹூம்! என்று பெருமூச்செறிந்தார் ஐயங்கார்.

* * *

பக்ஷிராஜய்யங்காருக்குச் சின்ன சமாசாரமே தெரியாது. எல்லாம் பெரிய சங்கதிதான். பார்ட்டி ஏக தடபுடல். கேட்கவேண்டுமா? ஆனுல் பாவம்! அவர் முகத்தில் ஈயாடவில்லை. ஏதோ அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு வந்தவர்களை உபசரிப்பதில் ஈடுபட்டிருந்தார். சம்பந்தியாக வரப்போகிறவர் முதலிலேயே வந்து உபசரிப்பதில் கலந்துகொண்டார். ஆனுல் ரங்கசாமி அந்த வழியே எட்டிப் பார்க்கவில்லை. ஐயங்காருக்கு உள்ளூறப் பிள்ளையாண்டான் பேரில் அசாத்ய கோபம். அதற்கேற்றாற்போல சம்பந்தியும் "எங்கே ரங்கசாமியைக் கண்ணிலேயே காணேம்?" என்று கேட்டு விட்டார்.

"இங்கே தானிருப்பான்" என்று வெகு அமர்த்தலாய்ச் சொல்லிவிட்டு, அவர் பிள்ளையிடம் "எங்கேயடா உன் சினேகிதன், சீக்கிரம் டிரஸ் பண்ணிக் கொண்டு வரச் சொல்லு. நேரமாய்விட்டது. கவர்னரும் வரலாயிற்று" என்ருர்.

பாவம்! அவன் ஒன்றும் புரியாதவனுய் ரங்கசாமியை அழைத்துவர ஓடினுன். தோட்டத்தின் நடு மண்டபத்தில் புல்லாங்குழல் கச்சேரி ஆரம்பித்து நடந்துகொண்டிருந்தது. முக்யமாய்ப் பத்துப் பதினைந்து பெயர்கள் கவர்னருடன் ஒரு பெரிய மேஜையில், மற்றவர்கள் சற்று எட்டி நாற்புறங்களிலுமுள்ள சிறு சிறு மேஜைகளிலும் உட்கார்ந்து ஆனந்தமாய்ச் சாப்பிடத் தொடங்கினுர்கள்.

டாங் டாங்கென்று மணி ஆறடித்தது. அந்த மேஜையினருகிலேயே எழுந்து நின்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார் கவர்னர் பெருமான். ஆரம்பத்தில் எதையாவது சொல்லித் தொலைக்கக் கூடாதா? "இன்று எதன் பொருட்டு இந்தத் தேக் கச்சேரி நடைபெற்றது? என்று சாக்ஷாத் பக்ஷிராஜய்யங்காரையே கேட்டுவிட்டார் கவர்னர்.

பக்ஷிராஜய்யங்கார் பாவம்! பரமசங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டார். அந்த நெருக்கடியான நிலைமையில் என்ன பதில் சொல்லுவதென்று அவருக்குத் தோன்றவேயில்லை. ஒரு நிமிஷம் திகைத்தார். கொஞ்சம் சமாளித்துக்கொண்டு இன்று எனக்கு 50-வது பிறந்த நாள் என்று ஒரு சரடு விட்டார். ரங்கசாமியின் முகத்தில் இளமுறுவல் சற்றே அரும்பி மறைந்தது. தலையைக் குனிந்துகொண்டான். தன்னுடைய சமயோசிதமான பதிலுக்காக மனதிற்குள் தானே ஆனந்தப் படலானுர் ஐயங்கார்.

* * *

சாயங்காலம் ஐந்து மணி. சம்பகம்மாள் பூத்தொடுத்த வண்ணம் தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்தாள். ரங்கசாமி தலையைப் படிய வாரி விட்டுக்கொண்டு கைப்பிரம்பைச் சுழற்றிய வண்ணம் பீச்சுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். கட கட —பட பட வென்று கர்ஜனை செய்துகொண்டு கார் வந்து நின்றது. அதிலிருந்து சிரித்த வண்ணம் கீழே இறங்கினுர் ஐயங்கார். சம்பகம்மாள் திகைத்துவிட்டாள். ஒரு நாளாவது கோர்ட்டிலிருந்து வரும்பொழுது இவ்வளவு பிரஸன்னமாய்க் காட்சியளித்ததில்லை. "ஏன்? என்ன சங்கதி?" என்று கேட்டுக் கொண்டே எழுந்தாள் சம்பகம்மாள்.

ஒன்றுமில்லை அவாத்திலே யிருந்து 'பழம் பாக்கு வெற்றிலை' கொடுக்க

என்றைக்கு சௌகரியப்படும் என்று கேட்டனுப்பினார்கள். நீ என்ன சொல்லு கிறாய்?"

"சொல்லுகிறதென்ன? நாளை வெள் ளிக்கிழமை நாள் நன்றாயிருந்தால் வைத்துக் கொள்ளலாமே."

"அதனால்தான் சொன்னேன். இந்தத் தடவை இராஜா பிறந்த நாள் ஜாபிதாவில் எனக்கு திவான்பகதூர் பட்டம் கொடுக் கப் போகிறார்களாம். சம்மதம் கேட் டிருக்கிறார்கள்."

"ஓகோ! சரிதான். அதுதான் இன்றைக்கு இவ்வளவு 'குஷி'யாய்ச் சிரித்துக்கொண்டே வந்தீர்களோ?" என்று விஷமச் சிரிப்புடன் சொன் னாள் அம்மாள்.

"முதலில் உன் பிள்ளை கலியாணத் தைப்பற்றிச் சொல்லிவிட்டுத்தானே இதைச் சொன்னேன்?"

"ஆனால் கலியாணக் கார்டிலேகூட என் பிள்ளை என்று தான் குறித்திருக் குமோ?"

"சரிதான் போ! அதிகப் பிரசங்கி" —என்று கொஞ்சலாய்க் கூறிய வண்ணம், உள்ளே நுழைந்தார்.

"என்ன இருந்தாலும் வாஸந்தி அதிருஷ்டசாலிதான்" என்றாள் சம்பகம் மாள்.

* * *

அதேசமயத்தில் யாராவது க்வீன் மேரீஸ் காலேஜிற்கு எதிரிலுள்ள பீச்சிற் குப் போயிருந்தால், ரங்குவும், வாஸந்தி யும் கோபுவும் மணலில் அலைந்துகொண் டிருப்பதையும் "ஏ கொனஷ்டை! கார் வாங்கமாட்டேனென்றாயே என்று டீ பார்ட்டி நடத்தினாயே, பார்த்தாயா? திவான்பகதூர் வந்துவிட்டது!" என்று சொல்லுவதையும், இது உண்மையா? என்று கேட்பதேபோல் வாஸந்தி ரங்குவை விஷமத்தனமாய்ப் பார்ப்பதை யும் பார்த்திருக்கலாம்.

சுபம்.

---

# தொட்டில்

எழுதியவர் (மஞ்சேரி ஈஸ்வரன்)

மொழி பெயர்த்தவர் (டாக்டர் வே. ராகவன்)

எண்ணெயையேகாணமல் வீடு கட்டின போது அடித்த நிலையிலேயே இருக்கும் இரண்டு இரும்புக் கொக்கிகளிலிருந்து தொட்டிலொன்று தொங்கிக் கொண் டிருந்தது. மிகப்பழைய தொட்டில். முதலில் பர்மா தேக்கு மரத்தில் செய்யப் பட்டிருந்தும் நாளடைவில் மரம் விழுந்து போன விடங்களில் கள்ளிப் பலகைத் துண்டுகளால் அடைக்கப்பட்டும், இரும் புக் கம்பி விழுந்த விடங்களில் முறுக்குக் கயிற்றால் பின்னப்பட்டு மிருந்தது. மிஞ்சி நின்ற தேக்கு பாகங்களில் குழந்தை களின் சிறு அங்கங்கள் புரண்டு பள பளப்பேறி யிருந்தது. வருஷம் வருஷ மாய்க் கழிய, குழந்தைக்குப்பின் குழந்தை அத்தொட்டிலில் கிடந்து உதைத்துக் கொண்டிருந்தது. தற்போதோ தன் மடியில் குழந்தை யொன்றுமின்றி, தான் முன் தாங்கித் தாலாட்டிய குழந்தை களின் நினைவுகளில் ஆழ்ந்து கிடப்பது போல் இருந்தது.

இத் தொட்டிலையே நோக்கினவளாய் ஒரு இளம் மங்கை ஒரு பக்கமாய் உட் கார்ந்திருந்தாள். இருபத்தெட்டு வயது போல் தோன்றிற்று. உண்மையில் அதை விட ஆறு வயது இளையவள். அவ ளுக்கு அது ஒன்பதாவது மாதம். பூர்ண கர்ப்பிணிக்கு ஏற்படும் ஒரு வாட்டத்

தோடு கூடிய லக்ஷணமான தோற்றம் அத்தொட்டிலேயே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும் அம்மங்கையிடம் காணப் படவில்லை. அவள் ஏதோ கடுமையாய் ஆத்திரப்பட்டுக் கொண்டிருப்பவளாய்த் தெரிந்தது. தொட்டிலிலிருந்து அவள் கண்கள் சுவரில் தொங்கும் ஒரு படத் தின் மேல் விழுந்தன.

யசோதை பால் கறந்து கொண்டிருக்க, கிருஷ்ணன் அவளைப் பின்புறமிருந்து கட்டிக்கொண்டிருக்கும் சித்ரம், ரவிவர் மாவின் கைத்திறன். அவளுடைய கோபம் மெள்ள அகன்றது; கண்கள் குழந்தை கிருஷ்ணன்மேல் பதிந்த படியே மங்கின. விழிப்பில் உண்டாகும் கன வொன்று அவளுக்கு ஏற்பட்டது......

தனது பதினாறுவது வயதில், ஸ்வர்க்க மாயிருந்த ஒரு நாள். ஏதோ ஓய்ச்சலா யிருந்தது. சிறிது மயக்கம் வந்தாற் போல் தோன்றி, வாந்தி ஏற்பட்டது. தன் கணவனின் அத்தையிடம் சொல்ல, அக் கிழவி சொன்னாள்.

"ஓடம் பொண்ணுமில்லேடி,
கண்ணே"

"அப்பண்ணு, என்ன?"

பதிலளிக்காமல் அத்தை குழந்தை கிருஷ்ணனையும் யசோதாவையும் பார்க்க கல்யாணி வெட்கித் தலைகுனிந்து "போ, அத்தை" என்றாள்.

"ஒரு புள்ளைக் கொழந்தை பார், கன்ன மும் கதுப்புமா, தளதளன்னு இந்த கிருஷ்ணனைப் போலவே இருக்கும் பார்" என்று அத்தை பேசிக்கொண்டே இருந் தாள். மாதங்கள் ஆக ஆக, மசக்கை அதி கரித்தது கல்யாணிக்கு. அத்தை பல பக்ஷ ணங்கள் செய்து கொடுத்தாள். கல்யா ணிக்கு உலகமே இனிப்பாய்த் தோன்ற வாரம்பித்தது. எல்லோருடனும் தேனாய்ப் பேசினாள்; பக்கத்து வீட்டுக் குழந்தைகளெல்லாம் "மாமி, மாமி" என்று குவிந்தன அவ் வீட்டில்.

கல்யாணியின் கணவனுக்கு ஸ்வல்பச் சம்பளம். புதுத் தொட்டிலுக்கு எங்கே போவான். நாலு வீட்டுக்கப்புற மிருந்த ஒரு விதந்து தன் வீட்டில் மேலே பர ணுக்க் கட்டி வைத்திருந்த பழந் தொட்டி லொன்றை வலுவில் வந்து உபாய விலைக்கு இவர்களிடம் விற்றாள். இது நடந்தது ஆறு வருஷத்திற்குமுன், நேற்றுப் போல விருந்தது கல்யாணிக்கு. தலைச்சனை கிருஷ்ணனுக்குப் பிறகு, வஸந்தா, மாலதி யென்று இரு மொட்டுகள் தோன்றி மல ராமலேயே எல்லாம் கருகி அவிந்து போயின. சக்குவான், அம்மை, கட்டி—சிசுஹத்திக்காக தொட்டிலில் மூட்டைப் பூச்சிபோல் ஒளிந்து கொண்டிருக்கும் பிணியரக்கர் எவ்வளவுபேர் என்று சொல்ல வேண்டுமா?......

தொட்டில் தற்போது காலியாய்த்தொங் கிக்கொண்டிருந்தது. கனவு தெளிந்த கல்யாணி கண்ணன் படத்திலிருந்து தூக் கிட்டுக் கிடக்கும் பாழும் தொட்டிலை நோக்கினாள். ஆத்திரம் பொங்கிற்று. 'இதன் மடி ஒரு அசுரனின் விரிந்த வாயோ, ஆள் விழுங்கும் குகையோ' வென்று அவள் வெரித்து நோக்குவாள் சற்று; உடனே அத் தொட்டிலில் கால் களை உதைத்துக் கொள்ளும் த்வனி கேட்கும், இன்பத்தில் சற்று முழுகு வாள். அன்று தொட்டிலைப் பார்த்துக் கல்யாணி அவ்வாறு ஆத்திரப்படுவதற் குக் காரணம் அன்று காலை அவள் கேட்ட கதைதான்.

இவர்களிடம் அத் தொட்டிலை விற்ற வீட்டின் வரலாற்றை ஒரு கிழவி சொன் னாள். விற்பனை செய்த விதந்து சேஷிக் கும் அவள் நாட்டுப் பெண்ணுக்கும் எப் பொழுதும் சச்சரவு. நாட்டுப் பெண் ணுக்கு நாள் முழுதும் கண்ணாடி முன் நின்றாலும் மனது திருப்தியடையாது. அலங்காரம் செய்துகொள்ள அவள் எவ் வளவு நேரம் எடுத்துக்கொண்டாளோ அதில் இரண்டு மடங்கு அலங்காரத்தை ஸரி பார்த்துக்கொள்ள எடுத்துக்கொள்ளு வாள். தலை முடிச்சைத் தொட்டுத் தொட்டு 'சரி' யென்று வெளிவந்தால் உடனே உள்ளே சென்று 'ப்ரூச்' சரியா வென்று பார்க்கப்போய் விடுவாள். வியர் வையை மெதுவாய் ஒத்தி ஒத்தி, அடிக் கடி பௌடரைப் போட அவள் கண்ணாடி யிடம் போவதற்குக் கணக்கேயில்லை கொஞ்சம் ஊதற் சரீரம். பாவம், அவளு

டைய கணவன் அவள் சொன்னபடி யெல்லாம் ஆடி, சேஷிக்கு மிக்க அரு வருப்பைக் கொடுத்து வந்தான். இவ்வலங் காரிக்கு இஷ்டமில்லாமலும், அவள் தடையுபாயங்களையும் ஏமாற்றி ஒரு குழந்தை பிறந்து விட்டது. "இதொண்ணு, இதைக் கட்டிண்டு மார டிக்கணும், கத்தித் தொலைக்காதே, இந்தா" என்று அக் குழந்தை கத்தும் போது ஒரு கிளாஸில் பாலைப் போட்டு ரப்பர் காம்புடன் அதன் வாயில் திணித்துவிடுவாள். தன் மடியின் சீர்மை குன்றிப் போகும் என்று குழந்தைக்குத் தாய்ப் பாலில்லாமல் செய்துவிட்டாள். மற்ற நேரங்களிலும் குழந்தையின் வாயில் ஒரு ரப்பரைத் திணித்து வைத் திருப்பாள். ஒரு நாள் அக்குழந்தை ரப் பரையும் வளையத்தையும் விழுங்கிவிட்டு, இவளுக்குப் பிறந்தோமே என்று வருந்து வதுபோல் உயிரைவிட்டது. அதற்குப் பிறகு அவ்வகத்தில் குழந்தை ஏன் தோன்றுகிறது? தொட்டிலைச் சேஷி தன் மடியான ஸாமான்களை வைப்பதற்கு வேண்டிய பரணாய் ஒரு மூலையில் தூக் கிக் கட்டிவிட்டாள். சில வருஷங்களுக் குப் பிறகு அவள் மகனுக்கு மாத்த லேற்பட்ட சமயம் சேஷி கல்யாணியின் அத்தையிடம் அத் தொட்டிலை விற்றாள்.

"அதான் இப் பாழும் தொட்டில், சிசுத் ரோஹிணி வைத்துக்கொண்டிருந்த தொட்டில், இப்படி என் குழந்தைகளை எல்லாம் முழுங்கிவிட்டது" என்று கல்யாணி அத் தொட்டிலை ஒரு உதை உதைத்து அதன் கயிறுகளை அறுத்து அதைக் கொல்லையில் தூக்கி எறிந்தாள்.

மறு வருஷம்; புதிய பிரம்புத் தொட்டி லொன்றில் தன் குழந்தையைத் தாலாட் டிக்கொண்டிருந்த கல்யாணியை வேலைக் காரி பின்புறமிருந்து கூப்பிட்டாள்.

"என்னடி?" என்றாள் கல்யாணி.

"எம்பொண்ணு கொழந்தை பெக்க வரப் போரா அம்மா."

"என்ன பண்ணணும்?"

"அந்த மூலேலே போட்டுருக்கேளே அந்த தொட்டிலை..."

கல்யாணி குப்பையோடு கிடக்கும் பழந் தொட்டிலைப் பார்த்தாள். பூத்த பனிபோல் அத் தொட்டிலில் இரண்டு பூனைக்குட்டிகள் படுத்திருந்தன. ஒரே ஓட்டமாய் ஓடிக் கல்யாணி அப்பூனைக் குட்டிகளை யெடுத்து பக்கத்தில் தரையில் வைத்தாள்.

"ஏம்மா, என்னது?" என்றாள்வேலைக் காரி.

"இதுகள் செத்துப் போகாமலிருக் கணுமேன்னுதான் தொட்டிலிலிருந்து எடுத்தேன்."

"செத்துப் போவானேன்?

தாய்ப் பூனை இதற்குள் பாய்ந்து வந்து தன் குட்டிகளைக் கவ்விக்கொண்டு ஓட்டு மேலால் சென்றது. கல்யாணி வேலைக் காரியிடம் "அந்தத் தொட்டில் ஒனக் கும் வேண்டாம், அம்மா" என்று சொல்லி, தானே அதை எடுத்து அம் மிக் குழவியைப் போட்டுடைத்தாள்.

"வெறகுக் காச்சு" என்றாள் வியர்த்து விருவிருத்துப்போன கல் யாணி.

"என்னடி கல்யாணி" என்று ஓடி வந் தாள் அத்தை. "இதென்னடி தொட் டில் ஸம்ஹாரம்!"

"அத்தே, இது எங் கொழந்தைகளைச் சாப்பட்டது போராதுன்னு, ரெண்டு பூனைக்குட்டிகளையும், நம்ப கண்ணி யம்மா பேரக் கொழந்தையும் சாப்பட யோசித்துண்டிருந்துது. இதோ இன்னி ஸாயங்காலம் கொழந்தையக் குளுப்பாட் டற வென்னீருக்கு இந்தத் தொட்டில் மாத்தையே வெறகாக வைக்கணும்."

வேலைக்காரி கண்ணியம்மாள் ஒன்றும் புரியாமல் நின்றாள். சில மாதங்களாய்த் தான் கையில் மீத்து வைத்திருந்த காசைக் கண்ணியம்மாளிடம் கொடுத்து "இந்தா, பேரக் கொழந்தைக்குப் புதுத் தொட்டில் வாங்கிப் போடு" என்றாள் கல்யாணி. கல்யாணியின் அன்பு அவள் கண்பார்வையில் அலையாய் எழும்ப, அவ் வமுத அலையில் அங்குள்ள கண்ணியம் மாளால் பின் தோன்றப்போகும் அவள் பேரக் குழந்தை தாலாட்டப்பட்டது.

# எங்கள் குறைகள்

(சேல்லம்)

"உங்களுக்கென்ன குறைகள்?" என்று பெரிய கேள்வி இதன் தலைப் பெயரைக் கண்டதும் கேட்கலாம். ஆனால் ஆடவர்கள் தங்கள் குறைகளை வெளியிட எவ்வளவோ சாதனங்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பத்திரிகாசிரியருக்கு ஏதாவது வேலைத் தொந்தரவால் கோபம் வரவேண்டியதுதான். அவர் தனக்கு அடுத்த வேலைக்காரரைக் கோபிப்பார். அவர் தனக்கு அடுத்தவனிடம் அதைக் காண்பிப்பார். அவரவர் வீட்டுக்கு வந்ததும், தங்கள் மனைவியைத் தாக்கத் தவறமாட்டார்கள்; கடைசியில் பத்திரிகாலயம் பெருக்கும் ஆளின் மனைவியுடன் முடிவடையும் அந்தக்கோபம். நதிகள் எப்படி மலையில் உற்பத்தியாகிக் கடலில் சங்கமமாகின்றனவோ அது போல் முடியும். அடுத்த வாரம் பத்திரிகாசிரியர் 'மனைவியின் தொந்தரவு' என்னும் தலையங்கத்துடன் பத்திரிகையை ஆரம்பிப்பார். நாங்கள் என்ன செய்வது? பொறுமை யுடன் படிக்கவேண்டியதுதான்.

அடுத்தபடி, ரேடியோ. ஓர் மனிதனுக்குப் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தால் போதும். அவர் 'பெண்களின் சங்கடங்கள்!' என்று பெரிய கட்டுரை எழுதிப் படித்துத் தள்ளிவிடுவார். நாங்கள் யாது செய்வோம்? மனம் பொங்கப் பொறுமையுடன் கேட்பதுதான். இன்னும் எதை எடுத்துக்கொள்ளுங்கள்." 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பது போல் "வல்லவனுக்கு எங்களை வைவதுதான்" என வசனத்தை மாற்றி அமைத்தால் சாலப் பொருந்தும்.

எங்கள் குறைகளை எப்படி வெளியிடுவது? எங்கள் விமோசனமென்ன? எங்கள் குறைகளை நாங்களே கூடிப் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டியதுதான். இதில் பல ரகமான ஆடவர்களின் குணங்களை எடுத்துக் கூறி இருக்கிறேன். இது சரியா வென்று மாதர்கள் தீர்மானிக்க வேண்டிய விஷயம்.

காலையில் துப்பட்டியால் நன்றாக முகத்தை மூடிக்கொண்டு, "பால்காரனுடன் என்ன சண்டை?" என உறுமுகிறார் ஒருவர். பால்காரனிடம் கண்ணில் எண்ணெயை விட்டுக்கொண்டு கவனிக்காவிடில் நுரையுடன் அரைக்கால் படி பாலைக் கால்படியாகக் கணக்குச் செய்துவிடுகிறான். அவனுடன் சண்டையிட்டுக் கால்படிபாலுக்கு அரைப்படி பாலாக வாங்கினால் பணலாபம் ஆடவர்களுக்கா நமக்கா?

அடுத்தபடி ஸோப்பு. பௌடர். கிரீம் இவற்றால் ஷாப்பு செலவு அபாரமாக ஆகிறதென்று கர்ஜிக்கிறார் ஒருவர். அதுவும் நிஜம்தான், காலை பத்து மணிக்கு வெளியில் செல்லும் புருஷனை மாலை ஆறு மணிக்குத் திரும்பவும் சந்திக்கிறோம். அத்துடன் காலை வேளையில் அவர்களுடன் பழக நமக்கு சந்தர்ப்பமும் கிடைப்பதில்லை. நமக்கு வீட்டு வேலைகளும் அவர்களுக்கு வெளி வேலைகளும் பங்கு போட்டுக்கொண்டுவிடுகின்றன. மாலையில் நாம் அவர்களைச் சந்திக்கையில் தலைவிரிகோலமாய் அவலக்ஷணமாய் நின்றுகொண்டிருந்தால் அவர்களுக்கு நம்மைக் கண்டால் பிடிக்குமா?

அழகுக் கழகு வேண்டியதில்லை என அவர்கள் நம்மைச் சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி ஒரு போடு போடலாம். அவர்கள் ஹ்ருதயத்தில். தோன்றும் உணர்ச்சியை மாத்திரம் ஒருக்காலும் மறுக்க முடியாது. தன் மனைவி லக்ஷணமாயும் பிரகாசமாயும் இருக்கவேண்டுமென ஒவ்வொருவரும் நினைக்கத் தவறமாட்டார்கள். அப்போது மேற்கூறிய முஸ்தீப்பு சாமான்கள் கொஞ்சம் அதிகப்படியாய்ச் செலவழிக்கத்தான் வேண்டிவரும். ஷாப்பிலிருந்து 'பில்' வருகையில் முகத்தைச் சுணக்கி என்ன பிரயோசனம்?

"நமக்கு ஜவுளிக் கடை பாக்கி தீருவதே இல்லை' எனப் புலம்புகிறார் ஒருவர். அவர்கள் நெஞ்சைத் தொட்டுப் பார்த்துக்கொள்ளட்டும். நமக்கு ஒரு புடவை இருபது ரூபாயில் வாங்கினால், அவர்கள் 'எட்டு டிரெஸ்சர்' எண்பது ரூபாயில் வாங்கிக்கொள்வார்கள். ஆனால் ஒரு புடவைக்குஇருபதுரூபாயாச்சு, என்த் தினம் ஒருமுறை சொல்லிக் காண்பிக்கத் தவறவே மாட்டார்கள். இவர்களை யார் திருப்பிக் கேட்பது? நாம் ரவிக்கையை ஒரு விதத்திற்கு மேல் தைத்துக்கொண்டால், அப்பப்பா! எத்தனை தினுசு என்பார்கள். இவர்கள் ஷர்ட்டில் எத்தனைவிதம்! நவநவமான காலர்கள்! முழுக்கை வைத்தது! அரைக் கை வைத்தது! ஜிப்பாக்கள்! எவ்வளவுவித பனியன்கள்! இதெல்லாம் தினுசில் சேராது. நாங்கள் எட்டு ரவிக்கைகளுடன் ஒரு வருஷத்தை ஓட்டினால் அவர்களுக்கு இருபத்தினுலு ஷர்ட்டுகள் வேண்டியிருக்கும். எத்தனை கர்சீப்புகள், செருப்புகள், குடைகள் தொலைத்தார்கள் என்பதைக் கணக்கிட ஆரம்பித்தோமானால், ஜனன மரணக் கணக்கைவிட அதிகமாக விருக்கும்.

'போனால் போறது. அவர்களுந்தான் அலுத்துக்கொள்கிறார்கள். நமக்கு இருப்பதை வைத்துக்கொண்டு காலந் தள்ளுவோமே' என்று நினைத்துப் பேசாமலிருந்தோமானால், அந்தப் பணத்தை மிகுத்தி எந்த பாங்கியிலாவது போட்டிருப்பார்களோ வென்றால், அதுதான் கிடையாது. அவன் கேட்டான். இவன் கேட்டான்! என்று கடன் கொடுத்து விடுவார்கள். அந்தப் பணம் திரும்பி வருவதேது? திருப்பிக் கொடுக்கும் எண்ணமுள்ளவன் ஏன் கடன் வாங்குகிறான்? 'அச்சுதப்ரீதி' என்று தண்ணீர் எடுத்து விடவேண்டியதுதான்.

ஸ்திரீகளோ! அப்பா! அவர்கள் பெருமை அடிக்க ஆரம்பித்துவிட்டால் ......என்று இவர்கள் நீட்ட ஆரம்பித்தால் அது வண்டித் தொடர்போல் சென்று கொண்டேயிருக்கும். ஆனால், அவர்கள் மாத்திரம் ஒருநாள் எங்காவது வெளியில் சென்றுவந்துவிட வேண்டியதுதான். வீட்டிலிருந்து புறப்படக் கீழ்ப்படியில் கால் எடுத்து வைத்தது முதல் திரும்பி வீட்டில் கொண்டு விட்ட வண்டிக்காரனுக்கு அரையணு சத்தம் குறைத்துக் கொடுத்தது வரையில் பாரதம் மாதிரி விஸ்தரிப்பார்கள். நமக்கு அதில் நம்பிக்கையோ உத்சாகமோ இருந்தாலும் இல்லாவிடினும் ரஸிப்பதுபோல் பாவனை செய்யவேண்டும். ஆனால் அவர்கள் ஹோட்டலில் ஒரு ரூபாய் கொடுத்து சில்லரை வாங்க மறந்து போனதை மாத்திரம் சொல்லவே மாட்டார்கள்.

நேற்றைய தினம் பக்கத்தாத்து மாமி வந்திருந்தார். நான் அந்த பச்சைப்புடவையைக் கட்டிக்கொண்டிருந்தேன். அவர் என்னைப் பார்த்து "'என்னமோம்மா! நீ எது உடுத்திக்கொண்டாலும் பொருந்தி இருக்கிறது' என்று சொன்னார்" என்று தவறிப் போய் சொல்லிவிட வேண்டியதுதான். "போதும்! போதும்! அவள் உன்னை ஸ்தோத்திரம் செய்தால் தானே சாமான்கள் தவக்கமன்னியில் கடன் வாங்கிக்கொள்ள முடியும்? இதை நீ நிஜமென்று நினைத்தாய்!" என ஓர் கண்டனப்பத்திரம் படிப்பார்கள். அப்போது நமக்கு என்ன தோன்றுகிறது. "நமது கணவர் கண்களில் நாம் லக்ஷணமுடன் காணப்படவில்லை." அதை நினைக்கையில் எந்த ஸ்திரீயின் மனந்தான் சஞ்சலமடையாமலிருக்கும்! அச் சிறு புண் ஆற அனேக நாட்கள் செல்லவேண்டி வரும். நேற்று நாம் அடித்த ஜம்பங்களை எல்லாம் அவள் ஆமோதிக்கவில்லையா? நாம் ஏன் இந்த ஒரு வார்த்தையை ஆமோதிக்கக்கூடாது? அதை யோசிப்பவர்களாக் விருந்தால் இப்படி ஏன் பதில் கூறுகிறார்கள்?

பெண்கள் மஹா பொறாமைக்காரர்கள். "உண்பாரைப் பார்த்தாலும் உடுப்பாரைப் பார்க்க மாட்டார்கள்," என ஒரு வசனமும் சொல்வார்கள். நாம் யாரை யாவது ஒருவரைப் பற்றி "அவாத்திற்குப் போயிருந்தேன். அந்த வீட்டுக்காரர் தான் என்ன பொறுமை! அந்த அம்மாளுக்கு என்ன அனுகுணமாகவிருக்கிறார்"

என்று வாயைத் திறந்து விட வேண்டியது தான். நாம் திறந்த வாய் மூடுமுன் "ஓஹோ! அந்தக் கந்திரியையா இவ்வளவு ஸ்தோத்திரம் செய்கிறாய்? அவன் அகமுடையாள் பெரிய ராக்ஷஸீ. அவளை அடக்கக் கையாலாகாமல் போனால் அடங்கி மருமகள் போல் நடக்க வேண்டியது தானே? என எங்கள் இனத்திற்கே ஓர் சவுக்கடி திருப்பிக் கொடுப்பார்கள்.

'இந்தப் பெண்கள் ஸதா என்ன வம்பு அளக்கிறார்கள்?' என்று மாதர்களைத் தூஷிப்பது ஆடவர்கள் நித்ய கர்மானுஷ்டானத்தைச் சேர்ந்தது. அவர்கள் நான்கு பேர் கூடி இருக்கு மிடத்தை மறைவிலிருந்து கவனியுங்கள். ஒருவர் பிறந்த வூர், வளர்ந்த வூர், அவரின் சம்பாத்யம், யோக்யதை, அவர் சம்பந்தம் செய்த இடங்களின் தராதரம் இவை யாவையும் பேசி அலசித் தள்ளிவிடுவார்கள். நமது வம்பு வீட்டுடன் நிற்கிறது. அவர்களது வம்பு உலக வியாபகமானது. ஆனால் 'வம்பளப்பவர்கள்' என்னும் பெயர் எங்களுக்காகத்தான் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

"பெண்ணுக்கு வயதாகிவிட்டதே! ஒரு வரனைத் தேடவேண்டாமா? இந்தப் பிள்ளைக்கு மேல் படிப்புக்கு என்ன செய்வதாக யோசனை?" எனக் கேட்க வேண்டியது தான்? "என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்? வெளியில் போனால் வேலைத் தொந்தரவு. வீட்டில் வந்தால் இந்தத் தொந்தரவா?" என நல்ல பாம்பு போல் சீறுகிறார்கள். அந்த குழந்தைகளை நாங்கள் எங்காவது விலைக்கு வாங்கி வந்தோமா? இருக்கலாம்.

நாம் கொஞ்சம் சில்லரை வேண்டுமெனக் கேட்டு விட வேண்டியது தான். "காலையில் கொடுத்த அரை ரூபாய் எங்கே?" என்று அதிர் வேட்டு வெடிப்பதுபோல் கேட்பார்கள். அதை முத்தூர் ஸ்வாமி கும்பாபிஷேகத்திற்குக் கொடுத்து விட்டேன்" என்போம். 'நன்றாக விருக்கு. இந்தக் காலத்தில் இதெல்லாம் வெறும் மோசம். எங்காவது இப்படி ஏமாந்து பணத்தைத் தொலைப்பார்களா? முத்தூர் ஸ்வாமி உனக்குத் தான் முக்தி கொடுக்கப் போகிறது" என்று கேலி செய்வார்கள். அன்று சாயங்காலம் நடக்கும் 'கிளப்' பார்ட்டிக்கு ஓசைப்படாமல் ஐந்து ரூபாய் அழுதிருப்பார்கள். அது யாருக்குப் பிரீதி?

'எங்கள் தலைப் பின்னலில் ஓர் பரிகாசம். நடை யுடை பாவனைகளில் ஓர் ஏளனம். இவர்கள் தங்கள் தலைகளை எவ்வளவு விதமாக வாரிக்கொள்கிறார்கள்? அலங்காரங்கள் எத்தனை விதம் செய்து கொள்கிறார்கள்' என்று சிறிது யோசித்தால் தெரியும். நாங்கள் சாதாரணமாக "அப்படி இல்லை இப்படி" எனச் சிறிது அவர்களைத் திருத்தினாலும் அவர்கள் சகிப்பதில்லை. ஏதோ விதண்டா வாதம் செய்வதாகவே எண்ணி ஆயாசப்படுகிறார்கள். நாங்கள் பேசும் ஒவ்வொரு அக்ஷரத்தையும் அவர்கள் மறுப்பது தெரிவதில்லை. இருதிறத்தினரும் அவரவர் பொறுப்பை உணர்ந்து நடந்தால் சண்டைக்கும் சச்சரவுக்கும் இடமேது?

சீதாப் பிராட்டி இல்லாமல், வால்மீகியால் ராமாயணத்தைப்போல் ஓர் காவியம் சிருஷ்டித்திருக்க முடியுமா? தமிழுலகில் கம்பனின் கவிச் செல்வத்தைத் தான் நாம் அடைந்திருக்க முடியுமா? திரௌபதி இல்லையேல் வியாசர் ஏன் பாரதம் எழுதுகிறார்? தேவகி இல்லாவிடில் ஸ்ரீ கிருஷ்ண ஜனனம் ஏது? பகவத் கீதை என்னும் பொக்கிஷம் தான் நமக்கேது? ஆதி பராசக்தி யார்? அஷ்டைச்வர்ய தாயகி யார்? கல்வியும் சங்கீதமும் கலந்தளிக்கும் ஸரஸ்வதி யார்? பாரத பூமாதேவி யார்? இவர்கள் ஸ்திரீகள் இல்லையா?

'ஆம்! இப்பாரத தேவியே அடிமைப் பட்டு, குறையுடன் இருக்கையில் உங்கள் குறைகளைப்பற்றி இப்போது என்ன அவசரம்?' ஸ்திரீகள் இல்லையேல், ஆடவர்களுக்கு அழகு எதற்கு? பணம் எதற்கு! யௌவனம் என்னத்திற்கு! மற்ற சாமக்கிரியைகள் தான் எதற்கு? நாங்கள் இராத உலகில் முரடான தேகமும், கடினமான குரலுமுள்ள ஆடவர்கள் ஒருவர்க்கொருவர் சந்தித்துப் பேசிப் பழகி என்ன இன்பத்தை அடைவார்கள்? பகலாகவே இருந்தால் நித்திரை வேண்

டாமா? அதுபோல் இரவாகவே இருந்தாலும் விழிப்பு வேண்டாமா? அதை அறியாமலா சிருஷ்டி கர்த்தா ஆடவர்களையும் பெண்களையும் பிணைத்திருக்கிறான்?

ஒற்றைச் சக்கர வண்டி ஓடுமா? இரண்டிருந்தால் தான் உருண்டு சுழல ஹேதுவாகும். இன்பம், துன்பம், இரவு, பகல், ஆண், பெண் இது இல்லையேல் உலகமேயில்லை.

இன்று ஸரஸ்வதி தேவியின் புனிதமான தினம். இன்று முதல் ஆடவர்கள் "பெண்களைச் சமமென்று பாவிப்போமே. மனமாறுதல்களை என்றும் மன்னிப்போமே" எனச்சங்கல்பம் செய்துகொள்ள வேண்டும். பரஸ்பர அன்பே பரந்த உலகில் பிரதானம். இதுவே எங்கள் குறைகள் தீரும் வழி.

---

# தமிழ் நாவலும் மாதவய்யாவின் சேவையும்

(பி. கோதண்டராமன் எம். ஏ.)

தற்கால உலகில், இலக்கிய வகைகளில் மக்களது உள்ளத்தைக் கவர்ந்து சீரும் சிறப்பும் கொண்டு விளங்குவது நாவல் அல்லது நவீனம் என்பது. வாழ்க்கையின் பல அம்சங்களையும் பலவித அநுபவங்களையும் ஒட்டி எழுதப்படும் கற்பனைக் கதையே நாவல். நாவல் பொதுவாக வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகிறது என்று சொல்லலாமாயினும், வாழ்க்கையில் காணப்படும் சிறியது பெரியது, நல்லது கெட்டது, அழகானது விகாரமானது, பயன்படுவது பயனற்ற குப்பைக் கூளம் முதலிய எல்லா விஷயங்களையும் விவரங்களையும் பூதக் கண்ணாடியின் மூலமாகப் பார்ப்பதுபோன்று பார்த்து ஒன்றையும் விடாமல் எடுத்துக் காட்டுவதல்ல. அவ்வண்ணம் எடுத்துக் காட்டப்படும் விஷயங்கள் மொத்தத்தில் உண்மையாகவுமிராது, ருசியும் தராது. வாழ்க்கையில் ருசியாயும் அழகாயும் நிரந்தரமாயும் உள்ள விஷயங்களையும் உண்மைகளையும் விளக்குவதில்தான் நாவலின் பெருமை இருக்கிறது.

நாவலாசிரியன் வாழ்க்கையின் சாமான்னிய அன்றாட விஷயங்களைக் கையாளலாம். ஆனல் அவ்விதம் செய்கையில், கதையின் அமைப்பினுலும், ஜீவனுள்ள கதா பாத்திரங்களைச் சிருஷ்டிப்பதனுலும, கற்பனையும் ஒட்டமும், சொல்லழகும் பொருளழகும் கொண்ட நடையினுலும், அவ்விஷயங்களுக்கு ஒரு அழகையும் வசீகரத்தையும் அவன் தருகிறுன். அவன் வாழ்க்கையில் சாதாரணமாகக் காணப்படாத அபூர்வமான விஷயங்களையும் எடுத்துக் கையாளலாம். ஆயினும் அவைகளை இயற்கைக்கும் உண்மைக்கும் ஒத்திருக்கும் படியாகவும், உயிருள்ளவையாகவும் செய்கிறுன். நமது காலத்திலேயே நம் கண்ணெதிரே நடைபெறும் சம்பவங்களையோ அல்லது புராதன சரித்திர சம்பவங்களையோ அவன் எடுத்துக் கையாளலாம். ஆனல் அச்சம்பவங்கள் சரித்திர ஏடுகளில் காணப்படுவதைப்போல சப்பையாகவும் உயிரற்றுமிராமல் அவனது கற்பனையினுலும் உணர்ச்சிப் பெருக்காலும் தசையும் நரம்புகளும் பெற்று ஜீவநாடியுடன் துடிக்கின்றன. அவன் புறத்தில் காணும் உண்மைகளைத் தன் உள்ளமாகிய உலையில் வைத்து, தன் உள்ளத்தின் ஆழத்தில் பதிந்துள்ள உண்மைகள், உணர்ச்சிகள் எண்ணங்களால் உருப்படுத்தி, நூலில் அமைக்கிறுன். ஒருகால் தனது அகத்திலுள்ள உண்மைகள், உணர்ச்சிகள், எண்ணங்களைப் பின்னே ஒதுக்கிவைத்து, சம்பவங்களையும் கதா பாத்திரங்களையும்

தனக்கு அன்னியமாக வைத்துக்கொண்டு எழுத முயன்றாலும், அவனது உள்ளத்தின் விருப்பு வெறுப்புக்கள், வாழ்க்கையின் ரகசியங்கள் முதலியவை எவ்விதமாகவோ நூலில் பிரதிபலித்து விடுகின்றன. இதைத் தவிர்க்க முடியாது.

நூல் எழுதப்படும் காலத்தில் மக்களது உள்ளத்தைக் கிளர்த்திவரும் சமூகப் பிரச்னைகள் ஆசிரியனது உள்ளத்தையும் கிளர்த்துவது சகஜமாகையால், அவை விஷயமாகவுள்ள அவனது கருத்துக்களும் அனுதாபங்களும் நூலில் மறைமுகமாக இடம் பெற்று விடுகின்றன. அவை படிப்போர் உள்ளத்தைக் கலக்கி, உணர்வை யெழுப்பி, மக்களிடையே சமூக ஆசாரத் திருத்தங்களை யுண்டு பண்ண உதவுகின்றன. அவன் சிருஷ்டிக்கும் வீரர்களும், தியாகிகளும், நல்லுணர்சியுடைய மானிட அபிமானிகளும் லட்சிய 'புருஷர்களாகத் திகழ்ந்து மக்களுக்கு வழிகாட்டுகின்றனர். சில கதா பாத்திரங்கள் மக்களது சுபாவத்தில் ஊன்றியுள்ள சில குணங்களுக்கு எடுத்துக் காட்டுகளாக விளங்கி, பேச்சு வழக்கிலும் நூல் வழக்கிலும் எளிதில் புகுந்து விடுகின்றன. நாவலில் காணப்படும் விஷயங்கள் வாழ்க்கையிலிருந்து சற்று மாறுபட்டிருப்பினும், சில விஷயங்கள் திரித்தோ விகாரப்படுத்தியோ கூறப்பட்டிருப்பினும், இயற்கைக்கும் உண்மைக்கும் வெகுவாக மாறுபட்டிருப்பதில்லை.

நாவல் பொதுவாக மகிழ்ச்சியளிக்கவே எழுதப்படுகின்றது. அது அறத்தையும் ஒழுக்கத்தையும் போதிக்கும் நூலல்ல. ஆயினும், சம்பவங்களின் ஜோடிப்பினாலும், ஆசிரியனது திறமையினாலும், அறிவு ஆற்றலினாலும் நூலில் மறைமுகமாக ஒரு போதனை பொதிந்திருப்பது கண்கூடு. ஆசிரியன் தத்துவ ஞானியல்ல. ஆயினும் உலகத்தையும் வாழ்க்கையையும் பற்றிய தத்துவம் அவனது நூலில் காணப்படாமலில்லை. கண்ணுக்குப் புலனாகாத சக்திகள் மக்களின் விதியை நிர்ணயித்து வருவதைக் கதா பாத்திரங்களின் சொற்களும் செயல்களும் இயற்கைச் சம்பவங்களும் நமக்கு அறிவிக்கின்றன. இவ்வண்ணமாக மக்களின் வாழ்க்கையையும் பிரச்னைகளையும் உள்ளபடி எடுத்துக் காட்டுவதிலும், இப்பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு உதவியளிப்பதிலும் பொதுவாக மக்களுக்கு அனுயாசமாக அறிவை யூட்டி நல் வாழ்கைக்கான தத்துவங்களைப் போதிப்பதிலும், நாவலுக்கு இணையான இலக்கியம் வேறு கிடையாது. ஆகவேதான் ஜனநாயகமும் பொதுஜன அறிவும் பெருகிவரும் இந்நாட்களில் நாவலின் முக்கியமும் பெருகி வருகின்றது.

பொதுவாக மேற்கூறிய இலக்கணங்கள் அமைந்த நாவல்களே உயர்தரமானவை. திடுக்கிடும் சம்பவங்களையும், கீழ்த்தரமான உணர்ச்சிகளையும் கொண்ட நாவல்கள் தற்காலிகமாக மக்களுக்கு இன்பம் தரக்கூடுமாயினும், நிரந்தரமாக நிற்கக் கூடியவையல்ல. அவை இலக்கியத்திலும் இடம் பெறுவதில்லை.

இத்தகைய உயர்தரமான நாவலுக்கு முதன் முதலாக அடிகோலினவர் வேதநாயகம் பிள்ளையவர்கள். அவரது பிரதாப முதலியார் சரித்திரம் உலகப் பிரசித்தம். 'கமலாம்பாள்|சரித்திரம்' என்னும் முதல் தமிழ் நாவலைத் தந்தவர் ராஜம் ஐயரவர்கள். அவருக்குப் பின் சில உயர்தரத் தமிழ் நாவல்களை யளித்துச் சென்றவர் மாதவய்யா அவர்கள். மாதவய்யாவின் 'பத்மாவதி சரித்திரம்' 'விஜய மார்த்தாண்டம்' 'முத்து மீனாட்சி,' 'திருமலை சேதுபதி' என்னும் தமிழ் நாவல்களையும்; அவர் ஆங்கிலத்தில் மட்டுமே எழுதியுள்ள 'தில்லை கோவிந்தன்' 'கிளாரிண்டா' 'சத்தியானந்தன்' முதலிய தமிழ்நாட்டு வாழ்க்கையைச் சித்தரிக்கும் நாவல்களையும் எல்லோரும் அறிவர். இவைகளுக்குப்பின் இவ்வளவு அழகாகவும், உண்மையாகவும் தமிழ் மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் நாவல்கள் இன்னும் வெளிவரக் காணோம்.

இன்று தமிழ்நாட்டில் பல நாவல்கள் புற்றீசல் போலக் கிளம்பிக்கொண்டு வருகின்றன. வடுவூர் துரைசாமி அய்யங்

கார், ஜெ. ர. ரங்கராஜு, ஸ்ரீமதி கோதை நாயகி அம்மாள், போன்றவர்களும் இன்னும் பலரும் கணக்கற்ற நாவல்களை எழுதி மலைபோல் குவித்துவருகின்றனர். ஆனால் இவைகளில் எத்தனை நாவல்கள் உண்மையாகத் தமிழ் நாட்டின் பல திறப்பட்ட வாழ்க்கையை ஒட்டி எழுதப்பட்டிருப்பவையாயும், உயர்தர நாவல் என்னும் இலக்கிய வகையில் சேர்த்துக் கொள்ளக்கூடிய தகுதியை யுடையவையாயு மிருக்கின்றன என்பதுதான் சந்தேகம். தமிழ் நாவல் என்னும் பெயருடன் அயல் நாட்டுத் துப்பறியும் கதைகளின் மொழி பெயர்ப்புக்களையும், அபத்தங்கள் நிறைந்த நாவல்களையுமே நாம் பெரும்பாலும் காண்கிறோம். மேல்நாட்டு நாவல்களையேனும், அல்லது நம் நாட்டிலேயே இலக்கியத் துறையில் முன்னேறி வரும் சில மொழிகளில் காணும் நாவல்களையேனும் போல இன்று தமிழ் மொழியில் ஒரு டஜன் நாவல்கள்கூட இல்லையென்று சொல்லவேண்டிய நிலைமையில் தான் இருந்துவருகிறோம். மேல் நாடுகளில் தற்சமயம் வெளிவரும் பல திறப்பட்ட நாவல்களையும் அவைகளையாளும் கலைமுறைகளையும் நன்காராய்ந்தவரும், தமிழ்மக்களின் பல வகைப்பட்ட வாழ்க்கையை அனுபவ வாயிலாகக் கண்டறிந்தவரும், மனோபாவமும் மேதையும் நிரம்பப் படைத்தவருமான அறிவாளிகள் கலை வளர்ச்சிக்கென தங்களது ஜீவியத்தை அர்ப்பணம் செய்ய முன்வராமலிருப்பதே இந்நிலைக்குக் காரணம் எனச் சொல்லக் கூடும். மாதவய்யாவுக்குப் பின் எவ்வளவோ மாறுதலடைந்துள்ள தமிழர் சமூகம் மற்றுமோர் மாதவய்யாவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இது தருணம் மாதவய்யாவின் வாழ்க்கையையும் அவர் தமிழ் நாவலுக்கு ஆற்றியுள்ள பணியையும் ஒரு சிறிதளவு ஆராய்வது நமது கடனாகும்.

## 2

மாதவய்யா திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பெருங்குளத்தில் 1872-ம் வருஷம் அக்டோபர் மாதம் 16-ந் தேதி அப்பாவய்யருக்கு இரண்டாவது புத்திரராகப் பிறந்தார். இளவயதில் திருநெல்வேலியிலேயே ஆங்கிலமும் தமிழும் கற்று உயர்தரப் படிப்புக்காகச் சென்னை சென்று, அங்கு கிறிஸ்தவ கலாசாலையில் பயின்று பி. ஏ. பட்டம் பெற்றார். பிறகு உப்பு-ஆப்காரி இலாகாவில் நியமனம் பெற்று படிப்படியாக உயர்ந்து இன்ஸ்பெக்டர் பதவியை யடைந்தார். 1923-ல் அவ்வேலையிலிருந்து விலகி சென்னையில் குடியேறி, கல்வி, சமூக ஆசாரச் சீர்திருத்தம், தமிழ்ப்பணி முதலிய விஷயங்களில் ஈடுபட்டுச் சேவைபுரியலானார். 1924-ல் ஏப்ரல் மாதத்தில் 'பஞ்சாமிருதம்' என்னுமோர் அரிய சித்திர சகிதமான செந்தமிழ்ப் பத்திரிகையை ஆரம்பித்துச் சிறப்புடன் நடத்திவந்தார். இப்பத்திரிகையில் அரசியல், இலக்கியம், கவிதை, விமர்சனம், மொழிபெயர்ப்பு, கட்டுரை, கல்வி, கைத்தொழில், சரித்திரம், சாஸ்திரம், சமயம், சமூகச் சீர்திருத்தம், சிறுகதை, விகடம் முதலிய விஷயங்களெல்லாம் அடங்கியிருந்தன. ஆசிரியர் குறிப்புகளுடன் நின்றுவிடாமல், 'அமுதகவி' 'கோணக் கோபாலன்' என்னும் புனை பெயர்களுடனும், தமது பெயரின் கீழும் பல அருமையான கவிதைகள், கட்டுரைகள் எழுதிவந்தார்.

மாதவய்யாவின் ஆப்தநண்பர்களான ரெவரண்டு கிங்ஸ்பெரியும் இலக்குமணப் போற்றிகளும் தொடர்ந்து எழுதி வந்தனர். கிங்ஸ்பெரி, 'ஜப்பானும் ஜப்பானியரும்' 'இலங்கையும் இலங்கையரும்', 'சர்வசமய சமரச தர்சனி' என்னும் தலைப்புகளின் கீழ் தொடர்ச்சியாக எழுதி வந்த கட்டுரைகளும், வெள்ளக்கால் ப. சுப்பிரமணிய முதலியார் தொடர்ந்து எழுதிவந்த 'கம்பராமாயண இன்கவித் திரட்'டும், எம். லக்ஷ்மி அம்மாளின் 'சீமைக் கடித'ங்களும், சுவாமி விபுலானந்தரின் 'பாவலர் விருந்து'ம் குறிப்பிடத்தக்கவை. இப்பத்திரிகை தமிழ் மணம் கமழும் செம்பாகமான நடையில் பாமரரும் பண்டிதரும் களிக்கும் வண்ணம் எழுதப்பட்டுவந்தது. மாதவய்யா தமது பொருளையும் காலத்தையும் இப்

பத்திரிகையின் வளர்ச்சிக்காகச் செல விட்டு வந்தார். 1925-ம் வருஷம் அக்டோபர் மாதம் 22-ம் தேதியன்று சென்னை சர்வகலாசாலை மண்டபத்தில் அங்கத்தினர் என்னும் உரிமையில் பேசிக்கொண்டிருக்கையில் திடீரென நாடி நின்று அனுபாசமாக உயிர்துறந்தார்.

மாதவய்யா பல அருமையான குணங்கள் வாய்ந்தவர். நல்ல திடகாத்திரமான சரீரம் படைத்தவர். திறந்த வெளியைப் பெரிதும் விரும்பியவர். குதிரை சவாரி செய்வதில் மிகவும் பிரியம். நாய்களிடத்திலும் குதிரைகளிடத்திலும் அளவு கடந்த பிரேமை. தமது மனைவி மக்களிடம் பேரன்புவாய்ந்தவர். சதா சுறுசுறுப்பாக வேலை செய்த வண்ணமாக இருப்பார். மெய்யை மெய்யென்றும் பொய்யைப் பொய்யென்றும் தமது மொழியிலும் சொல்லிலும் தீரமாகக் காட்டியவர். இந்து சமூக ஆசாரச் சீர்திருத்தங்களில் மிகவும் பற்றுக்கொண்டு தமது வாழ்க்கையில் பல சீர்திருத்தங்களைச் செய்து இதரர்களுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்கினவர். சிறு வயதிலிருந்தே அவருக்குத் தமிழ் ஆர்வம் இருந்துவந்தது. கம்பராமாயணத்தையும் திருக்குறளையும் நன்ருக ஓதியவர். அவரது நூல்களிலெல்லாம் இவ்விரண்டு நூல்களிலிருந்தும் பல மேற்கோள்கள் காணப்படும். கவிபுனையும் திறமையுமுண்டு. அவரது கவிகளிற் பல 'பஞ்சாமிருதத்தில்' வெளி வந்திருக்கின்றன. அவர் அநேகமாக பாமரருக்கும் விளங்கும் இனிய எளிய செந்தமிழ் நடையையே எழுதினராயினும், தனித் தமிழிலும் எழுதும் ஆற்றலுண்டு என்பதை அவர் எழுதிய 'சித்தார்த்தன்' என்னும் நூலிற் காட்டியுள்ளார்.

## 3

மாதவய்யா இருபது வயது வாலிபராயிருந்தபோதே தமிழ்ப் பணி செய்ய முன்வந்தார். அக்காலத்தில் நாவல் என்னும் நவீனத்தைத் தமிழ் இலக்கியத்தில் கொண்டுவருவதற்காக 'விவேக சிந்தாமணி' என்னும் மாதப் பத்திரிகை வெளிவந்தபோது அதன் முதல் தொகுதியிலேயே 'சாவித்ரி சரித்திரம்' என்னும் தொடர் கதையை எழுத ஆரம்பித்தார். அக்கதை சில காரணங்களினல் முற்றுப் பெறவில்லை. பின்னர் ராஜம் அய்யரின் 'கமலாம்பாள் சரித்திரம்' வெளிவந்தது. அதற்குப் பின் மாதவய்யா 'பத்மாவதி சரித்திரம்' எழுத ஆரம்பித்தார். அது சமயம் அவருக்குச் சுமார் 25 வயதிருக்கலாம். கதை முடிந்தவுடனே அது புத்தக உருவில் வெளிவந்தது. இதுதான் தற்போதுள்ள 'பத்மாவதி சரித்திர'த்தின் முதற் பாகம். ஆனல் அதுசமயம் அது முற்றுப்பெற்ற ஒரு நாவலாகவே இருந்தது. சில வருஷங்களுக்குப் பின் பத்மாவதி சரித்திரம் தொடர்ந்து எழுதப்பட்டு அதன் இரண்டாம் பாகம் வெளிவந்தது. இதற்கிடையே 'விஜயமார்த்தாண்டம்' என்னும் நாவலும் வெளிவந்தது. 'பத்மாவதி சரித்திர'த்தின் முதலிரு பாகங்களும் ஒன்ருகச் சேர்க்கப்பட்டு இது வரையில் ஆறு பதிப்புகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு பாகங்களும் பூர்த்தி பெற்ற நாவலாயிருப்பினும் அய்யரவர்கள் 1924-ல் ஆரம்பிக்கப்பட்ட 'பஞ்சாமிருதம்' பத்திரிகையில் மூன்றும் பாகத்தைத் தொடர்ச்சியாக வெளியிட வாரம்பித்தார். திடீரென நேர்ந்த அவரது மரணத்தினல் அது முற்றுப் பெருமல் நின்றுவிட்டது. அய்யரவர்கள் 'முத்துமீனுட்சி' 'திருமலை சேதுபதி' முதலிய நாவல்களை எழுதியுள்ளாராயினும், அவர் எழுதிய நாவல்களுள் தலைசிறந்து விளங்குவது 'பத்மாவதி சரித்திர'மும் 'விஜய மார்த்தாண்ட'முமே.

'பத்மாவதி சரித்திரம்' வட சொற்களின் கலப்பின்றி எளிய செந்தமிழில் எழுதப்பட்டுள்ளது. நடை எளியதாயினும் வலிமையும் அழகும் கொண்டதாகத் திகழ்கின்றது. ஆங்காங்கு ஆசிரியரே புனைந்த கவிகளும் திருவள்ளுவர், கம்பர், தாயுமானவர் முதலியவர்களிலிருந்து மேற்கோள்களும் மிளிர்கின்றன. 'பத்மாவதி சரித்திர'த்தின் கதை பின்வருமாறு:

சிறுகுளம் சீதாபதி அய்யர் ஒருநாள் இரவு தெருத்திண்ணையில் உட்கார்ந்து

கொண்டு வம்பளந்து கொண்டிருக்கையில் அவருக்கும் ராம பிள்ளைக்கும் சண்டை யேற்பட்டு, அவர் ராமபிள்ளையின் கன்னத்தில் ஓங்கி யடித்துவிட்டார். ராமபிள்ளை சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்குத் தொடரவே, அய்யர் குற்றவாளியென ருசுவாகி 6 மாதம் கடுஞ்சிறை விதிக்கப்பட்டார். அவரது மனைவி சீதம்மாளும் மகன் நாராயணனும் அம்மாளின் சகோதரரான அய்யாவய்யரின் வீட்டில் வசிக்க நேரிட்டது. அது சமயம் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த நாராயணன் மாமாவின் மகளான பத்மாவதிக்குப் பாடம் சொல்லிக்கொடுத்து வந்தான். பத்மாவதிக்கு அச் சிறுவயதிலேயே அவன்மீது பிரிய மேற்பட்டு 'நான் உன்னைத்தான் மணப்பேன்' என்று சொல்லி விட்டாள். சீதம்மாள் நாத்தி சுப்பம்மாளின் தொந்தரவு பொறுக்க முடியாமல் அவஸ்தைப் பட்டாள். கடைசியாக மகனுடன் வீட்டைவிட்டு திருநெல்வேலி சென்று அங்கு சில பள்ளிப் பிள்ளைகளுக்குச் சமையல் செய்துபோட்டு ஜீவனம் செய்துவந்தாள். அரியூர் பண்ணை சேஷய்யரின் குமாரர்களான கோபாலனும் சங்கரனும் இவரது வீட்டில் போஜனம் செய்துவந்தனர். நாராயணன் கோபாலனுடன் படித்து வந்தமையால் இருவருக்கும் இணைபிரியா நட்பு ஏற்பட்டது. கோபாலன் அரியூருக்குச் சென்ற போதெல்லாம் நாராயணனும் அவனுடன் செல்வான். அங்கு அவனுக்கும் கோபலானுடைய சகோதரியான சாவித்ரிக்கும் பரிச்சய மேற்பட்டது. கல்வியின் பயனைப்பற்றி அவளுடன் அடிக்கடி பேசுவான். சாவித்ரியும் தனது சிநேகிதையான சாலாவின் மூலமாக அவளது கணவனான நாகமய்யரிடமிருந்து தமிழ்ப் புத்தகங்களைத் தருவித்துப் படித்துவந்தாள். சாவித்ரி கட்டழகி, கற்பரசி, சாந்தத்திலும், ஞானத்திலும், குண சீலத்திலும் சிறந்தவள். ஆனால் அவளது கணவனான சுந்தரமய்யர் அவளைக் கொடுமையாக நடத்தி சுடலை யென்னும் ஒரு மறத்தியை வைத்துக்கொண்டிருந்தான். பண்ணை சேஷய்யருக்கும் வைப்பாட்டியுண்டு. ஆயினும் இரண்டாந்தரம் கலியாணம் செய்துகொள்ள விரும்பி பெண் வேட்டைக்குப் புறப்பட்டார். கடைசியாக ஒரு சிறு பெண்ணை மணந்து மனைவியையும் மாமியாரையும் வீட்டுக்கு அழைத்துவந்தார். சாவித்ரியின் சிநேகிதை சாலாவுக்கு இப் புதிய சம்பந்திகள் நெருங்கிய உறவு. ஆகவே சாலாவின் கணவனான நாகமய்யருக்கு வீட்டில் செல்வாக்கேற்பட்டது. நாகமய்யர் ஒரு தூர்த்தன். அவன் சாவித்ரியின்மீது மையல் கொண்டு அவளுக்குத் திருட்டுத்தனமாக காதற் கடிதங்கள் எழுத ஆரம்பித்தான். சாவித்ரியின் நிலைமை சங்கடமாயிருந்தது. இந்நிலையில் அவள் தகப்பனாரின் வீட்டை விட்டு சிந்துபூந்துறையில் புதுக் குடித்தனம் வைத்துக்கொண்ட கோபாலனுடனும் அவரது மனைவி கல்யாணியுடனும் தங்கினாள். நாராயணனும் கோபாலனுடைய குடும்பத்துடன் வசித்துவந்தான். இவ்வித மிருக்கையில் சாவித்ரியின் கணவன் திருநெல்வேலி நாடகக் கொட்டகையில் தீப்பிடித்தபோது படுகாயம் பட்டு உயிர் துறக்கவே, சாவித்ரி விதவையானாள். நிற்க, நாராயணனுடைய தகப்பனாரான சீதாபதி அய்யரும் சிறையில் காலமானார். பத்மாவதிக்கு பத்துவயது வந்தபோது அவளது பெற்றோர்கள் அவளுக்கு மணம் செய்து வைக்க ஏற்பாடு செய்தனர். திருமணத்தன்று மணமகன் பேதிகண்டு இறக்கவே, கடைசியாக, பத்மாவதி தான் இளமையில் வரித்த நாராயணனுக்கே வாழ்க்கைப் பட்டாள்.

நிற்க, கோபாலனும் நாராயணனும் உயர்தரப் படிப்புக்காக சென்னை சென்று கிறிஸ்தவ கலாசாலையில் சேர்ந்தனர். பத்மாவதி புஷ்பவதியாய்விடவே அவளும் சின்னாட்களில் கணவனுடன் வாசம் செய்ய பட்டணம் வந்தாள். எல்லோருமாக ஒரே வீட்டில் குடியிருந்தனர். கட்டழகியும் குணவதியுமான சாவித்ரியும், மேனியிலும் கண்ணழகிலும் சிறந்த கல்யாணியும், சரீரக் கட்டிலும் அங்க வடிவிலும் சிறந்த பத்மாவதியும் அன்னியோன்னியமாக வாழ்ந்துவந்தனர்.

பத்மாவதி பர்த்தாவின் மனதை யறிந்து அவனுக்குச் சம்பூரணமாகச் சமர்ப்பணம் செய்து அவனுக்காகவே வாழ்ந்தாள். ஆனல் கல்யாணியோ காதற் பெருக்கிலும் வாஞ்சையிலும் சிறந்தவளாயினும் எல்லா விஷயங்களிலும் தன்னிஷ்டப்படியே கணவன் நடக்கவேண்டுமென வற்புறுத்தினள். இதனல் தம்பதிகளுக்குள் மனவருத்த மேற்பட்டு கல்யாணி துயருற்ருள். கோபாலனும் நிலைமையைப் பொறுக்கமுடியாமல் அவளையும் குழந்தையையும் பிறந்தகத்தில் கொண்டு போய் விட்டுவிட்டான். மனைவியை விட்டுப் பிரிந்ததிலிருந்து அவனுக்கு வாழ்க்கை ருசியற்றதாய்விட்டது. இங்நிலையில் ஒழுங்கற்ற வாழ்க்கையை நடத்திவந்த தன் தம்பி சங்கரன் மூலமாக ஸ்திரீ வேஷம் சேஷய்யங்காரின் நட்பு ஏற்பட்டது. சேஷய்யங்கார் நாகமய்யரின் மரணத்தினல் விதவையான சாலாவை வைப்பாட்டியாக வைத்திருந்தான். கோபாலன் அவனுடன் சாலாவின் வீட்டிற்கு அடிக்கடி சென்றதால், சாலாவின் மீது மோகங்கொண்டு அவளுக்குக் காதற் கடிதங்கள் எழுதவாரம்பித்தான். இதனை யறிந்த சங்கரன் அவைகளைச் சாலாவிடமிருந்து பெற்றுக்கொண்டு குறும்புத்தனமாக பத்மாவதியின் விலாசத்திற்கு அனுப்பினன். பத்மாவதிக்கு வந்த அக் கடிதங்களைக் கண்ணுற்ற நாராயணன் பத்மாவதியைப் பெரிதும் சந்தேகித்தான். ஒருநாள் அவன் வெறிகொண்டு கர்ப்பவதியாயிருந்த பத்மாவதியைக் கீழே தள்ளி உதைத்தான். கடைசியாக அதிர்ஷ்டவசமாக கோபாலனிடமிருந்து இக் காதற் கடிதங்களைப்பற்றிய உண்மையையெல்லாம் அறியவே, பிணக்குத் தீர்ந்து தம்பதிகள் முன்போல ஒற்றுமையாயிருந்தனர். நாராயணனுடைய தூண்டுதலின் மேல் கோபாலன் தனது ஒழுங்கற்ற வாழ்க்கையைவிட்டு கல்யாணியை மீண்டும் அழைத்துக்கொண்டு வந்து குடித்தனம் செய்தான்.

நாராயணன் எம். ஏ. பரீட்சையில் தேறி வாத்தியார் வேலையில் அமர்ந்தான். கோபாலன் எம். பி. பி. எஸ். பாஸ் செய்து டாக்டரானுன். பத்மாவதிக்கு ஒரு குழந்தை பிறந்தது. அவள் இப்போது ஆங்கிலமும் பேசுவாள். கல்யாணியும் மீண்டும் கருவுற்ருள். ஆனல் உடல் மெலிந்து தேக பாதை அதிகமாயிற்று. பேயும் பிடித்தது. அவள் பிறந்தகம் சென்று பல நாட்கள் நோயுற்றிருந்து கடைசியாகக் கணவனது மடியில் சாய்ந்து கொண்டே உயிர் துறந்தாள். கல்யாணியின் மரணத்திற்குப் பின் கோபாலன் தாமஸ்கே என்னும் இந்திய கிறிஸ்துவரின் மகளான ஜேன்சேயைக் காதலித்தான். ஜேனுக்கும் கோபாலனுக்கும் பரஸ்பர காதல் முற்றினதை யறிந்த தாமஸ்கே, கோபாலன் கிறிஸ்துவ மதத்தைத் தழுவினல் பெண்ணை மணம் செய்துகொடுக்க சம்மதித்தான். இது விஷயமாக கோபாலன் நாராயணனையும் பத்மாவதியையும் கலந்தாலோசித்தான். அவன் கிறிஸ்தவ மதத்தில் சேருவதை அவர்கள் விரும்பவில்லையாயினும், ஒழுக்கமற்ற வாழ்க்கையை நடத்துவதை விட காதலித்தவளுடன் ஒழுங்காக இல்லறம் செய்வதே மேல் என நினைத்தனர். தகப்பனர் மதம் மாறப்போகிருர் என்றறிந்த கோபாலனது குழந்தைகள் கலக்கமுற்றன. (ஆசிரியர் திடீரென உயிர் துறந்ததினல் கதை பூர்த்தியாகாமல் இத்துடன் நின்றுவிட்டது.)

இக் கதையின் இடை யிடையே கல்வியின் பயன், நடனமாதர்களின் சங்கீதம், சமூக சம்பிரதாயங்கள், பழமைக்கும் புதிய லட்சியங்களுக்கும் போராட்டம், முதலிய விஷயங்களைப்பற்றிய சம்பாஷணைகள் வருகின்றன. தென்னிந்தியாவில் விசேஷமாக திருநெல்வேலி ஜில்லாவின், பிராம்மண குடும்பங்களின் பழக்க வழக்கங்கள் நன்கு சித்திரிக்கப்படுகின்றன. சாவித்ரி, பத்மாவதி, கல்யாணி இம்மூவர்களின் அழகு, குணம், புத்தி இவைகளின் வேறுபாடுகளை வர்ணிக்கும் கட்டமும், குற்ருலக் காட்சியின் வர்ணனைகளும் முதல்தரமாயிருக்கின்றன.

'விஜயமார்த்தாண்ட'மும் மாதவய்யாவுக்குப் பெருமையளிக்கக் கூடிய நாவலே. அந்தணராயுள்ள ஆசிரியர்கள் தங்களது

மரபினரின் பழக்க வழக்கங்களையே நாவல்களில் புகுத்துவிடுகின்றனர் என்னும் பழியை நாம் அடிக்கடி கேட்கிறோம். மாதவய்யா அந்தணரின் வாழ்க்கையை நன்காராய்ந்துள்ளபடியால், அந்தணரின் சமூக வாழக்கையைப்பற்றி எழுதுவது சகஜமாயினும், அந்தணரல்லாத சமூகத்தையும் அவர் கண்டறிந்து எழுதக்கூடுமென்பதை இக்கதையில் காட்டிருக்கிறார். 'பத்மாவதி சரித்திரம்' சாமான்னிய சமூக வாழக்கையை வர்ணிக்கிறது. ஆனால் 'விஜயமார்த்தாண்டம்' உணர்ச்சி தரும் சம்பவங்கள் நிறைந்த நாவலாகும். இதன் கதை பின்வருமாறு:—

புலிமலையின் கடைசி ஜமீன்தார் சந்ததியில்லாமல் இறக்கவே, அவரது நெருங்கிய உறவினர்களான விஜயமார்த்தாண்ட தேவரும் வீரச் சங்கிலித் தேவரும் ஜமீனுக்காக வழக்காடினர். விஜய மார்த்தாண்டம், ஜில்லா கோர்ட்டிலும் சென்னை ஹைகோர்ட்டிலும் வென்றானாயினும், பிரிவி கௌன்ஸிலுக்கு அப்பீல் செய்த வீரச்சங்கிலியே கடைசியில் ஜமீனை யடைந்தான். விஜயமார்த்தாண்டன் ஜீவனோபாயத்திற்காக கவர்னரைக் கண்டு டிப்டி கலெக்டர் உத்தியோகம் பெற்றான். உடனேதான் இளமையிலிருந்து காதலித்து வந்த சிவகாமியை மணந்து இல்லறம் நடத்துவதின் பொருட்டுச் சொற்ப விவசாயம் செய்து வயிறு கழுவி வந்த அவளது தந்தையாரான வேலாயுதத் தேவருக்கு ஒரு கடிதமெழுதினான். இக்கடிதத்தை புலிமலை போஸ்ட்மாஸ்டரான சுப்பையர் உடைத்துப் பார்த்து விஷயமறிந்து வேலாயுதத் தேவருடன் சூழ்ச்சி செய்து சிவகாமியைப் புதிய ஜமீன்தாரான வீரச் சங்கிலிக்கு மணம் செய்வித்து அவரது தயவைப் பெற எத்தனித்தான். அவ்விதமாகவே மணமும் நிச்சயமாயிற்று. இதையறிந்த விஜயமார்த்தாண்டம் புலிமலை சென்று வேலாயுதத்தேவருடன் சிவகாமி விஷயமாக தன் உரிமையை வற்புறுத்திப் பார்த்தும் பயன்படாமற் போகவே, அவனிடம் அபயமடைந்த சிவகாமியைத் தூக்கிச் சென்றான். வேலாயுதத் தேவர் கூக்குரலிடவும் கும்பல் சேர்ந்துவிடவே, விஜயமார்த்தாண்டம் சிவகாமியை விட்டுவிட்டு தனித்துச் செல்ல வேண்டியதாயிற்று. அவன் மலைக் காட்டுவழியாய்ப் போகையில் சில கள்வர்களால் தாக்கப்பட்டான். கள்வர் தலைவனான வீரமாகாளி விஜய மார்த்தாண்டம் இன்னாரென அறிந்தவுடன், சிவகாமியை எப்படியேனும் அவனிடம் கொண்டுவந்து சேர்த்துவிட உறுதிகொண்டான். விஜய மார்த்தாண்டம் வேலையை ராஜிநாமா செய்துவிட்டு தான் மோரீசுக்குப் போவதாக வீரச் சங்கிலிக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டு கள்வர் குகையாகிய பருந்துக் கூட்டில் தங்கலானான். சிவகாமி ஒருநாள் வீட்டில் தனித்திருக்கையில் கள்வர் அவளைத் தூக்கிச்சென்று காதலனிடம் சேர்த்தனர். அதோடு புது ஜமீன்தாரும் ஊராரும் நாடகம் பார்க்கும் பொருட்டு முருகன்குன்றில் கூடியிருந்த சமயம் பார்த்து கள்வர்கள் மணப்பந்தலுக்குத் தீவைத்தும் அரண்மனைப்பொக்கிஷத்தைக் கொள்ளையடித்தும் சென்றனர். பின்னர் கள்வர்பிடிபட்டுச் செஞ்சாலையினையில் விசாரணை நடந்தது. சிவகாமி கொல்லப்பட்டாள் என்று சொல்லப்படவே, வீரமாகாளி தூக்கு தண்டனை பெற்றான்.

தூக்கிலிடும் சமயம் இதையறிந்த விஜய மார்த்தாண்டம் ஜில்லா கலெக்டரிடம் சென்று தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு உண்மையான விஷயங்களை யறிவித்தான். வீரமாகாளி தூக்கு தண்டனையிலிருந்து விடுபட்டான். புனர் விசாரணை நடந்தது. விஜய மார்த்தாண்டனுக்கும் சிவகாமிக்கும் உள்ள காதலை யுத்தேசித்து, சிவகாமியை வீட்டிலிருந்து கடத்திய குற்றத்திற்காக மட்டும் விஜயமார்த்தாண்டம் 5 வருஷகாலம் சிக்ஷிக்கப்பட்டான். விஜய மார்த்தாண்டம் சிறையிலிருக்கையில் சிவகாமி தனது கற்பைக் காப்பாற்றிக் கொள்வதற்குப் பெரிதும் சிரமப்பட வேண்டியிருந்தது. சுப்பய்யரும் அவளது தகப்பனாரும் அவளை வீரச்சங்கிலிக்கு மணம் செய்துவிடப் பல சூழ்ச்சிகள் செய்தனர். வீரச் சங்கிலியும் அவள் தனித்திருக்கும் சமயம் பார்த்து அவளது கற்பையழிக்க

முயன்முன். சிவகாமி புலிமலையை விட்டுச் செஞ்சாலையினைக்கு ஓடி அங்கு பல தூர்த்தர்களால் தொடரப்பட்டு, கடைசியாக ஜில்லா கலெக்டரின் சிபார்சின்பேரில் ஒரு மிஷன் பாடசாலையில் 30 ரூபாய் சம்பளத்தில் உபாத்தியாயினியாக அமர்ந்தாள். அங்கும் வீரச்சங்கிலி அவளைச் சும்மாவிடவில்லை. விஜயமார்த்தாண்டம் சிறையில் பேதிகண்டு இறந்து விட்டதாக ஒரு பொய்க்கடிதம் வந்தது. சிவகாமி தற்கொலை புரிய எத்தனித்தாள். இதையறிந்த மிஷனரி துரைசானி மதவிஷயமாகவும் வாழ்க்கையின் பலன் விஷயமாகவும் பல போதனைகள் செய்து அவளது எண்ணத்தைக் கைவிடும்படி செய்தாள். ஒருநாளிரவு காமவெறி கொண்ட வீரச்சங்கிலி அவளது வீட்டில் நுழைந்து அவளைப் பலாத்காரம் செய்தான். விடுதலையடைந்த விஜயமார்த்தாண்டம் அது சமயம் காதலியின் வீட்டுக்கு வந்து அவளிருந்த நிலையைக்கண்டு அவளைக் காப்பாற்றினுன். காதலர்கள் ஒன்று சேர்ந்தனர்.

இக்கதையானது 'ரொமான்ஸ்' என்று சொல்லப்படும் அற்புத சம்பவங்கள் நிறைந்த கதையின் பாணியிலிருப்பினும் பொதுவாக வாழ்க்கையை ஒட்டியதாகவே இருக்கிறது. இங்கு ஜமீன்தார்களின் ஊழல்களும் கள்ளர் மறவர்களின் வீர வாழ்க்கையும் வீரமாகாளியின் பெருந்தன்மையும் நன்கு சித்தரிக்கப் படுகின்றன. கோர்ட் விசாரணைக் காட்சிகள், மலைக்காட்டு வர்ணனை, கள்வர்களின் பேச்சு, பாட்டு, முதலியன அற்புதமாக இருக்கின்றன. பொதுவாகப் பாத்திரங்களுக்குப் பொருத்தமான நட்புச் சொற்களை ஆசிரியர் பிரயோகித்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. சிவகாமி தனது கற்பைக் காக்கப்பட வேண்டியிருந்த பல அவஸ்தைகளை விவரிக்கையில் இந்து சமூகம் இளம் பெண்கள் விஷயமாக நடந்து கொள்ளும் கொடுமைகள் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலிலும் திருவள்ளுவர், கம்பர், தாயுமானவர் முதலியோர்களின் நூல்களிலிருந்து தகுந்த மேற்கோள்கள் கூறப்பட்டிருக்கின்றது. இது இனிய செந்தமிழ் மணம் வீசும் நாவல் என்றே சொல்ல வேண்டும்.

இவ்விரு நாவல்களும் தமிழ் நாவல் இலக்கியத்தின் அபிவிருத்தியில் மாதவய்யாவுக்கு ஒரு கௌரவமான இடத்தையளிக்கின்றன. உண்மையான உயர்தர தமிழ்நாட்டு நாவல்களை எழுத விரும்புவோர் மாதவய்யா தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதிய நாவல்களைப் படித்து அவரது முறைகளைத் தழுவினுல் பெரிதும் பயனடைவர் என்பது திண்ணம்.

---

# சரீரப் பாதுகாப்பு

டாக்டர் டி. எஸ். திரிமூர்த்தி

ஜீவராசிகள் எல்லாவற்றுள்ளும் மனிதன் சிறந்தவனுகக் கருதப்படுகிறுன். இதனுலே தமிழ் மூதாட்டியாகிய ஔவைப் பிராட்டியாரும் "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது" என்று கூறினுர். நாகரீகம் மிகுந்த இக்காலத்தில் மனிதன் தனது ஊக்கத்தினுல் சாதித்திருக்கும் அபாரமான காரியங்கள் பல. ஆனுல் எக்காரியத்தைச் செய்வதற்கும் "சுவரை வைத்துக் கொண்டல்லவோ சித்திரம் எழுதவேண்டும்" என்பதற்கிணங்க சரீர ஆரோக்கியம் அவசியம். அஃதில்லாவிட்டால் எத்துணை ஆஸ்தி படைத்திருந்தாலும் மனிதன் நடைப்பிணமாவானேயொழிய, அவனுல் எக்காரியமும் செய்ய முடியாது. இதையறிந்தே நம் முன்னோர்கள் அநேக விதங்களில் சுகாதார விதிகளை நமக்குப் போதித்திருக்கிறுர்கள். இக்கொள்கைகளை, மதத்திலும் புகுத்தியிருக்கிறுர்கள். "நோய்க் கிடங்

கொடேல்" என்ற ஆன்றோர் வாக்கை மேற்கொண்டு மனிதன் வியாதிவராமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். அவ்வாறு காத்துக்கொள்ள வேண்டுமானால், வியாதிகளைப் பற்றியும் அவை எவ்வாறு உண்டாகின்றன, எவ்வாறு பரவுகின்றன என்ற விஷயங்களைப்பற்றியும் தெரிந்து கொள்ளவேண்டிய தவசிய மாகையால் அவைகளைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

## வியாதிகள் உண்டாவ தெப்படி ?

சில வியாதிகள் பரம்பரையாகவே சில குடும்பங்களிலிருந்து வருகின்றன. மனு, ஆண்மக்களை வித்திற்கும் பெண்களை நிலத்திற்கும் ஒப்பிட்டார். அதாவது வித்திலிருந்தே வியாதிகள் பிதிரார்ஜிதமாக வருகின்றன என்பது அவர் கொள்கைபோலும். இப்படிப் பரம்பரையாக வரும் வியாதிகளுக்கு உதாரணமாக (1) வர்ணக் குருடு (2) ரத்த சம்பந்தமான சில வியாதிகள் (3) வாதம் (4) காக்காவலிப்பு (5) மேகவியாதிகள் (6) பைத்தியம் முதலிய மூளைக் கோளாறுகள் இவைகளைச் சொல்லலாம். இவைகளைக் கர்ம வியாதிகள் என்றும் சொல்லுவார்கள்.

இன்னும் சில வியாதிகள் சிசு கர்ப்பத்திலிருக்கும் போதே ஆரம்பிக்கின்றன. இவைகளைச் சிசுபிறந்த உடனேயே காணலாம். இவை தகப்பனாரிடமிருந்தோ அல்லது தாயாரிடமிருந்தோ அல்லது ஜனன சமயத்திலேற்படும் அசம்பாவிதங்களிலிருந்தோ ஏற்படுகின்றன. ஒரு ஸ்திரி கர்ப்பிணியென்று தெரிந்த காலத்திலிருந்து கர்ப்பகாலம் பூராவும் வியாதிச் சின்னங்கள் ஏதேனும் காணப்படில் வியாதியை முதிர விடாமல் உடனே வைத்தியரைக்கொண்டு பரீட்சை செய்வித்துத் தகுந்த சிகிச்சைகளைச் செய்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்து கொள்ளுவதால் பிரசவகாலத்திலேற்படும் இழுப்பு, ஜன்னி, முதலிய அநேக ஆபத்துக்களை நீக்கலாம். குழந்தைகள் இரட்டையாகவோ அல்லது வேறு கோளாறான முறையிலோ இருந்தால் சந்தர்ப்பத்திற்கேற்றபடி முன் ஜாக்கிரதையாயிருந்து கொள்ளலாம். ஆனால் "கர்ப்பிணிகள் சுகாதாரம்" என்பதே தனிப் பெரும் விஷயமாதலால் அதை இத்துடன் நிறுத்திக்கொள்வோம்.

அநேக வியாதிகள் விஷக்கிருமிகளினாலேயே உண்டாகின்றனவென்று சொல்லலாம். அவை நாம் சுவாசிக்கும் காற்று, புசிக்கும் போஜன பதார்த்தங்கள், குடிக்கும் தண்ணீர் முதலியவைகளின் வழியாகவும், பூனை, நாய் முதலிய மிருகங்களாலும், வியாதிஸ்தர் உபயோகப் படுத்திய, ஆடைகள், பாத்திரங்கள் முதலியவைகளைத் தொடுவதாலும், அவர்கள் வசித்த வீட்டில் வசிப்பதாலும் நமது உடம்பிற்குள் சென்று வியாதிகளை உண்டு பண்ணுகின்றன.

### காற்று

நாம் உட்கொள்ளும் காற்றில் அநேக வித அசுத்தங்கள் இருக்கின்றன. நாம் சுவாசிக்கும்போது வெளியே விடும் காற்று கரிமலவாயுவாக மாறுகிறது. விளக்குகள் முதலியவை எரிவதாலும் ஆகாயத்தில் கரிமலவாயு அதிகமாகிறது. புகையினால் ஆகாயம் அசுத்தமடைகிறது. அப்புகை ஒவ்வொரு வீட்டின் சமையலறையிலிருந்தும், கொல்லன் பட்டறை, செங்கல் சூளை முதலிய தொழிற்சாலைகளிலிருந்தும் கிளம்புகிறது.

இதுவன்றி ஆகாயத்தில் தூசியும் கிருமிகளும் நிறைந்திருக்கின்றன. பஞ்சும், பருத்தி நூல் துண்டுகளும், உரோமங்களும், அழுகி உலர்ந்துபோன சத்தைகளும் தூசியாய்ப் பறக்கின்றன. க்ஷய ரோகத்தை உண்டுபண்ணும் கிருமிகளும் இவைகளுடன் கலந்திருக்கலாம். நீராவியும் கலந்திருக்கும் தொழிற்சாலைகளிலிருந்து அங்கே தயாரிக்கப்படும் சாமான்களுக்குத் தகுந்தவாறு திராவக சம்பந்தமான ஆவிகளும் பாஷாணப் புகைகளும் கிளம்பலாம். இதல்லாமல் சாக்கடைகளிலிருந்தும்,வீட்டுக்கருகாமையில் காணப்படும் சாணம், எரு, குப்பை முதலிய குவியல்களிலிருந்தும் துர்நாற்றமுள்ள காற்று ஆகாயத்தில் கலக்கிறது.

மேற்சொன்னஅசுத்தங்களினால் அநேகமாய்ச் சுவாசகோசங்களுக்கே வியாதி ஏற்படுகிறது. ஆனால் காற்றில் பறக்கும்

கிருமிகளினால் உண்டாகும் வியாதிகளில் முக்கியமானவை இன்புளுவென்சா ஜுரமும் க்ஷயரோகமும், பெரியம்மையுமாதலால் அவைகளை முதலில் கவனிப்போம்.

## க்ஷயரோகம்

இது க்ஷய அணுக்களால் உண்டாவது. க்ஷயரோகி இருமும்போது அவன் தன் கபத்துடன் இவ்வணுக்கள் காற்றில் கலக்கின்றன. அவன் கபத்தைக் கண்ட விடங்களில் உமிழ்வதால் அது உலர்ந்து அதிலுள்ள அணுக்களும் காற்றில் சேருகின்றன. இதன்றி கபத்தைத்துடைத்த அவன் கைகளால் தொடுவதால் எல்லாத் தட்டுமுட்டுச் சாமான்களின்மீதும் ஆடையிலும், படுக்கையிலும், வீட்டின் சுவர்களிலும், கட்டில்களிலும் இவ்வணுக்கள் தங்குகின்றன. இவைகளைத்தொடுவோரை இவ்வியாதி ஒட்டிக்கொள்ளுகிறது. ஆகையால் முக்கியமாக நோயாளி வசித்த வீட்டில் இருப்போருக்கு இவ்வியாதி சுலபமாய் வருகிறது. இதன் கொடுமையை உத்தேசித்தே சமீபத்தில் மேன்மைதங்கிய வைசிரீனி லேடி லின்லித்கோ அம்மையார் இவ்வியாதியை இந்தியாவை விட்டு ஒழிக்க எண்ணி ஒரு நிதி சேகரித்து ஒவ்வொரு ராஜதானிக்கும் சில தொகைகளைக் கொடுத்திருக்கிறார்கள்.

வேறு காரணங்களிலிருந்தபோதிலும் க்ஷயம் முக்கியமாக க்ஷயரோகிகள் கண்டவிடங்களிலெல்லாம் கபத்தை உமிழ்வதன் மூலம் பரவுகிறது. நமது தேசத்தில் இது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

இதைத் தடுக்க நாம் கவனிக்கவேண்டிய விஷயங்களாவன:—

1. நாம் வசிக்கும் வீடு காற்றோட்டமுள்ளதாயிருக்கவேண்டும், சூரிய வெளிச்சம் வீட்டின் எல்லாப் பாகங்களிலும் படவேண்டும். வீட்டில் இருட்டே யிருக்கக்கூடாது. முக்கியமாக நாம் உபயோகப்படுத்தும் அறைகளிலும் நல்ல காற்றுவரவசதிகளை ஏற்படுத்தவேண்டும். ஜன்னல்களைச் சற்று அதிகமாக்கினால் காற்றுக்குப் பஞ்சமே ஏற்படாது. செலவும் அதிகமில்லை.

2. உடம்புக்கு நல்ல வலுவைக் கொடுக்கும் ஆகாராதிகளைப் புசிக்கவேண்டும். உதாரணமாக, பால், வெண்ணெய், முட்டை, கூடுமானால் புதிய மாமிசம் இவைகளைத் தாராளமாய் உபயோகிக்க வேண்டும்.

3. குழந்தைப் பருவத்தில் தொண்டை வியாதிகள் சளி, இருமல் முதலியவை அணுகாமல் பாதுகாப்பது அவசியம். அப்படி வியாதிகள் ஏற்பட்டால் உடனே தகுந்த சிகிச்சை செய்துகொள்ள வேண்டும். ஏனெனில் க்ஷய வியாதியானது இந்நிலையிலிருக்கும் குழந்தைகளை எளிதில் பீடிக்கும்.

4. குடும்பத்தில் இவ்வியாதிஸ்தரிருந்தால் அவரை வேறு அறையில் இருக்கச்செய்து, கிருமிகளைக் கொல்லும் பினைல்போன்ற மருந்துகலந்த நீரில் அவனைஉமிழச் செய்யவேண்டும். வியாதிஸ்தன் உபயோகித்த போஜன பாத்திரங்களைக் கொதிக்கும் நீரிலோ அல்லது நீராவியிலோ சுத்தம் செய்யவேண்டும். சாப்பாட்டிற்குத் தயாரிக்கப்பட்ட ஆகாராதிகளை ஈக்கள் அணுகவொட்டாமல் மூடி வைக்கவேண்டியது. வியாதியை தடுக்கும் முறைகளில் முக்கியமானது. குழந்தைகளுக்கு (முக்கியமாக)ப் பாலைக் காய்ச்சியே கொடுக்கவேண்டும். இதைச் செய்வதற்குச் செலவு ஒன்றுமில்லை.

## பெரிய அம்மை

தொன்று தொட்டு மாரியாத்தாளென வழங்கும் இவ்வியாதியை எல்லோருமே அறிந்திருப்பார்கள். இந்தியா தவிர மற்றத் தேசங்களில் இந்நோய் போய்விட்டதென்றே சொல்லலாம். நம் நாட்டிலோ வியாதியால் பீடிக்கப்பட்டவர்களில் 100-க்கு 20-பேர் இதனால் மடிகின்றனர். இவ்வியாதியை உண்டாக்கும் அணுக்கள் சரீரத்தில் பிரவேசித்த உடனேயே ஜுரமும், சரீரத்தின் எல்லாப் பாகங்களிலும் தடிப்புகளும் உண்டாகின்றன. பின்னர் இத்தடிப்புகள் கொப்புளங்கள் போன்ற புண்களாக மாறுகின்றன. இவை ஆரம்

பித்த 16 நாட்களில் உலர்ந்து போகின்றன. படிப் படியாக ஜுரமும் குறைந்துவிடும். இதன் மத்தியில் பிரமாதமான அபாயங்களு மேற்படலாம். கண் குருடாய்ப் போனலும் போகும். தொண்டையடைத்துப்போகும். பக்கவாதம் அதாவது கை கால்கள் விழுந்து போதலும் சம்பவிக்கலாம். வைசூரியால் தழும்புகள் ஏற்பட்டு முகமே முழுதும் மாறி விகாரமாவது சகலரும் அறிந்த விஷயமே. நமது தேசத்தில் கண் குருடாய்ப் போவதற்கு முக்கிய காரணம் இந்த வியாதியேயென்று தெரியவருகிறது. அதிக சாவும், தப்பினல் அதிக தேக அசௌகர்யங்களும் சம்பவிக்கும் நோயாக வைசூரியிருந்தபோதிலும் இதை எளிதில் தடுக்கலாம் என்று எல்லாத் தேசங்களிலும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.

ஆனல் இதை வரவொட்டாமல் செய்ய வழியில்லையா வென்றால் நிச்சயமாயிருக்கிறது. அதாவது அம்மை குத்திக்கொள்வதுதான். குழந்தை பிறந்த நான்கு மாதத்திற்குமேல் ஆறு மாதத்திற்குள் அம்மை குத்திக்கொள்வது உத்தமம். ஏழாவது வயது வந்ததும் இன்னொரு முறை குத்திக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்தால் அம்மை வராது. ஒரு வேளை வந்தாலும் கடுமையாக இராது.

வைத்திய நிபுணர்கள் காற்றின் மூலமாகப் பரவும் ஓர் அணுவால் இவ்வியாதி உண்டாகிறதெனத் தீர்மானித்திருக்கிறார்கள். தவிர இந்த நோய் நோயாளியைத் தொடுவதாலும் அவன் சமீபத்திலிருப்பதாலும் பிறருக்கு உண்டாகிறது. ஆகையால் இந்த நோயாளிகளின் வீட்டிற்கே யாரும் போகக்கூடாது. அப்படியே அவன் வீட்டில் இருப்போரும் மற்றவர்களுடன் நெருங்கிக் கலக்கக்கூடாது. இந்த அம்மையானது ஒரு வீட்டில் வந்திருக்கிறது. பிறர் அங்கே போகாது எச்சரிக்கப்படவேண்டும் என்ற எண்ணத்துடனேயே நமது முன்னேர் வீட்டின் முன் வாசலில் வேப்பந் தழையைக் கட்டும் பழக்கத்தை யேற்படுத்தினர். இந்த விதியையும் நாம் அநுசரிப்பதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. வியாதிஸ்தன், வியாதி சொஸ்தமாகி, மூன்று நான்கு முறை ஸ்நானம் செய்து புண்கள் உலர்ந்து விழுந்து பிறகே வீட்டைவிட்டு வெளியேறவேண்டும்.

## தண்ணீர்

தண்ணீரிலுள்ள அசுத்தங்கள் பல. அவைகளுள் வாயு பதார்த்தங்களும், உலோகங்களும் கரைந்து போயிருக்கலாம். மணல், சேறு, தாவர வர்க்கங்கள் சம்பந்தப்பட்ட வஸ்துக்கள், அணுக்கள், புழுக்களின் முட்டைகள் முதலியவை மிதக்கின்றன. இவ்வசுத்தங்கள் ஆறு முதலியவைகள் உற்பத்தியாகு மிடங்களிலேயே கலக்கலாம். அல்லது வழியில் சேர்க்கப்படலாம். நதிகள் பாயும் நிலத்தைப் பொறுத்துமிருக்கலாம். கிணறுகளும், ஏரிகளும், மனிதனும் ஜீவராசிகளாலும் அசுத்தப்படுத்தப் படுகின்றன. தண்ணீரை வீடுகளில் சேகரித்து வைக்கும் பாத்திரங்களிலும் தொட்டிகளிலும் அழுக்குச் சேருவதுண்டு. தண்ணீர்க் குழாய்களிலும் அசுத்தம் படியலாம். தண்ணீர் மூலம் வியாபிக்கும் வியாதிகளுள் முக்கியமானவை, காலரா, டைபாயிட் சுரம், சீதபேதி, நரம்புச்சிலந்தி முதலியன. இனி இவைகளைக் கவனிப்போம்.

## டைபாயிட் சுரம்

இது ஓர்விதக் கிருமியினல் உண்டாகும் சுரம். இச்சுரத்தினல் பீடிக்கப்பட்ட ஒருவன் மலத்தினின்றும் மூத்திரத்தினின்றுமே இவ்வியாதி பரவுகிறது. இன்னும் இக்கிருமிகள் கலந்த பால், தண்ணீர் முதலியவைகள் மூலமாயும் வியாதிஸ்தன் தொட்ட சாமான்களைத் தொடுவதாலும் இவ்வியாதி வருகிறது. இந்த ஜுரம் சாதாரணமாய் மூன்று வாரங்கள் இருக்கும். ஜுரம் வெகு கடுமையாய் இருக்கலாம். ஜன்னியும் வரலாம். சரீரத்திலுள்ள எல்லா அவயவங்களும் பாதிக்கப்படுகின்றன. ஜுரம் வந்து சொஸ்தமான பிறகுங்கூட இக்கிருமிகள் பித்தப்பையைப் போன்ற உறுப்புகளில் ஒளிந்துகொண்டிருக்கும். அப்படி ஒளிந்துகொண்டிருக்

கும்போது சரீரத்துக்கு எவ்வித கெடுதி லும் செய்யாமல் தாங்களிருப்பதையே தெரியப்படுத்தாமலிருப்பது சகஜம். அப் படிச் சரீரத்தில் இக்கிருமிகளைத் தனக் குத் தெரியாமல் வைத்துக் கொண்டிருக் கும் ஒவ்வொருவனும் சமூகத்திற்குப் பெரிய விரோதியாகின்றான். இப்பேர்ப் பட்டவர்களிடமிருந்தே இவ்வியாதி பரவு வதால் இவர்களைக்கண்டு பிடித்து இவர் களுக்குச் சிகிச்சை செய்யவேண்டும். இவர்களைச் சமையற்காரராக அமர்த்தவே கூடாது. ஆகாராதிகளைத் தொடவும் விடக்கூடாது. அவர்களுடன் கலப்போ ரும் ஜாக்கிரதையாயிருந்து ஊசிகுத்திக் கொள்ளுதல் முதலிய பாதுகாப்புகளைச் செய்து கொள்ளவேண்டும்.

## காலரா அல்லது வாந்திபேதி

இது கால்ராக் கிருமிகளால் உண்டா கும் வியாதி. முன் ஜாக்கிரதையாயிரா விட்டால் இது அதிசிக்கிரம் பரவும். பேதி அடிக்கடியாகும். வாந்தியுமெடுக் கும். அதிலும் ஜனங்கள் அதிகமாகக் கூடும் யாத்திரை ஸ்தலங்களில் இது ஆரம் பிக்குமானல் இதனுல் அதிக உயிர்ச் சேதம் ஏற்படும்.

காலராக் காலங்களில் பின்வரும் வியாதி களைக் கவனித்தல் அவசியம்.

1. ஜீரணசக்தி குன்றிப் போயிருந் தால் அந்தச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டும்.

2. பட்டினியிருத்தல் கூடாது.

3. பழுக்காத பழங்கள், அழுகிய பழங்கள், அஜீர்ணத்தை யுண்டாக்கும் போஜன பதார்த்தங்கள் இவைகளைத் தவிர்க்க வேண்டும்.

4. ஹோட்டல் முதலிய விடங்களில் பண்டங்களை வாங்கித் தின்னக் கூடாது. பானங்களைக் குடிக்கக் கூடாது.

5. தண்ணீரைக் காய்ச்சியே குடிக்க வேண்டும்.

6. இரவில் அதிக நேரம் கண் விழிக் கக் கூடாது.

7. பேதி ஆரம்பித்ததுமே தக்க மருந்து சாப்பிட வேண்டும்.

8. வியாதி ஊரில் ஆரம்பமான வுடனே எல்லோருமே ஊசி குத்திக் கொள்ள வேண்டும்.

## சீதபேதி

இது இருவகைப்படும். ஒருவகைச் சீதபேதியில் வெறும் ரத்தமும் சீதமுமே யிருக்கும்; மலமேயிராது. மற்றொன்றில் சிறிது மலமும் கலந்து இருக்கும். இவை வெவ்வேறு விதமான கிருமிகளாலுண்டா கின்றன. சிகிச்சையும் வெவ்வேறே. காலராவைத் தடுக்கச் சொன்ன விதிகள் இவற்றிற்கும் பொருந்தும் ஆனல் வியாதி வந்த பிறகுதான் ஊசி குத்திக்கொள்ள வேண்டும்.

அதிசீக்கிரத்தில் பரவும் தன்மையும், ஒரே சமயத்தில் ஏராளமான ஜனங்களைப் பீடிக்கும் தன்மையுமுள்ள மேற்சொன்ன மூன்று வியாதிகளும் பெரும்பாலும் தண் ணீர் மூலமாகவே பரவுகின்றன. ஆகை யால் தண்ணீரை நன்றாய்க் கொதிக்க வைத்த பின்னரே பருகவேண்டும். பாலை யும் அப்படியே காய்ச்சிக் குடிக்க வேண் டும். அடுத்தபடியாக ஈக்கள் மூலம் இவ் வியாதிகள் வியாபிக்கின்றன. ஈக்கள் நோயாளி கழிந்த மல ஜலங்களில் உட் கார்ந்த பின்னர் ஆகாராதிகளின் மேலும் உட்காருகின்றன. ஆகையால் ஈக்களை உட்காரவிடாமல் ஆகார பதார்த்தங்களை மூடிவைக்க வேண்டும். ஆகாரம் சூடா யிருக்கும்போதே சாப்பிடுவது நலம்.

## நரம்புச் சிலந்தி

நரம்புச் சிலந்தியுள்ள ஒருவன் தண்ணீ ரில் இறங்குவானேயானல், அவன் காலி லுள்ள புண்ணின் வழியாக உள்ளிருக் கும் சிலந்தி தன் முட்டைகளைத் தண்ணீ ருக்குள் இடுகிறது. இம் முட்டைகளைத் தண்ணீர்ப் பூச்சிகளுள் ஒரு விதமான பூச்சி விழுங்குகின்றது. அப்பூச்சியின் வயிற்றில் இம்முட்டைகள் வெவ்வேறு பிராயத்தை யடைகின்றன. மனிதன் இந் தத் தண்ணீரை அப்படியே உபயோகிப் பானேயானல் இப்பூச்சிகளை விழுங்குகி ருன். அவன் வயிற்றின்கண் பூச்சிகள் சாகின்றன. ஆனல் பக்குவமடைந்த இச் சிலந்திகள் சாகாமல் சரீரத்தில் தசை

நார்களின் மத்தியில் வந்து சேருகின்றன. முக்கியமாகக் கால்களிலேயே இவைகள் வசிக்கின்றன. சில நாட்களுக்கெல்லாம் இவை பெரியவைகளாகப் புண்கள் உண்டாகின்றன. தடுக்கும்விதம்: தண்ணீரைக் காய்ச்சிக் குடிக்கவேண்டும். தீராத பக்ஷத்தில் துணியை நன்காக மடித்துத் தண்ணீரை வடிகட்டிக் குடிக்கலாம். முக்கியமாக இறங்கு கிணறுகளுள்ள இடங்களிலேயே இவ்வியாதி காணப்படுவதால் அக்கிணறுகளை இறைப்புக் கிணறுகளாக மாற்ற வேண்டும்.

## புழுக்களினால் உண்டாகும் வியாதிகள்

புழுவர்க்கத்தில் மனிதனுக்கு அதிக வியாதியை யுண்டுபண்ணுவது கொக்கிப் புழு. இது தண்ணீர், ஆகாரம், நகம் முதலியவைகளின் மூலம் வயிற்றுக்குட் செல்லலாமென்று சொல்லப்படுகிறது. ஆனால் அவை அப்படிச் செல்லுவதில்லை. மலத்திற் கழிக்கப்பட்டு ஈரமான தரையினின்றுமே முட்டை ரூபமாகவந்த இக்குட்டிப் புழுக்கள் மனிதனைத் தாக்குகின்றன. இவை ஈரமான தரையிலும் புற்பூண்டுகளின் மேலேயும் வசிக்கின்றன.

காலுக்குச் செருப்பு முதலிய எவ்வித பாதுகாப்பு மில்லாமல் நடப்பதால், இப்புழு கால் விரல்களுக்கிடையயுள்ள சருமத்தின் வழியாக சரீரத்துக்குட் புகுந்து பெருகிக் கடைசியாகச் சிறுகுடலையடைந்து அங்கே வசித்து ரத்தத்தை உறிஞ்சிச் சோகையை உண்டாக்குகிறது. தவிர ரத்தத்தைக் கெடுக்கும் ஒரு வித விஷத்தையும் இது உண்டுபண்ணுவதால் ரத்தம் குறைந்து சரீரம் வெளுக்கிறது. பசி குறைகிறது. நாளடைவில் இருதயப் படபடப்பும் மூச்சுத்திணறலும் உண்டாகின்றன. இந்நோயாளிகளுக்கு ருசியே மாறிவிடுகிறது. மண், சாம்பல் முதலியவைகளைத் தின்னப் பிரியப் படுவார்கள்.

### தடுக்கும் விதம்

ஜனங்கள் கண்ட விடங்களிலெல்லாம் மலஜலம் கழிக்கக் கூடாது. இதற்குச் சுகாதார முறையில் கக்கூஸ்கள் கட்டப்படவேண்டும். தினத்திற் கிருமுன்று அல்லது தினந்தோறுமாவது கக்கூஸ்களைச் சுத்தப்படுத்தி அசுத்தத்தை கிராமத்து வெளியே சற்றுத் தூரத்தில் குழிகளில் புதைத்து மண்ணால் மூடவேண்டும். திருவிழாக்காலங்களில் அதிகக் கக்கூஸ்கள் ஏற்படுத்தி அசுத்தத்தைச் சீக்கிரம் அப்புறப்படுத்தி முன் சொன்னது போலவே குழிதோண்டிப் புதைக்க வேண்டும்.

இவ் வியாதிஸ்தர்கள் மலங்கழித்த தரையில் நடக்கும்படி ஏற்பட்டால் வெறுங் காலுடன் நடக்காமல், செருப் பணிந்துகொண்டு நடந்தால் இவ்வியாதியை அணுகவொட்டாமல் நிச்சயமாய்த் தடுக்கலாம். வெளியே நடமாடும்போது எப்போதும் பாதரக்ஷை யணிந்து கொள்வது நல்லது.

## கொசுக்களினால் பரவும் வியாதிகள்

இவற்றுள் முக்கியமானது மலேரியா அல்லது முறைச்சுரம். மலேரியா அணுக்களால் இச்சுரம் உண்டாகிறது. பீடிக்கும் அணுக்களுக்குத் தக்கவாறு 24, 48, 72 மணிக்கொரு தடவையே வருவதால் இச்சுரத்திற்கு முறைச்சுரம் என்று பெயர். மலேரியா அணுக்களை பூதக் கண்ணாடியால் ரத்தத்தில் பார்க்கலாம். இந்தியாவில் மலேரியாவினால் வருஷத்திற்குச் சுமார் 10 லக்ஷம் ஜனங்கள் மடிகிறார்கள். நமது தேசத்தில் முக்கியமான வியாதி இதுவே. ஆகையால் வரவொட்டாமல் நாம் முக்கியமாய்த் தடுக்க வேண்டிய வியாதியும் இதுவே.

ஜுரம் வருவதற்கு முன்னர் சரீரம் குளிர்ச்சியடையும், சிறிது நேரத்துக்கெல்லாம் கடுமையான ஜுரம் வரும். வேர்வையுடன் இறங்கிவிடும். ஜுரம் அதிக நாட்கள் நீடிப்பதால் சரீரம் சுண்டிப்போகும். சுரக்கட்டிகள் உண்டாவதால் வயிறு மிகவும் பெருத்திருக்கும். உடம்பில் ரத்தம் குறையும். சருமம் மிருதுவாயில்லாமல் கரடுமுரடாகி விடும். லேசாய்க் காமாலையும் உண்டாகலாம். இத

னுல் மனிதன் ஒரு வேலையும் செய்ய முடியாமல் உபயோக மற்றவனுகிருன்.

கொசுக்களே இவ்வியாதிக்கு முக்கிய காரணம் ஆதலால் அவைகளை வளரவொட்டாமல் செய்வதும் நம்மைக் கடிக்காமல் பார்த்துக் கொள்வதும் நம் முக்கியமான வேலை. இதற்கு எல்லோரும் கொசு வலையை உபயோகித்தல் நல்லது. அது முடியாத பக்ஷத்தில் மலேரியா ஜுரமுள்ளவனுவது, கொசுவலைக் குள்ளேயே எவ்வளவு நேரம் இருக்க முடியுமோ அவ்வளவு நேரம் இரவைக் கழிக்க வேண்டும். ஏனெனில் அவனிடமிருந்தே வீட்டிலுள்ள மற்றையோருக்கும் வியாதி பரவுகிறது.

இக்கொசுக்களோ வென்ருல் தண்ணீர் தேங்கி நிற்குமிடங்களிலேயே வசிக்கின்றன. ஆகையால் தண்ணீர் தேங்கி நிற்பதைத் தடுக்க வேண்டும். இதற்கு கிராமத்தார் ஒன்றுபட வேண்டும். இதுமட்டுமல்ல. வீட்டினுள்ளே உடைந்துபோன பாத்திரங்களிலும், தொட்டிகளிலும் உரல்களிலும் தண்ணீர் தேங்கி நிற்கலாம். இதையெல்லாம் தடுக்க வேண்டும். இத் தண்ணீரை அவ்வப்போது அப்புறப் படுத்தி பாத்திரங்களை சுத்திசெய்ய வேண்டும். உடைசல்களை தூள் தூளாக்கித் தூர எறிய வேண்டும். ஏனென்ருல் கேவலம் கொட்டாங்கச்சியில்கூட தண்ணீர் சேருமாஞல் ஏராளமான கொசுக்கள் அதி சீக்கிரத்தில் அதில் நிறைந்து விடுகின்றன.

அடுத்த படியாகக் கொயினுவை ஒழுங்காகச் சாப்பிடவேண்டும். கொயினுவோ எந்தத் தபாலாபீசிலும் காலணுவிற்குக் கிடைக்கும். இதையேன் வாங்கிச் சாப்பிடக் கூடாது?

## இதர ஜந்துக்களினுல் பரவும் வியாதிகள்

இவைகளுள் முக்கியமானதாக 'ப்ளேக்' என்னும் விஷநோயைச் சொல்லலாம். இது ப்ளேக் கிருமிகளால் உண்டாகும் நோய். இதனுல் நெறிக்கட்டிகளும் விஷ ஜுரமும் உண்டாவதால் சீக்கிரத்தில் மரணம் சம்பவிக்கும். இந்த வியாதி எலிகளுக்கும் அணில்களுக்குமே யேற்படுவது. வியாதியால்பீடிக்கப்பட்ட எலிகளைத் தெள்ளுப்பூச்சிகள் கடிக்கின்றன. எலிகள் இறந்த பிறகு ஆகாரமில்லாமல் தெள்ளுப் பூச்சிகள் மனிதனைக் கடிக்கின்றன. ஆனுல் இந்த வியாதி பரவுவதற்கு எலிகளே முக்கிய காரணமாதலால் அவைகளைப் பொறிகள் வைத்தோ அல்லது விஷமிட்டோ கொல்ல வேண்டும். தானியங்களேயும், தின்னும் வஸ்துக்களையும் பத்திரமாய் வைக்காததால் வீட்டில் எலிகள் அதிகம் சேருகின்றன. ஆகையால் தானியங்களைச் சேகரித்து வைப்பதற்குப் பிரத்தியேகக் களஞ்சியங்கள் கற்சுவர்களாலோ, செங்கற் சுவர்களாலோ அமைக்கப்படவேண்டும். வீட்டிற் கருகாமையில் குப்பை கூளங்களைச்சேரவிடுவதால் அதற்குள் வளை செய்துகொண்டு எலிகள் வாசஞ் செய்கின்றன. ஆகையால் குப்பையை உடனே அப்புறப்படுத்த வேண்டும். வீடுகளில் சந்து பொந்துகளிருந்தால் அவைகளை அடைத்துவிட வேண்டும் ஒரு வீட்டில் இவ்வியாதி சம்பவித்த உடன் அவ்விட்டார் உடனே வீட்டைக் காலிசெய்து கொஞ்ச தூரத்திற்கப்புறம் சென்று வாசஞ் செய்ய வேண்டும். ஊரில் நோய் பரவினுல் ஊராரே ஊரைக் காலி செய்து விட்டு சற்று தூரத்தில் போய் வசிக்கவேண்டும். நோய் நின்ற சிறிது காலத்திற்குப் பிறகு வீடுகளிலுள்ள பொந்துக்களை மூடி, வீட்டைச் சுத்தம் செய்து சுண்ணும்பு பூசிய பின்னர் குடியேறலாம். ஊரில் எல்லோரும் ஊசி குத்திக் கொள்ள வேண்டும்.

இதுவரை முக்கியமான சில தொத்து வியாதிகள் எப்படி உண்டாகின்றன வென்பதையும் அவைகளைத் தடுக்கும் முறை என்ன வென்பதையும் கவனித்தோம். வியாதியில்லாமல் வாழ்வதே சிறந்ததெனினும் ஒருவனுக்கு நோயில்லாமல் மட்டும் இருந்தால் போதாது. கூன் குருடு செவிடு இல்லாமலிருத்தல் வேண்டும் ஒவ்வொருவரும் திடகாத்திர சரீர முள்ளவர்களா யிருத்தல் வேண்டும்.

அவ்வாறிருப்பது தினசரி வாழ்கையில் நாம் நடந்து கொள்ளுவதைப் பொறுத்து இருக்கிறது. இதைப்பற்றி

யும் நம் நூல்கள் சொல்லாமலில்லை. 'வைகறையாமந் துயிலெழுந்து தான் செய்யும் நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து......" என்று ஆசாரக் கோவை கூறுகிறது. அவ்வாறே அதிகாலையில் எழுந்திருத்தல் வேண்டும். சரீரம் சரியாய் இருக்க வேண்டுமானால் மனதும் சுத்தமாயிருக்க வேண்டும். கெட்ட பழக்கங்கள் கூடாது. கெட்ட எண்ணங்களையும் அணுக விடக் 'கூடாது. கூழானாலும் குளித்துக் குடி' என்றபடி தினமும் ஸ்நானம் செய்து உடம்பில் அழுக்கடையாமல் பாதுகாத்து வரவேண்டும், தினமும் இல்லாவிட்டாலும் அவ்வப்போதாவது எண்ணெ ஸ்நானம் செய்வது நல்லது. இதனாலேயே வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு என்று பழமொழியு மேற்பட்டது. "கந்தையானாலும் கசக்கிக்கட்டு" என்றபடி நாம் அணியும் ஆடைகளையும் மாசுமறுவில்லாமல் வைத்துக்கொள்ள வேண்டும்.

சரியான போஷணையில்லாமல் சரீரம் விருத்தியாகாது. நமது தேச மக்கள் திடனற்றவர்களாகி விட்டார்கள். தங்கள் ஆகார விஷயத்தில் அவர்கள் கவனம் செலுத்துவதேயில்லை. தேசத்தின் வறுமையும் இதற்கு அனுசரணையாகவேயிருக்கிறது. ஆகாரம் அளவிற் குறைந்தாலும் உடல் குன்றிப்போம். குணத்திற் குறைந்தாலும் உடல் க்ஷீணம் அடைவது திண்ணம். ஆகையால் ஆகாரம் சத்துள்ளதாய் (அதாவது சரீர அமைப்பிற்கு இன்றியமையாத வஸ்துக்களுள்ளதாய்) இருக்க வேண்டும்.

ஆகாரங்களில் முக்கியமாயிருக்க வேண்டியது "வைட்டமின்." வைட்டமின்களையே மட்டும் சாப்பிட்டு ஒருவன் ஜீவிக்க முடியாது. அன்றியும் நாம் சாப்பிடும் ஆகாராதிகளுள் ஒரு சிறு பகுதியாகவே இவை காணப்படுகின்றன வெனினும் இவை சரீரத்திற்கு இன்றியமையாதவை. இவை யில்லாவிட்டால் சில வியாதிகள் உண்டாகின்றன. சில சமயங்களில் மரணமே சம்பவிக்கலாம். எலும்புகள் முதிர்ச்சியடைய மாட்டா. சரீரம் வளராது. எலும்புகள் சுலபத்தில் முறிந்து போகலாம். பற்களுக்கு வலுவு குறையும். அவை தேய்ந்து விடுகின்றன. இந்த வைட்டமின்கள் எங்கேயிருக்கின்றன வென்று நாம் தேடிக்கொண்டு போக வேண்டியதில்லை. அதிக பணச்செலவு செய்து வாங்க வேண்டியதில்லை. முக்கியமான வைட்டமின்களெல்லாம் நாம் தினந்தோறும் உபயோகிக்கும், பால், வெண்ணெ, முட்டை, கீரை தினுசுகள் பழங்கள் முதலியவைகளிலேயே இருக்கின்றன.

ஆனால் நாம் பசுக்களை மறந்து விட்டோம். 'வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கலைவாருண்டோ?' என்றொரு பழமொழியுண்டு. உண்டு என்று சொல்லக்கூடிய ஸ்திதியில் இருப்பவர்கள் நாம் இந்தியர்தானென்று சொல்ல வேண்டும். நாட்டில் ஏராளமான பசுக்கள் இருக்கின்றன. அவைகளை விருத்தி செய்து அந்தப்பாலை உபயோகிக்காமல் டப்பாப் பாலையும், புட்டிப்பாலையும் உயர்ந்ததென நினைத்து அயல்நாடுகளிலிருந்து ஏராளமான பணம் கொடுத்துத் தருவிக்கிறோம்.

நெல்லைக் குத்தி அரிசியாக்கிச் சாப்பிட்டகாலம் போயிற்று. இப்போது தவிடெல்லாம் போக்கப்பட்டு பார்ப்பதற்கு மாத்திரம் அழகாயும் வெள்ளையாயு மிருக்கும் சத்தில்லாத மில்லரிசியையே சமைத்துச் சாப்பிடுகிறோம். கையால் குத்தித் தயாரிக்கப்பட்ட அரிசியில் வைட்டமினிருப்பதால் எவ்வளவோ குணங்கள் இருக்கின்றன. இருதயப் படபடப்பு, கைகால், வயிறு முதலிய விடங்களில் நீர் சுரத்தல் முதலிய வியாதிகள் உண்டாகா.

ஆகையால் எளிதில் எல்லோருக்கும் கிடைக்கூடிய கையினால் குத்தப்பட்ட அரிசி, முளைகட்டிய பருப்பு முதலிய தானியங்கள், கீரைதினுசுகள், எலுமிச்சை, ஆரஞ்சு முதலிய பழதினுசுகள், தக்காளி, வெண்டை முதலிய காய் தினுசுகள், பால், வெண்ணெ, முட்டை இவைகளைத் தாராளமாய் உபயோகிக்க வேண்டும்.

இரும்பைப் போன்ற உலோகங்கள் ரத்தவிருத்திக்கு இன்றியமையாதவை, இரும்பு, ஈரல் சிகப்பு மாமிசம், முட்டை பருப்பு தினுசுகள், வெங்காயம், தக்காளிக் காய் முதலியவைகளி லிருக்கின்றது. இஷ்டப்பட்ட நேரங்களிலெல்லாம் சாப்பிடக் கூடாது. குறிப்பிட்ட நேரங்களிலேயே புசிக்க வேண்டும். மிதமிஞ்சிச் சாப்பிடக் கூடாது. ஔவைப் பிராட்டியாரும் இதையே ‘உண்டி சுருங்குதல் பெண்டிற்கழகு’ என்ருர். இந்த விதி ஆண் மக்களுக்கும் பொருந்தும்.

ஆகாரமானது மேற்சொன்ன சத்துள்ள பதார்த்தங்கள் நிறைந்திருந்த போதிலும் ருசியுள்ளதாயிருக்க வேண்டும். அப்பொழுதுதான் பசி அதிகமாகும். பசி வரும்வரை காத்திருக்க வேண்டும். பதார்த்தங்களை நன்ருய்ச் சமைக்க வேண்டும். அவசரமாய்ச் சாப்பிடக் கூடாது. சாப்பிடும்போது அதிக கவனத்தைக் கவரத்தக்க விஷயங்களைப் படிக்கக் கூடாது. குதூகலத்துடனிருப்பது நல்லது. சுமார் 15 தினங்களுக் கொரு தடவை பட்டினியிருந்தால் நல்லது. ஆனல் ஒரே சமயத்தில் 24 மணி நேரங்களுக்குமேல் பட்டினி யிருக்கக்கூடாது. மதுபானங்களைத் தவிர்க்க வேண்டும். லாகிரி வஸ்துக்களை உபயோகிக்கலாகாது. காலை மாலைக் கடன்களைச் சரியான நேரத்தில் முடித்துக்கொண்டால் மலச்சிக்கல் உண்டாகாது. காலை மாலைகளில் தேகப் பயிற்சி செய்வது நல்லது. ஆனல் இது வும் மட்டாகவே யிருக்க வேண்டும் ஒரேயடியாக வேலை செய்யக்கூடாது. சற்று இளைப்பாறியே வேலை செய்ய வேண்டும்.

மனிதனுக்குத் தூக்கம் இன்றியமையாதது. தூக்கத்திலேயே மூளை இளைப்பாறுகிறது. குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் அதிகத் தூக்கம் அவசியம். அவர்கள் குறைந்தது எட்டுமணி நேரமாவது தூங்க வேண்டும். வயது வந்தவர்களுக்கு 6 மணி நேரம் தூக்கம் அவசியம் வேண்டும். அதிகத் தூக்கமும் கூடாது. கட்டிலின் மேல் படுத்தல் நல்லது.

சுருங்கச் சொல்லுமிடத்து சரீரப் பாதுகாப்புக்கு முக்கியமானவை :—

1. சரீர சுத்தம்

2. பரிசுத்த ஆகாரத்தை உட்கொள்ளுதல்.

3. சுத்தமான நீரைப் பருகுதல்.

4. செய்யவேண்டிய வேலைகளைக் கூடுமான வரையில் பரந்த வெளியில் சூரிய கிரணங்கள் தன்மீது படும்படி செய்வது.

5. சோம்பேறியாயிராமல் உபயோகமான வேலைகளைச் செய்தல்.

6. அக்கம் பக்கம் சுத்தமாயுள்ள இடங்களில் வசித்தல்.

அன்றியும் பரிசுத்தமான எண்ணங்களையே மனதிற் கொண்டு, நல்லொழுக்கத்தையும் கைப்பிடிப்போமேயானல், நோயற்ற வாழ்வென்ற குறைவற்ற செல்வத்தை நிச்சயமாக நாம் அடைவோம்.’

---

# நவராத்திரிப் பொம்மை

கி. வா. ஜகந்நாதன்

## 1

நவராத்திரி காலத்தில் ஸம்பாதிப்பதுதான் உருப்படியாக நிற்கும். இராத்திரி பகலென்று பாராமல் உழைத்தால் பலனுண்டு. அவளுக்கு அவளுடைய கைதான் சொத்து. தன்னுடைய கைத்திறமையினல் அவள் ஜீவித்து வந்தாள். அவள் புருஷன் இருந்த காலத்தில் அவள் இருந்த நிலையே வேறு. இப்போது இருக்கும் நிலையே வேறு. ஆனல் இரண்டு காலங்களிலும் அவள் மனம் வைத்து உழைப்பதில் மாத்திரம் வஞ்சகம் செய்வதில்லை.

மண் பொம்மைகளைச் செய்து வர்ணம் பூசி விற்று ஜீவனம் செய்து வந்தாள். அவளுக்கு வாழ்க்கையில் நம்பிக்கை ஊட்டி நிற்பவன் அந்தச் சிறு குழந்தை வேலன் ஒருவன்தான். அவன் ஒரு வயசாக இருக்கும் போது அவன் தந்தை இறந்துபோனான். இப்போது அவனுக்கு அப்பாவைப்பற்றி ஒன்றும் தெரியாது. இந்தப் பிரபஞ்சம் முழுவதும் அம்மாவுக்குள் அடங்கியிருக்கிறதென்பது அவன் நம்பிக்கை.

குப்பம்மாள் இந்த நவராத்திரியில் கொஞ்சம் பணம் சேர்த்தால் தன் பையனைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து இரண்டு கோணல் எழுத்து வரப்பண்ணலாமென்று எண்ணியிருந்தாள். அவனுக்கு ஐந்து வயசு நடந்தாலும் அவனுடைய சுறு சுறுப்பும் சூட்டிகையும் அவள் நெஞ்சிலே ஒரு பெருமிதத்தை உண்டாக்கின. பொம்மை பண்ணும் வீட்டில் பிறந்தால் என்ன ? அவன் படித்துப் பட்டம் பெற்றுக் கலெக்டராக வரக்கூடாதா என்ன? மண் பொம்மைகளைப் பண்ணின சாலீவாகனன் பெரிய அரசனாக வந்தானென்ற கதையை அவள் கேட்டிருக்கிறாள். ஆகையால் தன்னுடைய நம்பிக்கை ஸாத்தியமானதே என்று அவள் நிச்சயித்தாள். தன் கண்ணுக்குக் கண்ணாக வேலனை வளர்த்து வந்தாள்.

அவனுக்கும் பொம்மை பண்ணத் தெரியும். அவனுடைய ஆசையில், ஆர்வத்தில், உழைப்பில் குறைவு ஒன்றும் இராது. ஆனால் அந்தப் பொம்மை ஏதோ ஓர் உருண்டையாக இருக்கும். அதற்குக் கைகால் முகமெல்லாம் அந்தக் குழந்தையின் கற்பனையளவிலே நின்று விடும். "உன் பொம்மை நன்றாயில்லை" என்று குப்பம்மாள் சொல்லமாட்டாள். "ரொம்ப நன்றாயிருக்கிறது. வயது வந்தால் நீ பெரிய கெட்டிக்காரனாக ஆவாய். உன் பொம்மைக்குக் கிராக்கி ஏற்படும்" என்று சொல்வாள்; அடுத்த கணமே, சீ என்ன பைத்தியக்காரத்தனம்! இந்தக் கேவலமான ஜீவனம் இந்தக் குழந்தைக்குமா வரவேண்டும்? இவன்தான் படித்து உத்தியோகம் பார்க்கப் போகிறானே!" என்று எண்ணுவாள்; அந்த எண்ணத்திலேயே ஒரு குதூகலம் உண்டாகும்.

"அம்மா, அம்மா, இதோ பார் என் பிள்ளையார்" என்று காட்டுவான் குழந்தை. அது பிள்ளையாராகவும் இராது; குரங்காகவும் இராது; வெறும் மண் உருண்டை; அதுவும் கோணல் மாணலான உருண்டை.

"நன்றாக இருக்கிறது" என்று அம்மா சொல்வாள். அம்மாவுக்கு மேலே பெரியவர்கள் அவனுக்கு இல்லை. அதனால் அவன் உள்ளம் பூரிப்பான்.

* * *

வேலன் பண்ணின பொம்மைகள்—அவனுக்கு அவை பொம்மைகளல்லவா? நாலைந்து இருந்தன. ஒருநாள் அவன் தன் அம்மாவிடம் கொஞ்சலாகக் கேட்கத் தொடங்கினான்.

"எம்மா, நீ அந்தப் பொம்மைகளை வித்துட்டு வாயேன்."

தாய்க்குச் சிறிது ஆச்சரியம் உண்டாயிற்று.

"உன் பொம்மையை வித்துக் காசு வாங்கறயே. இதையும் வித்துட்டு வாயேன்."

"ஆகட்டும் கண்ணு"

"எல்லாப் பொம்மையும் வித்துடுவையா?"

"விற்று விடலாம் தம்பி."

அவனுக்கு உண்டான சந்தோஷத்தை அப்போது பார்க்கவேண்டுமே! அவன், தினந்தோறும் சாயங்காலம் அம்மா கடை வீதிக்குப் பொம்மைகளை விற்கக்கொண்டு போகும்போது தன் பொம்மைகளையும் விற்றுவிட்டு வரவேண்டுமென்று வற்புறுத்தினான். அவைகளை எப்படி அவள் விற்பாள்! ஏதேதோ சாக்குச் சொன்னாள். இப்படித் தாமதம்பண்ணி வருவது அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று; "ஏன் நாமே கொண்டுபோய் விற்கக் கூடாது?" என்று அவன் எண்ணினான்.

## 2

கடை வீதியில் மாலையில் அந்தச் சிறு குழந்தை தன் கையில் ஒரு காய்ந்த மண் உருண்டையை வைத்துக் கொண்டு நின்றிருந்தான். அதன்மேல் வர்ணங்கள் ஒழுங்கின்றிப் பூசப்பட்டிருந்தது. நவ ராத்திரி காலம். எவ்வளவோ பேர்கள் பொம்மைகளை விற்றுக் கொண்டிருந்தார்கள், வேலன் ஒரு மூலையில் நின்றுகொண்டிருந்தான்.

"பொம்மை வாங்கலையா பொம்மை; பிள்ளையார் பொம்மை" என்று அவன் தன் மெல்லிய குரலில் கூவினான். யாராவது தெரிந்தவர்கள் கண்டுவிடப் போகிறார்களோ வென்ற பயம் உள்ளே இருந்தது. அங்கே வந்தவர்கள் அவன் கையிலுள்ளதைப் பார்த்தார்கள். அவர்களுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

"இது என்ன பொம்மையப்பா?" என்று அவர்கள் கேட்பார்கள். வேலன் ஏதாவது சொல்லுவான். அதைக் கேட்டு அவர்கள் சிரித்துக்கொண்டே போய் விடுவார்கள். அவர்கள் சிரிப்பதன் அர்த்தம் அவனுக்குப் புரியாது. "நம்முடைய அம்மாதான் இது நல்ல பொம்மையென்று சொன்னாளே; இதை ஏன் இவர்கள் வாங்கவில்லை," என்று அவன் எண்ணினான். உண்மைதான்; அது அவனுக்கு நல்ல பொம்மை; அவன் அம்மாவுக்கும் அழகிய பொம்மைதான். மற்றவர் கண்களுக்கு அது அப்படித் தோன்றவில்லையே.

கால் வலிக்க நின்றதுதான் லாபம்; தொண்டை வலிக்கக் கத்தியும் பிரயோஜனம் இல்லை. அந்த ஏழைக் குழந்தையின் ஆசை நிறைவேறவில்லை. வந்தவர்களெல்லாம் அந்தக் குழந்தை கையிலுள்ள மண் உருண்டையைத்தான் பார்த்தார்கள்; அதன் மேல் தெளித்திருந்த வர்ணக் குழம்பின் அவலக்ஷணந்தான் அவர்கள் கண்ணிலே பட்டது. அந்தச் சிறு குழந்தை தன் முழு மனத்தையுஞ் செலுத்தித் தன் ஆர்வத்தை யெல்லாம் உருட்டித் தன் கற்பனை யெல்லாம் புகுத்தி அதைச் செய்திருந்தா னென்று அவர்கள் உணரவில்லை. பாவம்! அவர்கள் சிரிக்கும் போதெல்லாம், அந்தக் குழந்தையின் உள்ளத்திலே ஓர் ஈட்டி பாய்ந்தது போலிருக்கும்.

அவன் ஆசை நிறைவேறாமல் ஏமாற்றத்தோடு வீடு திரும்ப இருந்தான். அப்போது ஒரு கிழவர் அங்கே வந்தார். அவருடைய கண்கள் வேலன் கையிலிருந்த வஸ்துவை மேற் போக்காகப் பார்க்கவில்லை; ஊடுருவிப் பார்த்தன; "இது என்ன தம்பி?" என்று அவர் கேட்டார்.

"பிள்ளையார் பொம்மை நான் பண்ணினது" என்று அழாக் குறையாக அவன் சொன்னான். அவ்வளவு நேரம் இந்த உலகத்தின் பரிகாச அலையிலே மோதுண்டிருந்த அவனுடைய உணர்ச்சி அப்போது சிறிதே வெளிவந்தது.

"அப்படியா! என்ன விலை?"

இந்தக் கேள்வியை இதுவரையில் ஒருவரும் கேட்கவில்லை. குழந்தை இதற்குத் தயாராக இல்லை. 'என்ன விலை? என்ன சொல்வது?' அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. "சரி, இதை எடுத்துக்கொள்; பொம்மையை நான் வாங்கிக்கொள்ளுகிறேன்" என்று ஒரு நாலணா நாணயத்தைக் குழந்தையின் கையிலே வைத்துவிட்டு அந்தக் களி மண் உருண்டையை அவர் வாங்கிக்கொண்டார்.

வேலன்முகம் மலர்ந்தது. அவன் வாழ்க்கையில் அது ஒரு பெரிய ஸந்தோஷமல்லவா? தன் பொம்மை கூட விலை போயிற்று; அவ்வளவு நேரம் சிரமப்பட்டுக் காத்திருந்ததன் பலன் அவனுக்குக் கிடைத்து விட்டது. ஒரே ஓட்டந்தான்;

"அம்மா! அம்மா! வித்து விட்டேன். இதோ காசு!" என்று அம்மா கையிலே காசைக் கொடுத்தான் அவன்.

குழந்தையைக் காணவில்லையே என்று வருத்தப்பட்டுக்கொண்டிருந்த அவளுக்கு அவனுடைய வேகமான வார்த்தைகள் விளங்கவில்லை. அவன் சொல்லச் சொல்ல அவளுக்கு லேசில் நம்பிக்கை உண்டாகவில்லை. 'இதைப் போய் யார் வாங்கிக் கொள்வார்கள்?' என்று அவள் நினைத்தாள். ஆனால், இவனுக்குக் காசு ஏது?' இந்தக் கேள்விக்கு விடை தெரியவில்லை.

"என் கண்ணே, உன் பொம்மையை வாங்கினவர் யார்?" என்று கேட்டாள்.

"யாரோ தாதா வாங்கினுர்" என்ருன் அவன். "நாளைக்குக்கூடப் போய் வித்துட்டு வரப்போகிறேன்" என்று அவன் ஒரு குதி குதித்தான்.

மறு நாள் மாலையில் அவன் தான் செய்த ராசா பொம்மையைக் கொண்டு போனுன். முதல் நாள் வந்த கிழவர் அன்றும் அந்தப் பொம்மையை வாங்கிக் கொண்டு சென்ருர். அன்று குப்பம்மாள் தன் குழந்தை உண்மையிலேயே பொம்மையை விற்றுவிட்டுத்தான் வருகிருனென்பதை உணர்ந்தாள். 'இந்தக் குழந்தை கைராசியுடையவன். தன்னுடைய மண் உருண்டைக்கு நாலணு வாங்குகிற இவன் நம்முடைய அழகிய பொம்மைகளுக்கு நல்ல கிராக்கி கொண்டு வருவான்' என்று அவளுடைய மனதில் ஓர் ஆசை உண்டாயிற்று. படிக்க வைக்கிறதும் உத்தியோகம் பாக்கிறதும் அப்போதைக்கு அவள் மறந்து விட்டாள். தன் பொம்மைகளை அவன் சாயங்காலம் விற்கிறதும் வாங்குகிறவர்கள் அவனுக்காக நிறையப் பணம் கொடுக்கிறதும் அதனுல் அவள் பணக்காரியாகிறதுமாகிய மனோராஜ்யத்தை அவள் சிருஷ்டி செய்தாள்.

"தம்பி, நாளைக்கு நான் ஒரு பொம்மை தருகிறேன். அதைக் கொண்டு போய் விற்றுவிட்டுவா. நிறையக் காசு கிடைக்கும்" என்ருள் குப்பம்மாள். அந்தக் குழந்தை சம்மதித்தான்.

## 3

மாலை வேளை. தன் குழந்தைக்கு நன்ருக வேட்டியைக் கட்டிக் கையிலே அழகிய ராணி பொம்மை ஒன்றைக் கொடுத்துக் கடை வீதிக்கு அனுப்பினுள் குப்பம்மாள். அவன் புறப்பட்டுப் போன பிறகு அவள் மனம் படபடத்துக்கொண்டிருந்தது; "அரை ரூபாய்க்கு மோசமில்லை" என்று அவள் நிச்சயமாக நம்பினுள். தன் குழந்தை அந்தப் பொம்மையை ஒரு கிழவருக்கு விற்பது போலவும் அவர் ஒரு ரூபாயைக் கொடுப்பது போலவும் நாளைக்கு நிறையைக் கொண்டுவா வென்று அவர் சொல்வது போலவும் அவள் கனவு கண்டாள். அந்தக் காட்சிகளை நேரிலே பார்க்க வேண்டுமென்ற ஆத்திரம் அவள் நெஞ்சில் அடித்துக்கொண்டது. அவளும் கடைவீதிக்குப் புறப்பட்டாள். தன் மகனுக்குத் தெரியாமல் ஒரு மறைவிடத்தில் நின்றுகொண்டு அவனைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

வேலன் பொம்மையை எவ்வளவோ பேர் பார்த்தார்கள்; சிலர் கேட்டார்கள். அம்மா சொல்படி அவன் அந்தக் கிழவரை எதிர்பார்த்திருந்தான். ஆதலால் வேறு யாரிடமும் அவன் கொடுக்கவில்லை. அன்றைக்குக் கிழவர் தாமஸமாகவே வந்தார். வேலன் கையில் அழகிய ராணி பொம்மை இருப்பதைக் கண்டார்.

"தாதா, இந்தப் பொம்மையை வாங்கிக் கொள்ளுங்கள்" என்ருன் வேலன்.

அவர் அதை நன்ருக உற்றுப் பார்த்தார்.

"தம்பி, இது நீ செய்தது அல்ல போல் இருக்கிறதே; யார் செய்தார்கள்?"

"எங்கம்மா பண்ணினது."

"இதை நீ ஏன் எடுத்துக்கொண்டு வந்தாய்?"

"எங்கம்மா கொண்டுபோகச் சொன்னுள்."

"அப்படியா! இது உன் பொம்மையைப் போல் அழகாயில்லை. எனக்கு இது வேண்டாம். உங்கள் அம்மாவிடம் கொடுத்துவிடு" என்று சொல்லிவிட்டுக் கிழவர் மேலே நடந்தார்.

பையனுக்கு வருத்தம் சிறிதும் இல்லை. ஓட்டமாக வீட்டுக்கு வந்தான். அவன் தாய் முன்பே வந்து விட்டாள். அவள் முகத்தில் ஈயாடவில்லை. "அம்மா உன் பொம்மை நல்லா இல்லையாம். என் பொம்மைதான் நல்லா இருக்குதாம். இது வேணுமாம். தாத்தா சொன்னுர்" என்று சொல்லிக்கொண்டே பொம்மையைக் கீழே வைத்தான். அவனுடைய முகத்திலே கர்வக் குறி தோன்றியது.

"நன்ருகவா இல்லை?" என்று அவள் கேட்டாள். அந்தத் தாத்தாவின் கருத்து அவளுக்கு விளங்கவே இல்லை; என்றும் விளங்கப்போவதும் இல்லை.



# பெருச்சாளி

மா. கிருஷ்ணன்

பாரசீக தேசத்து ரோஜாப்பூக்கள் பிரசித்தி பெற்றவை. பிர்டாஸி, ஸாதி, முதலிய கவிவாணர்கள் பாடிய ரோஜா இதுவே. மிகப் பிரயாசப்பட்டு, ஒரு கனவானின் தோட்டத்திலிருந்து பாரசீக ரோஜாப் பதியமொன்றை அவர் ஊரில்லாத சமயம் மாலியின் உடந்தையினால் நான் திருடிவிட்டேன். அதை என் தோட்டத்தில் நட்டு, உரமும் தண்ணீரும் போதுமான நிழலும் உதவி சிரத்தையுடன் வளர்த்து வந்தேன். தினமும் நாலைந்து முறை அதைப் போய்ப் பார்த்து வருவேன். வழக்கம்போல் இன்றும் அதைப் பார்க்கச் சென்றேன்—செடியையே காணவில்லை. நன்கு தழைத்து நிமிர்ந்து வளர்ந்திருந்த என் ரோஜாப் பதியம் வேரோடு பறிக்கப்பட்டு மண்ணில் மாண்டு கிடந்தது. அது இருந்த விடத்தில் இருண்ட வாயுடன் ஒரு சிறு சுரங்கம் இருந்தது. சுற்று மட்டும் குழி மண் வாரி யிறைக்கப்பட்டிருந்தது. இந்த நிர்மூலத்தைக் கண்டவுடன் எனக்கு ஒரு பழைய தெலுங்குப் பாட்டின் நினைவு வந்தது. சில அடிகள் மட்டுமே ஞாபகமிருக்கின்றன.

ஒக்க பந்தி கொக்கு ஒச்சிந்தி
ஐயையோ!
அப்பப்பா!
ராவே ராவே!
பறிச்சிக் கொட்டிப் போயிந்தி

என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன்.

பெருச்சாளிகளே இப்படித்தான். இவைகள் உள்ளமட்டும் தோட்டத்தில் எதுவும் வேரூன்றி நீடித்து நிற்கும் என்று நம்புவதற்கில்லை. தோட்டத்தில் மட்டுமா, சமையற் கட்டிலும் பாவுள்ளிலும் மற்றும் எங்குமே தங்களிஷ்டப்படி எல்லாவற்றையும் இவை சூறையாடும். பெருச்சாளிகளிடமிருந்து ஒரு பொருளைக் காப்பாற்றுவது எளிதில் முடிகிற காரியமில்லை. மரப்பெட்டிகளைக் கடித்துத் துளைத்துவிடும், சுவர்களில் தந்திரமாய்க் கன்னம் வைக்கும்; உறிகளிலும் புரைகளிலும் வைத்துள்ள பண்டங்களை எப்படியோ தொத்திக் குதித்துத் திருடிவிடும். தம்மால் உண்ணமுடியாத பொருள்களைப் பாழாக்கும்—பாத்திரங்களை உருட்டி நசுக்கிவிடும். ஜாடிகளை உன்னத ஸ்தானங்களிலிருந்து வீழ்த்தித் தகர்த்துவிடும். வீட்டினுள் உள்ளவைகளை முற்றிலும் அழித்தபின் தோட்டத்துள் பிரவேசித்து குழிகள் பறித்தும் சுரங்கங்கள் தோண்டியும் பாரசீக ரோஜாச் செடிகளை வேரோடு களைந்தும் களிக்கும். இப்பாழும் பிராணிகள் இன்னதுதான் செய்யுமென்று உறுதியாகச் சொல்ல முடியாது. பெருச்சாளிகள் காற்றில் பறக்குமென்றும், கள்ளச்சாவிகள் கொண்டு கதவுகளைத் திறக்குமென்றும் எவரேனும் சொல்வாரானால் அதை நான் முற்றிலும் மறுக்க மாட்டேன்.

இந்த விநாச புத்தியுடனும், தந்திரத்துடனும் இருக்கும் பெருச்சாளிகளுக்கு இருட்டிலும், இரகசியத்திலும், அழுக்கிலும் அளவற்ற வாஞ்சையுண்டு. இரவில், குப்பைக் கிடங்குகள் மீதும், சாக்கடைகளிலும், சேறும் அழுக்கும் மிகுந்த மற்ற விடங்களிலும் பெருச்சாளிகள் ஓடிக் குதித்து உள்ளங்குளிரும். இவை இப்படி விளையாடுவதைக் குறிக்கத் தமிழில் தகுந்த வார்த்தையில்லை. ஆனால், மலையாள பாஷையில் பெருச்சாளிகளின் திரு

விளையாடல்களை வர்ணிக்க ஏற்றதோர் சொல்லுண்டு. பெருச்சாளிகள் 'சாடும்'—மடைகளிலும் அகழிகளிலும் விடியுமட்டும் சாடும். பிறகு பகலெல்லாம் தம் வளைகளில் படுத்துறங்கும். பொழுது சாய்ந்தவுடன் மறுபடியும் பொந்துகளை விட்டுப் புறப்படும்.

சில வருஷங்களுக்குமுன் நான் மைலாப்பூரில் ஒரு வீட்டில் ஒண்டுக் குடியிருந்தேன். இந்த வீட்டில் என்னுடன் ஒரு பெருச்சாளி சைங்யம் ஓட்டிக்கொண்டிருந்தது. இருட்டினதும் சேனை வெளிக்கிளம்பி விடும். கூடத்திலும் தாழ்வாரத்திலும் எத்தனையோ ஜதைக் கண்கள் பச்சை நிறமாகப் பிரகாசிக்கும். சேனையின் பிரிவொன்று நான் படுத்திருக்கும் கட்டிலைச் சூழ்ந்து முற்றுகையிடும்—ஆனால் அதற்கு மேல் துணிந்து என்னருகில் வர பயப்படும். பொறிகள் வைத்தும், சேவக பலத்துடன் தடிகொண்டு வேட்டையாடியும், இன்னும் என்னென்னவோ செய்தும் என்னால் இந்தப் பெருச்சாளிகளை வெல்லவோ விரட்டவோ முடியவில்லை. முடிவில் இவைகளின் சகவாசத்தைச் சகிக்கமுடியாமல் வீட்டைவிட்டு ஓடிவிட்டேன். போன வாரம் மயிலாப்பூரில் வசிக்குமொரு நண்பனைக் கண்டபொழுது "உங்களூரில் பெருச்சாளிகள் க்ஷேமமா?" என்று விசாரித்தேன்.

"பழம் பெருச்சாளிகள் எங்கே போகும்—ஒன்றிரண்டு மாம்பலத்திற்குக் குடியேறிவிட்டன: மற்றைப்பெருச்சாளிகள் மயிலாப்பூரில்தான் இன்னும் இருக்கின்றன" என்று அவன் பதில் கொடுத்தான்.

---

# நமது ஸங்கீதம்

(ஏ. என். கல்யாணஸுந்திரம், எம். ஏ.)

நமது தேச ஸங்கீதத்தைப்பற்றி அநேகர் விரிவாயும், விளக்கமாயும் எழுதியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் யாவரும் ஸம்பிரதாய முறையைக் கைப்பற்றியே எழுதியிருக்கிறார்கள். நமது ஸங்கீதம் ஸாம வேதத்திலிருந்து உண்டாகி, நாரதாதி மஹரிஷிகளால் பாடப்பட்டு பாரத தேசத்தில் பிரகாசித்து வந்தது என்பதே அவர்கள் ஸங்கீதத்தின் ஆரம்பம். இது உண்மையானால் ஸாம வேதமும் நாரதாதி மஹரிஷிகளும் பாரத தேசத்தில் மட்டும் இருக்கவில்லை. ஆப்ரிக்கா, சைனா, ஜப்பான் முதலிய தேசங்களிலும் இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அநேக ஸாம வேதங்களும், நாரதாதி ரிஷிகளும் இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் மற்ற தேசத்திய ஆரம்பகால ஸங்கீதம் நம் நாட்டின் ஸங்கீதம் போலவே இருக்கிறது. ஒரு ஸமயம் நான் ஸ்ரீயுத ஹரீந்திரநாத் சட்டோபாத்தியாயாவுடன் பேசிக்கொண்டிருந்த போது, அவர் நீக்ரோவின் பாமரப் பாட்டுகளை (Folk Songs) பாடிக் காண்பித்தார். அந்தப் பாட்டுகளுக்கும் நம் தேசத்துப் பாமரப் பாட்டுகளுக்கும் இருந்த வித்தியாசம் ஒன்று தான். அதாவது பாஷை வித்தியாஸமே.

இது தவிர சைனா, ஜப்பான் இவ்விரண்டு தேசங்களின் ஸங்கீதத்தைக் கேட்டவர்கள் நான் சொல்வதின் உண்மையை உணர்ந்திருப்பார்கள். இதுவரையில் கேளாதவர்கள் ஒருதரம் ரேடியோ அருகில் சென்று முள்ளைத் திருப்பினார்களானால் அநேக தேச ஸங்கீதம் கேட்கும். திடீரென்று ஸாம வேதமும் ஒலிக்கும். அவ்விடத்தில் சற்று முள்ளை நிறுத்தி அதைக் கேட்பார்களானால் அது சைனா அல்லது ஜப்பானில் பாடப்படும் ஸங்கீதம் என்பதை அறிவார்கள். பாட்டுடன் வாசிக்கப்படும் பக்க வாத்தியங்கள் இல்லாவிட்டால் நம் ஸாம வேதத்திற்கும்

அந்த ஸங்கீதத்திற்கும் வித்தியாஸமே இருக்காது.

ஸாம வேதம், நாரதாதி மஹரிஷிகள், பரதர் வேங்கடமஹி முதலிய ஆசார்யர்கள், மேளகர்த்தா முதலிய ஆராய்ச்சி விஷயமான ஸம்ப்ரதாயமான முறையை விட்டு விட்டு, ஸங்கீதத்தைப்பற்றி ஒரு புது முறையில் நான் எழுதத் துணிந்து இதை எழுத ஆரம்பித்தேன். நான் எழுதும் விஷயங்கள் சில வித்வான்களுக்கும், சில தீவிர ஸங்கித அபிமானிகளுக்கும் மனத்தாங்கலைக் கொடுக்கலாம். விவாதங்களையும் உண்டாக்கலாம். ஆனால் நான் ஸங்கீத சாஸ்திரத்தை ஆராய்ச்சி செய்து, அதன் முடிவை எழுதவில்லை. ஒரு ஸாதாரண மனிதனுக்கும், ஸங்கீதத்திற்கும் உள்ள ஸம்பந்தமே இதற்கு அடிப்படையான காரணம். இயற்கை அறிவைத் திருப்தி செய்யக்கூடிய காரணங்களுடன் எழுதியிருக்கிறேன். செயற்கை அறிவிற்கும் இதற்கும் சம்பந்தமே கிடையாது. வித்வான்களையும், விமர்சனக்காரர்களையும் உத்தேசித்து இது எழுதப்படவில்லை. இது ஸாதாரண ஜனங்களுக்கு மாத்திரமே.

ஸங்கீதம் என்றால் அதன் உபயோகம் என்ன? இந்த இரண்டு விஷயங்களையும் நாம்தெரிந்துகொள்வது ரொம்பஅவசியம். ஆனால் இவ்விரு விஷயங்களையும் அறிந்துகொள்வது மிகவும் சிரமமான காரியம். இருந்தாலும் நம் இயற்கை அறிவிற்கு எட்டிய அளவு ஆலோசித்து ஒரு முடிவுக்கு, கூடுமானால், வருவோம்.

ஸங்கீதம் எங்கிருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டால், ஸங்கீதம் என்ன என்பதை தெரிந்துகொள்ளலாம். ஸங்கீதம் என்பது, பாடுபவர்கள் சாரீரத்திலிருக்கிறதா, பாட்டின் வார்த்தைகளிலிருக்கிறதா, அல்லது பாஷைகளிலிருக்கிறதா, 'சாரீரம்' தான் ஸங்கீதம் என்றால் வாத்ய ஸங்கீதம், ஸங்கீதமாகாது. அதுபோலவே ஸங்கீதம் வாத்தியத்திலிருக்கிறது என்றால், வாய்ப்பாட்டு ஸங்கீதமாகாது. பாட்டின் ஸாஹித்யத்திலிருக்கிறது என்றால் அதைப் பாட்டாகப் பாடுவானேன்? ஸாதாரணமாக வாசித்தால் அது ஸங்கீதமாக நமக்குத் தோன்றவில்லை. பாஷையிலிருக்கிறது என்றால் அதை வாசித்தால் அது நமக்கு ஸங்கீதம் போல் தெரியவில்லை. பூகோள சாஸ்திரத்தை வாசித்தால், ஸங்கீதம் போல் இருக்கிறதா?

பாட்டின் அர்த்தமே தெரியாத ஒரு பாட்டைக் கேட்கும் போது அது ஸங்கீதமாகத்தான் இருக்கிறது. முன்பின் கேட்டிராத பாஷையில் பாடப்படும் பாட்டும் நம்மை ரஸிக்கச் செய்கிறது. அர்த்தமற்ற 'தரனு-திரனு' என்ற வார்த்தைகள் பாடப்படும் போது நமக்கு அது ஸங்கீதமாகவே த்வனிக்கிறது. வாத்யங்களில் வாசிக்கப்படும் கீதங்களின் பாஷையோ, அர்த்தமோ நமக்குத் தெரிவதில்லை. எந்த தேச ஸங்கீதம் என்பதும் புரிவதில்லை. இருந்தாலும் அதைக் கேட்பது நமக்கு ஆனந்தத்தைக் கொடுக்கிறது. இதிலிருந்து ஸங்கீதம் என்பது ஒருவிதமான ஓசை - 'நாதம்' என்று தெரிகிறது.

ஆனால் எல்லா இசைகளும் ஸங்கீதமா? அப்படியானால் ரயில் சத்தம், ஆகாயக் கப்பல் சத்தம், ரேடியோவிலிருந்து உண்டாகும் இடி முழக்கம், புயற் காற்று சப்தம், இவைகளெல்லாம் ஸங்கீதமா? இல்லை. ஏனென்றால் ஸங்கீதத்தைக் கேட்கும் போது நம் மனதிற்கு ஒரு ஆறுதலும், ஸந்தோஷமும் உண்டாகிறது. மேற்கூறிய சப்தங்கள் நமக்கு ஆறுதலையோ ஸந்தோஷத்தையோ உண்டாக்குவதில்லை. ஸங்கீதத்திலிருக்கும் இனிமையே நமக்கு ஸந்தோஷத்தை உண்டாக்குகிறது. ஆகையால் ஸங்கீதம் என்பது ஓர் இனிமையான நாதம் என்று நாம் தீர்மானிக்கலாம். நம் அனுபவத்திலும் அது உண்மையாகவே விளங்குகிறது. ஒன்றும் அறியாத ஒரு சிறு குழந்தை அழுதால், தாயானவள் உடனே பாடுகிறாள். குழந்தையும் அழுகையை நிறுத்திப் பாட்டைக் கேட்டபடியே தூங்கி விடுகிறது. ஸங்கீத சாஸ்திரத்தை உணர்ந்தா அல்லது ஸாஹித்யத்தின் அர்த்த புஷ்டியை அறிந்தா, அல்லது பாஷையின் மேன்மையை தெரிந்தா அச்சிசு ஸங்கீதத்தை அனுப்பவித்தது? இல்லை. இனி

மையான நாதத்தைக் கேட்டே அது தூங்கிற்று. அதுபோலவே ஸர்ப்பம் முதலிய மிருகங்களும் ஸங்கீதத்தின் நாதத்தால் மயங்குகின்றன.

கேட்பவர்களை ரஸிக்கச் செய்து மனதிற்கு ஆறுதலையும் சந்தோஷத்தையும் கொடுக்கும் இனிமையான நாதசங்கீதமென்றால், சங்கீத சாஸ்திரம் எதற்கு? ஸ்வரங்கள், தானங்கள், கீர்த்தனங்கள் முதலியவை எதற்கு? வாயில் வந்தவாறு இனிமையாகப் பாடினால் போதாதா? 22 ச்ருதிகள், 72 மேளகர்த்தாக்கள், ஆரோகண அவரோகண ஸ்வரக்ரமங்கள், இவைகளைப் பற்றிய வீண் விவாதங்களும், சண்டைகளும் ஏன்? ஒரு சட்டத்திற்கும் உட்படாமல், ஏன் பாடக்கூடாது என்று கேட்கலாம் தாராளமாகப் பாடலாம். அதைப் பற்றி ஒரு ஆட்சேபணையுமில்லை. ஆனால் அவ்விதம் எவ்வளவு நேரம் பாட முடியும் கடைசிவரை ரஞ்சகமாகவும், இனிமையாகவும் கேட்பவர்களின் மனதிற்கு வெறுப்பின்றியும் பாடச்சக்தியிருந்தால், தாராளமாய்ப் பாடலாம். ஆனால் அச்சக்தி பெறுவதுதான் மிக்க துர்லபம். மனதிற்கு வெறுப்புக் கொடுக்காமல் பாட வேண்டுமென்றால், ஏதாவது ஒரு சட்டதிட்டத்தை அனுசரித்துத் தேர்ச்சி பெற்றால்தான் முடியும். இல்லாவிட்டால் முடியாது. தேர்ச்சிபெற, அப்யாசம் செய்வதற்கு ஒரு ஒழுங்கான முறை வேண்டியது அவசியம். அந்த முறையைக் காண்பிக்கவே சாஸ்திரம் ஏற்பட்டது. தேர்ச்சி பெற்ற பிறகு சாஸ்திரத்திற்கு சிறிதும் விரோதமில்லாமல் பாடவேண்டு மென்பது கட்டாயமல்ல. மனோபாவத்தின்படி பாடும்போது ஜனங்கள் ரசிப்பதற்காக சாஸ்திர விரோதமாகப் பாடும்படி நேர்ந்தாலும் அது ஒரு குற்றமல்ல. அப்படிப் பாடுவதுதான் ஒரு சரியான ஸங்கீத வித்வானின் லட்சணம் என்பது என் மனப்பூர்வமான அபிப்பிராயம்.

நமது வேதாந்தத்தில் ஆத்மா என்பது ஒன்று; அது அவயவங்களுடன் கூடின மனித தேகத்தில் இருக்கும்போது "ராமன், கிருஷ்ணன், கோவிந்தன்" முதலிய வெவ்வேறு பெயர்களுடன் தென்படுகிறது, என்று சொல்லுகிறார்கள். அதுபோலவே ஸங்கீதமென்பது ஒரு இனிமையான நாதமாக இருந்த போதிலும் ஸ்வரங்களாகிய அவயவங்களுடன் கூடின ராகங்களின் ஸ்வரூப பேதத்தால் "கல்யாணி, காம்போதி, சங்கராபரணம்" என்ற பெயர்களுடன் விளங்குகிறது. இம்மாதிரியாக ஸ்வரூபமற்ற நாதத்திற்கு ஒரு ரூபத்தைக் கற்பிக்கிறது ஸங்கீத சாஸ்திரம். அந்த ரூபத்திற்கு ஸாஹித்யம் ஆபரணமாக விளங்குகிறது. பாட்டு இயற்றுபவரின் சாதுர்யத்திற்குத் தக்கபடி ஆபரணங்களின் உயர்வும் ஏற்படுகிறது. நல்ல ஆபரணங்களாகிற பாட்டுகளினால் அலங்கரிக்கப்பட்டு, ஸ்வரஸாஹித்யமான ஸ்வரூபங்களாய் விளங்கும் இனிமையான நாதமே ஸங்கீதமாய் நமக்கு அனந்தம் அளிக்கிறது.

நமக்குத் தெரிந்தவர்களை நாம் கண்டதும் ஒரு குதூகலத்துடன் அவர்களை நெருங்கிப் பழகுவதுபோல், நமக்குத் தெரிந்த பாஷையில், நமக்கு அர்த்தமாகும்படியான பாட்டைக் கேட்டவுடன் நமக்கு ஒரு குதூகலமும், உற்சாகமும் உண்டாகிறது. ஸர்வாபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட ஓர் அழகிய ரூபத்தைப் பார்த்து யாவரும் ஆனந்திப்பது இயற்கைதானே. அதுபோலவே நமக்கு அர்த்தமாகும்படி நமக்குத் தெரிந்த பாஷையில் நன்றாக இயற்றப்பட்ட பாட்டைக் கேட்கும்போது நமக்கு சந்தோஷம் உண்டாவது சகஜமே. இவ்விதம் நாதாத்மக மாக விளங்குவதே சங்கீதம்.

ச்ருதி தாய், லயம் தகப்பன் என்ற சொற்கள் சங்கீதத்தைப்பற்றிப் பேசும் இடங்களில் அடிக்கடி நம் காதில் விழும். இவை யாருக்குத் தாய் தகப்பன்? சங்கீதத்திற்குத்தான். தாயைவிடத் தகப்பன் பெரியவனானதால், தாளம் (லயம்) முதலில் உண்டாயிருக்க வேண்டும். பிறகு தான் தாயாராகிய ஸ்ருதி உண்டாகியிருக்க வேண்டும். இவை இரண்டும் ஸங்கீதத்தில் தாய் தகப்பன், என்றால் ஸாமவேதத்தின் கதி என்னவாயிற்று? இவை இரண்டும் ஸாம வேதத்திலிருந்து உண்டாயினவென்

றும் சொல்ல முடியவில்லை. ஸாம வேதத்திலிருந்து தாளம் உண்டாக இடமே இல்லை. சில ஸ்வரங்களும், சில ச்ருதிகளும் உண்டாயிருக்கலாம். ஆனால் அந்த ஸ்வரங்களும் ச்ருதிகளும் இப்பொழுது பாடப்படும் சங்கீதத்தில் உபயோகிக்கப் படுவதாகத் தெரியவில்லை. இந்த விஷயத்திற்குத் தகப்பனை மிஞ்சிய பிள்ளையாக விளங்குகிறது தற்கால சங்கீதம். பித்ரார்ஜிதமான சொத்தை வேண்டாமென்று உதறித் தள்ளிவிட்டு, ஸ்வரார்ஜிதமான சொத்துடன் பூர்ண ஸ்வதந்திரத்துடன் ராஜ்யபாரம் செய்கின்றது நமது சங்கீதம். நமது சங்கீதத்தின் வாசனைதான் ஹிட்லருக்கு அடித்திருக்கவேண்டும். ஸாமவேத ச்ருதிகள், தற்கால யூதர்களாய், சங்கீதத்திற்கு இருக்கின்றன.

(தொடரும்)

---

# ம்ருதங்க வித்வான் மைலாட்டூர் கிருஷ்ணய்யர்

(ய. மகாலிங்க சாஸ்திரிகள் எம். ஏ., பி. எல்)

சுமார் இருபது வருஷத்திற்கு முற்பட்ட சங்கீதக் கச்சேரிகளைக் கேட்டவர்கள் மைலாட்டூர் கிருஷ்ணய்யரைத் தெரிந்துகொள்ளாமலிருக்க முடியாது. தஞ்சாவூரைப்போல் பாலக்காடும் சங்கீத வித்வான்களுக்கு ஒரு உற்பத்தி ஸ்தலம் என்று சொல்லலாம். கிருஷ்ணய்யர் 1867-ல் ஜனித்தார். அவர் வித்தை கற்றது ஆலப்பிழை அண்ணாத்துரை பாகவதரிடத்தில். அவர் 12 வயது முதல் 18 வயது வரை வித்யாப்யாஸம் செய்து பின்னர் கச்சேரிகளுக்குக் கிளம்பினார். நாலைந்து வருஷங்கள் பாலக்காட்டுப் பக்கங்களிலேயே ப்ரசாரத்தை அடைந்து பிறகு 1890-ல் தஞ்சாவூர் வந்து கிருஷ்ண பாகவதரிடம் பக்க வாத்தியத்திற்கு அமர்ந்து கொண்டார். அந்தவமயம் நாராயணஸ்வாமியப்பா என்ற பிரபல ம்ருதங்க வித்வான் செல்வாக்காய் இருந்த காலம். கிருஷ்ணய்யருக்கு நாராயணஸ்வாமியப்பாவின் வாசிப்புக் கேட்க அநேக ஸந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. ஷெயார் வீட்டில் பிரதி சனிக்கிழமையும் பஜனை நடக்கும். அதில் அவரே வாசிப்பார். கிருஷ்ணய்யர் தவறாமல் அவருடைய வாசிப்புகளைக் கேட்டு அந்த வழிகளைத் தன் அநுபவத்திற்குக் கொண்டு வந்தார். தஞ்சாவூர் வழிக்கும் பாலக்காட்டு வழிக்கும் வித்தியாஸமுண்டு. தஞ்சாவூர் வழியென்றால் முக்கியமாக நாராயணஸ்வாமியப்பாவின் வழிதான். அதில் ஸுகபாவம் அபாரமாக அமைந்திருக்கும். வாசிப்பு ஒரே நாதமயமாகவிருக்கும். படபடப்பு மொத்தையடி இல்லாமல் ஜில்ஜில் என்று பன்னீர் தெளிப்பதுபோலிருக்கும். மிருதுவாயும் மனோகரமாயும் பாட்டுக்கு அநுஸ்வரணையாயும் கணீர் கணீர் என்ற ஒலி முழக்கும் உடையதாயும் உள்ள அவருடைய வழிகளைக் கிருஷ்ணய்யர் அப்யஸித்துக் கொண்டார்.

தஞ்சாவூர் கிருஷ்ணபாகவதர் மஹா ரஸிகர். அவர் கீர்த்தனங்கள் பாடுவதில் மஹா வைத்தினாதய்யர், பட்டணம் ஸுப்பிரமண்ய அய்யர் இவர்களே ஈடுபட்டிருக்கிறார்கள். அவருடைய ச்ருதிஞானமும் லயக்ஞானமும் வாசாமகோசரம். அத்தகையோருக்குக் கிருஷ்ணய்யர் பக்க வாத்யம் வாசிப்பதென்றால், அதி பால்யத்திலேயே இவருக்கு ம்ருதங்க வாத்யத்தில் ஏற்பட்ட திறமை வெளியாகும் ஐந்து வருஷம் கிருஷ்ண பாகவதர் ஸெட்டில் இருந்தார். மத்தியிலேயே தனிக் கச்சேரிகளுக்குப் போய்க்கொண்டிருந்தார். நாளடைவில் கச்சேரி "சான்ஸ்"கள் அதிகரிக்கவே கதை ஸெட்டிலிருந்து விலகிக்கொண்டார்.

கிருஷ்ணய்யர்—சரப சாஸ்திரிகள் திருக் கோடிக் காவல் கிருஷ்ணய்யர், பாலக்காட்டு அனந்தராம பாகவதர், ராமனுதபுரம் ஸ்ரீனிவாச அய்யங்கார், கோகேலராஜபுரம் வைத்தினுதய்யர் முதலான பெரிய வித் வான்களுக்கு வாசித்திருக்கிறுர். பல்லடம் ஸஞ்ஜீவிராயர் அவர்களுக்கும் அடிக் கடி வாசித்திருக்கிறுர். இவர் காலத்தில் பல்லவி கணக்குகள் வெகு சிக்கலான வழி களில் வழங்கப்பட்டு வந்தமையால் அவை களில் தன் புத்தியைச் செலுத்திப் பெரிய ஸாதகங்கள் செய்து வைத்திருந்தார். இவர் மேன்மை பெற்றிருந்த காலத்தில் ம்ருதங்க வித்வ கோஷ்டியில் முதல் அணி யில் தோன்றினுர் என்பதற்கையமில்லே.

பெரிய மேளகாரன்கள் ஜாலர்தாளம் போட்டு பிறகு நாயனம் கற்பதுபோல் கதைக்கு வாசிப்பதும் மிருதங்கக்காரர் களுக்கு ஒரு முதற்படியாகும். ஆனுல் சிலர் கதை ஸெட்டிலேயே மலேயேறிப் போய்விடுவார்கள். உண்மையான சரக் கிருந்தால் கச்சேரிக்கு வாசிக்கும் உயர்வை அடைவார்கள். கும்பகோணம் அழகன் நம்பி பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்கள் கதைக்கு வாசிக்க வில்லேயா? மதராஸ் வேணு நாயக்கரும் அப்படியே வாசிப்பதுண்டு. இவர்கள் கச்சேரி வாசிப்பிலும் பெயர் பெற்றவர்கள். கதைக்கு வாசிப்பதில் ஒரு பயிர்ச்சிக் குணம் இருக்கிறது. பாட்டுக்கு அனு ஸரணேயாக வாசிக்கும் வழியைக் கற்பிக்கக் கதை ஸங்கீதம் மிகவும் உதவியாக இருக் கிறது. கச்சேரி வாசிப்பிற்கு காலப்ர மாண சுத்தத்தோடு சில கணக்கு வழிக ளும் அத்துபடியாகவேண்டும். மேலும் வாய்ப்பாட்டுக்கும் புல்லாங்குழலுக்கும் வாசிப்பது போல் வீணேக்கும் பிடிலுக் கும் வாசிக்கமுடியாது. ஒருவருக்கு வாசிப் பதுபோல் மற்றெருவருக்கு வாசிக்க முடி யாது. இவ்விதமாகப் பரிசீலனே பண்ணும் போது மிருதங்க வாசியானது இலகுவாக ஸாதிக்கக் கூடியதல்ல என்று விளங்கும். சிலர் அனுஸரித்து வாசித்து விடுவார்கள். தனி ஆவர்த்தனேயில் திணறிப் போய் விடும். அல்லது எடுப்பாக வாசிக்கத் தெரி யாது. சிலர் நெட்டுருப்பண்ண வரிசை களேயே கொடுத்துக்கொண்டு வருவார் கள். கற்பனே பூஜ்யமாயிருக்கும்.

இவ்விதமான எந்தக் குறைகளும் இல்லாமல் கிருஷ்ணய்யர் வாசித்து அபாரமான க்யாதி பெற்று வந்தார். வாசிக்கும்போது கழுத்துக் கோணுமலும் கோரமான முக விகாரங் கள் இல்லாமலும் வாசிப்பார். இவர் கலேத்திறத்துடன் அரிய குணங்களமை யப்பெற்ற உத்தமர். வாக்கு மாறுமல் பணக் கச்சேரிகளேயும் மறுத்து, ஒப்புக் கொண்ட இனும் கச்சேரிகளே நிறைவேற் றிய திடசித்தர். இவரிடம் கச்சேரியில் முறைத்துக்கொள்ளும் சுபாவம் கிடை யாது. எங்கும் இனிமையான குணத் தால் மணம் பெற வாழ்ந்தவர். இவ்விதம் சுமார் 35 வருஷகாலம் தொழில் நடத்தி 1920-ல் தஞ்சாவூரில் காலஞ் சென்றுர்.

இப்போது மிருதங்க வித்வான்களிடை யில் உயர்ந்த கௌரவத்தை வகித்து வரும் மைலாட்டூர் சாமி அய்யர் அவர்கள் கிருஷ்ணய்யரின் தமையன் குமாரர். சாமி அய்யர் 1902 முதல் பதினெட்டு வருஷம் கிருஷ்ணய்யருடன் இருந்தவர். இவர் கள் பரம்பரையில் இந்த பாண்டித்யம் இன்றும் ஓங்கி வளர்கிறது. சாமி அய் யர் அவர்கள் குமாரன் சி. ராமச்சந்திரன் சிறுவனுனுலும் பெருமைவாய்ந்த யோக்ய தையை பிரகாசிக்க செய்து வருகிறுன். ஊறல் இருக்கும் இடத்தில் ஜலம் குறை யாதல்லவா?

[இந்த வியாஸத்திற்கு விஷயக் குறிப்புகள் மைலாட்டூர் சாமி அய்யர் அவர்கள் தந்துத வினுர்.]

---

## நவராத்திரி விகடம்.

ஜானகி:—ஏண்டி நீலு, காமுவாத்து கொலுவுக்குப் போயிருந்தயே, என் னடி கொடுத்தா?

நீலு:—அவாத்திலே பழங்கொடுத்தா.

ஜானகி:—மீனுவாத்தில்?

நீலு:—சுண்டல் கொடுத்தா.

ஜானகி:—ஜயத்தினுத்திலே?

நீலு:—பழம், சுண்டல் கொடுத்தா.

# தீராத கடன் "வன புஷ்பம்"

(வங்காளியிலிருந்து த. நா. குமாரஸ்வாமி மொழிபெயர்த்தது.)

"இதனால் என்ன, நிதானமாகத்தான் கொடுங்களேன். அடுத்த வாரமே இல்லா விட்டால் இரண்டு வாரங்கள் கழித்தே கொடுங்களேன்!" என்றார் ராமநாத சர்மா.

"அப்படி இல்லை. வாக்கு ஒன்றா இரண்டா? நாணயம் போய்விட்டால் அப்புறம் மனுஷ்யன் என்ன? ஏற்கெனவே, உங்களை இரண்டுதரம் கெடுவைத்து உங்களை நடக்க வைத்துவிட்டேன். நேற்றுக் கூட என் கையில் இருந்தது. சிவனே என்று உங்களிடம் வந்து ரூபாயைக் கொடுத்து விட்டிருந்தால்? பாருங்கோ அடுத்தகத்துச் சாம்பசிவ ஐயர் காலையில் ஓடிவந்து "கும்பகோணத்திலிருந்து தந்தி வந்திருக்கிறது. பெண்ணுக்கு ரொம்ப உடம்பு, கையில் காசில்லை போவதற்கு," என்று கேட்கும்போது ரூபாயைக் கையில் வைத்துக்கொண்டு எப்படி இல்லை யென்று சொல்வது? கொடுத்தேன். அடுத்த வாரமே உங்களுடைய பணம் பூமேல் வந்துவிடும் என்றார் சேஷையர்.

"வருகிறேன்" என்று சர்மா விடை பெற்றுக்கொண்டு வெளியே போய் விட்டார். அவர் போனதும் சேஷையர் "என்ன சுத்த அல்பனாக இருக்கிறானே, இவன்! இந்தப் பத்து ரூபாய்க்காகத் தூக்கத்தையும் விட்டுவிடுவான் போலிருக்கிறது" என்று தமக்குள் சொல்லிக்கொண்டார்.

வீதியில் வந்ததும் சர்மாவின் முகம் சிடுசிடுத்தது. அவரும் "பாவி, கொடுத்த பணத்தை இப்படியே கெடுவைத்து ஏப்பம் விட்டுவிடுவான் போல் தோன்றுகிறது! மோசக்காரப் பயல்!" என்று சேஷையரை ஒருதரம் வாழ்த்தினார்.

நாட்கள் சென்றன. இரண்டு வாரங்களும் போயின. ரூபாய் வருகிற வழியைக் காணோம். சர்மா ஒரு நாள் விடிந்ததோ இல்லையோ சேஷையர் வீட்டை நோக்கிப் புறப்பட்டார். ஆறு மாதங்களுக்குமேல் ஆகின்றன சேஷையர் அவரிடமிருந்து பத்து ரூபாய் கடன் வாங்கி! 'இன்றைக்கு நாளைக்கு இதோ இந்த வாரம்! இன்னும் நாலே நாளில், என்று கதை பண்ணிக் கொண்டிருக்கிறார். இந்தக் காலத்தில் கடன் கொடுத்தவன் தான் நெஞ்சம் கலங்கவேண்டியிருக்கிறது. தலையெழுத்து, வந்து அவனிடம் மாட்டிக் கொண்டோம்!' என்றெல்லாம் எண்ணி சர்மா வருத்தமடைவார்.

அதிகாலையில் சர்மாவின் முகத்தில் விழித்தோமே யென்ற வெறுப்பைக் காட்டும் பாவம் சேஷையர் முகத்தில் தோன்றினாலும் அவர் உடனே அதைச் சமாளித்துக்கொண்டு. "நூறு ஆயுசு. வாங்கோ சர்மாவாள். உங்களைப்பற்றித் தான் நினைத்துக்கொண்டிருக்கிறேன்... தெரியுமா உங்களுக்கு? இன்றைக்கு நம் நடுவீதிப் பிள்ளையார்கோயில் மண்டபத்திலே ரங்காச்சாரியாரின் 'உத்தரா பரிணயம்' காலக்ஷேபம். ரொம்ப நன்றாகக்கதை பண்ணுவார். அவசியம் நீங்கள் வந்து கேட்கணும். சாயங்காலம் ஆறுமணிக்கு மேலே ஆமாம். நீங்கள் கூட இருந்தால் இரண்டு பேருமாகச் சேர்ந்து அனுபவித்தாற் போலிருக்கும்!" என்று சாமர்த்தியமாகப் பேச்சை எடுத்தார்.

'ஏது, நல்ல காலந்தான் பிறந்து விட்டது. சேஷையர்கூட இவ்வளவு குதூஹலமாயிருக்கிறார். இன்றைக்குப் போன பணம் திரும்புவதற்கு அறிகுறி தென்படுகிறது.' என்று சர்மா தமக்குள் பூரிப்படைந்து, "அதற்கென்ன! அவசியம் வருகிறேன். நானும் காலக்ஷேபம் கேட்டு ரொம்ப நாட்கள் ஆகின்றன!" என்றார். சர்மா.

அப்போது சேஷையரின் சிறு பெண் குஞ்சு அங்கு வந்து "அப்பா! ஆத்திலே துளிக்கூடச் சர்க்கரை இல்லையாம். அம்மா வாங்கிக்கொண்டு வரச் சொன்னாள்" என்றாள். குழந்தையைத் தம் அருகில்

அழைத்து அவளைத் தடவிக்கொடுத்து சர்மா, "இந்தக் கௌன் எப்போ தைத்தது? ஏன் தலையை வாரிப் பின்னிக் கொள்ளவில்லை?" என்றெல்லாம் சீராட்டினார். அவர் தம் ஒரே பெண் குழந்தையான வத்ஸலாவுடன் கூட இப்படி ஆதரவாகப் பேசினதே கிடையாது. தம்முடைய குழந்தை மேல் ஆசை கொள்வதைப் பார்த்தாவது ரூபாயைச் சேஷையர் கொடுத்துவிடமாட்டாரா என்ற எண்ணம் இருக்கலாம் சர்மாவுக்கு.

சர்மா கொஞ்சம் ஸங்கோசப்பிராணி-தைர்யமாக ஒருவரைக் கேட்கமாட்டார். ஆனால் சேஷையர் மிகவும் சாமர்த்தியக்காரர். சர்மா இப்படித் தம் பெண் மீது அதிக அன்பு கொள்வதன். காரணம் அவருக்குத் தெரியாமற்போக வில்லை. அவர் பணத்தைப்பற்றிப் பேசாது, தினசரியில் உள்ள செய்திகளை எடுத்து, "என்ன அநியாயம்? வெள்ளம் வந்தால் இப்படியா ஊரை அடியோடு அடித்துக் கொண்டு போகவேண்டும்? ஏழைகள் தங்குவதற்கு இடமும் வயிற்றுக்கு உணவுமின்றி என்ன கஷ்டப்படுகிறார்களோ தெற்கே!" என்றெல்லாம் கூட அனுதாபம் காட்டத் தொடங்கிக் காலக்ஷேபம் செய்தார்.

கடிகாரத்தில் மணியும் 'டங் டங்' என்று ஒன்பது அடிக்கவே, சேஷையர், "ஆபீஸுக்கு நாழி ஆகிறது" என்று எழுந்திருந்தார்.

சர்மாவால் அதற்கு மேல் சும்மாயிருக்க முடியவில்லை. "அடுத்த வீட்டுக்காரர் ரூபாய் கொடுத்து விட்டாரா?" என்றதும் ஆகாசத்திலிருந்து குதித்தவர் போல் திகைத்து, "மறந்தே போய்விட்டேன். எப்பொழுதோ கொடுத்து விட்டார். ரூபாயை உங்களுக்காகத்தான் எடுத்து வைத்திருக்கிறேன்" என்று தம்முடைய ஷர்ட் ஜேபியைத் தடவிப் பார்த்தார்.

"அடேடே! சாவியை எங்கே வைத்து விட்டேன்" என்று சொல்லிக்கொண்டே தலைப்பாணியில் தொங்கும் கோட்டிலுள்ள ஜேபிகளை யெல்லாம் சோதித்துப் பார்த்தார். மேஜையின் அறை—அலமாரியின் மூலைமுடுக்கு—எல்லா இடங்களிலும் தேடிப்பார்த்தாகி விட்டது! என்ன அதிசயம் அந்த சாவி அகப்பட்டால் தானே?

சேஷையர் சிரமப்பட்டுத் தேடுவதைப் பார்த்துச் சர்மா "நீங்கள் சாவகாசமாகத் தேடிப்பாருங்கள். இப்பொழுது என்ன அவசரம்? நான் அப்புறம் வருகிறேன்" என்று சொல்லவேண்டியதாயிற்று.

அன்று சாயந்திரம் காலக்ஷேபத்திற்குச் சொன்னபடி சர்மா ஆஜராகிவிட்டார். ஆனால் கூட்டத்தில் சேஷையரைக் காணவில்லை. கதை ரொம்ப நன்றாக இருந்தது. பாகவதருடைய 'போடுவான்' களுடன் இன்னும் எடுத்துக்காட்டியது. சர்மா சாப்பிட வீட்டிற்குத் திரும்ப வேண்டுமே யென்ற நினைவுகூட இராமல் தன் மயமாகக் கேட்டு அனுபவித்துக்கொண்டிருந்தார். பதினொன்றரை மணிக்கு மங்களம் பாடிக் கதையை முடிக்கும் போதுதான் உலகத்தின் கவனம் அவருக்கு வந்தது. வீடு திரும்புகையில் உடம்பு ஒன்றுமில்லை. கண்களில் மட்டும் சற்று எரிச்சல் எடுத்தது. சில்லுச் சிவிக்கென்ற சோற்றைத் தின்றுவிட்டுப் படுக்கையில் படுத்துக்கொள்ளும் போதுதான் தலை பாரமாக இருப்பது போல் தோன்றிற்று. தூங்கினால் சரியாகிவிடு மென்றிருந்தார் சர்மா. ஆனால் காலையில் அவரால் எழுந்திருக்க முடியவில்லை. முதலில் ஸாமான்யமாக இருந்த ஜுரம் பிரமாதமான காய்ச்சலாக மாறிவிட்டது. தலையில் 'ஐஸ் பாக்' வைக்கவேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டது. அந்த ஜுர வேகத்திலகூட அவர் சேஷையரை நினைக்காமல் இல்லை. "பாவி, என் பணத்தை வாயில் போட்டுக்கொண்டது மன்றி என் பிராணனுக்கும் உலை வைத்துவிட்டாயே" என்று அலறுவார். சேஷையர் கூப்பிட்டதனால் தானே காலக்ஷேபத்திற்குப் போக நேரிட்டது? காலக்ஷேபம் கேட்கப் போனதால் ஜுரம் வந்தது.

இருபது நாட்கள் படுக்கையிலேயே கிடந்தார் சர்மா. 'டாக்டர் பில்லில் இருபத்து மூன்று ரூபாயும் ஆறு அணாவும் ஆனபிறகே அவருக்கு ஜுரம் தெளிந்தது.

அப்புறம் எழுந்து நடக்க இரண்டு வாரங்கள் பிடித்தன. அன்று காலையில் சேஷையர் முகத்தில் விழித்த பலன் இத்தனையும்.

இதற்குப் பிறகு ஒரு மாதம் கழிந்தது. அன்று ஏழாம் தேதி. ஆபீஸிலிருந்து சம்பளம் வரும் தினம். சேஷையர் மனக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார். பிடிப்புப் பணம் போக ரூ. 55-7-6 வரும். வீட்டு வாடகை ரூபாய் 17-8-0. மளிகைக்கடை மாணிக்கத்திற்கு 20 ரூபாய் கொடுத்தாக வேண்டும். போன மாதமே மூஞ்சி முகம் தெரியாமல் பேசிவிட்டான். மிகுதி இருக்கும் ரூபாயில் அந்த மாஸமெல்லாம் தள்ளவேண்டுமே. குழந்தைகள் பள்ளிக்கூடச் சம்பளம் எங்கிருந்து கட்டுவது? ஸஹதர்மிணி புடவையே 'சுத்த'மாக இல்லையென்று சொல்லியிருக்கிறாள். அவளுக்கு அதை வாங்கித் தருவதா? இந்தச் சர்மாவின் கடனைத் தீர்ப்பதா? கடைசியில் சர்மாவுக்குச் சேர வேண்டிய "ஐடத்தை" ஒத்திப்போட்டு விட்டார்.

தம் ஸம்ஸாரத்தினிடம் ஏதாவது ரூபாய் இராமல் போகாது. 'செலவுக்குக் கொடுக்கும் பணத்தில் ஏதாவது சுஷ்கம் செய்து மீத்தி வைத்திருப்பாள். அதை வைத்துக்கொண்டு இதரச் செலவுகளைப் பார்த்துக் கொள்ளலாம்" என்று திட்டம் போட்டுவிட்டார் சேஷையர்.

பத்து ரூபாய் எதற்காகச் சேஷையர் கடன் வாங்கினாரென்றால் குதிரைப் பந்தயம் கட்டுவதற்கே. இது அவருடைய ஸம்ஸாரத்திற்குத் தெரியாது. தெரிந்தால் வீட்டில் அனர்த்தந்தான். அவரும் இந்த நாலைந்து மாதங்களாகச் செலவில் எதைக் குறைக்கலாமென்று யோசித்து வருகிறார். ஒன்றும் சரியாக 'மானேஜ்' (நிர்வாகம்) பண்ண முடியவில்லை. இந்த மாதிரிப் பொய்ச் சாக்குகள் சொல்லி எத்தனை நாட்கள் சர்மாவை ஏமாற்ற முடியும்? எதற்கும் ஓர் அளவுண்டு. இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கையில் சர்மா வாசலில் யாருடனோ பேசும் சப்தம் கேட்டது." இதோ சேஷையரிடம் ஒரு முக்கிய வேலையாகப் போகிறேன். பத்து நிமிஷத்தில் வந்து விடுகிறேன்."

என்ன செய்வதென்று தோன்றாமல் சேஷையர் மேல் மாடிக்குச் செல்லும் படிக்கட்டின் கீழுள்ள ஓட்டை உடைசல் சாமான்களை வைக்கும் ஒரு குச்சுக்குள் போய்ப் பதுங்கிக் கொண்டார்.

சர்மா மேலே வந்து, 'அப்பா ஆத்திலே இல்லையா? என்று சேஷையரின் சிறிய பெண்ணைக் கேட்டார். "அப்பா இங்கே தானே இருந்தார். காணோமே, வெளியிலே போய்ட்டாரோ என்னவோ" என்றாள்.

"ஆஸாமி எங்கோ தலைமறைந்து விட்டான்" என்று சர்மா முணுமுணுத்துக் கொண்டே போய்விட்டார்.

அவர் போனாரோ இல்லையோ, குச்சுக் குள்ளிருந்து வீறிட்டுச் சேஷையர் வெளியே ஓடி வந்தார். குச்சுக்குள் ஓரிடத்தில் குளவி கூடு கட்டிக்கொண்டிருந்தது. பதுங்கிப் பதுங்கி இருந்த சமயம் சேஷையரின் மூக்கிலும், வலது கண் இரப்பையிலும் நன்றாகக் கொட்டி விட்டது. தினவு எடுக்கவே மூக்கையும் இரப்பையையும் சொறிந்து விட்டார். இடது கண்ணும் மூக்கும் அப்பமாக ஊதிவிட்டன. இந்தக் கோலத்துடன் தன் தகப்பனார் குச்சுக்குள்ளிருந்து ஓடி வருவதைப் பார்த்து, குழந்தைக்கு வாரிப் போட்டது, முதலில் 'பூதமில்லை அப்பா தான்' என்று தெளிந்ததும் அவள் கை தட்டி உரக்கச் சிரித்துச் சேஷையர் மீது தொப்பென்று புரண்டு விளையாடினாள்.

அதே சமயம் இரண்டு பேர் சர்மாவைத் தூக்கிக்கொண்டு சேஷையர் இருக்கும் அறையில் தோன்றினர். இந்தத் திருட்டுப் பயலிடமிருந்து பணத்தை வாங்க என்ன வழியென்று யோசனை செய்துகொண்டே கவனமற்றியாகத் தெருவில் போகும்போது வாழைப்பழத் தோல் சறுக்கி விழுந்துவிட்டார் சர்மா. இரண்டு கால்களிலும் அநேக இடங்களில் ரத்த காயம். கை எலும்பு முறிந்துவிட்

(153-ம் பக்கம் பார்க்க)

# என் கனவுகள்

'தூங்கு மூஞ்சி'

எனக்கே தூக்கம் வரவில்லை. ஐரோப்பிய வுலக நிலையில் தற்போதிருக்கும் புழுக்கத்தைவிட அதிகமான புழுக்கம் இப்பாழும் பட்டிணத்திலிருக்கிறது. வருணஜபத்திற்காவது, விராடபர்வத்திற்காவது, மேகங்கள் அஞ்சுவதாய்த்தோன்றவில்லை. இப்புழுக்கத்தில் தூக்கம் எப்படி வரும்? அதிலும் நாமிருக்கும் வீடோ "ஏ. ஆர். பி" "டக் ஔட்" போன்றது. மணி பத்து ஆயிற்று, பதினொன்று மடித்தது. அரைப்படிப்பாய் விட்டிருந்த நியூஸ் பேபரை எடுத்து வைத்துக்கொண்டேன்; வட்டமேஜையினரில் ஒருவரான தனித்தமிழ் வீரர் ஒருவரை ராஜப்பிரதிநிதி பேட்டிக்கு அழைத்திருப்பதாய் வர்த்தமானம் போட்டிருந்தது; "ஸரி, (Motion talked out)" என்பது போல் "( Question Interviewed out)" என்று ராஜப்ரதிநிதி செய்து விடுவார் என்று என்னால் ஆன ஹேஷ்யமொன்றைச் செய்துவிட்டு பேபரைக் கீழே போட்டேன். தூக்கம் வராமல் மிகவும் சிரமமாயிருந்தது. கடைசியில் தலைவர்களுக்குத் திடீரெனத் தோன்றுவதுபோல் எனக்கொரு உபாயம் அந்தராத்மாவிற்குள் பளிச்சென்று தோன்றிற்று. டேபிளின் கீழ் விழுந்து கிடந்த தமிழ் விகடப் பத்திரிகை யொன்றை எடுத்துச் சிறிப்புப் பகுதியைப் படிக்க வாரம்பித்தேன்; சிறிது நேரத்திற்கெல்லாம் தூங்கி விட்டேன்.

தூக்கம்மட்டும் ஆழ்ந்ததாய் வரமாட்டேன் என்று சொல்லி விட்டது. என்னென்னமோ எண்ணங்களெல்லாம் தோன்றி புத்தியைக் குழப்பிக் கொண்டிருந்தன. ஸாயங்காலம் வெகுநேரம் ஒரு ஆந்திர ஜோஸ்ய நண்பனோடு உட்கார்ந்திருந்து விட்டேன். அதனால் பீச் நடையுமில்லாமற் போயிற்று. மேலும் ஆபீஸில் ஏதாவது முன்னுக்குவர ஹேது இருக்கிறதாவென்று அவனைக் கேட்டு விடலாம் என்று நான் முயன்று முயன்று பார்த்தேன். அவன் இடங்கொடுக்காமல் ஹிட்லரின் ஜாதகத்தையும், சண்டையின் போக்கையும் பற்றியே ஜோஸ்யம் சொல்லிக்கொண்டிருந்தான். 12-ந் தேதி அங்காரகன் பேரப்போகிறானும்......மொத்தத்தில் எல்லாமாகச் சேர்ந்து என் புத்தியில் பெரும் கலக்கத்தை யுண்டாக்கிப் பல கனவுகளை உண்டாக்கின......

"டில்லிக்குப் போன நம் தனித்தமிழ் வீரர் மஹிமைதங்கிய ராஜப்ரதிநிதியைப் பார்த்தும் அவர் மிகவும் கோபத்தோடு இருந்தார். ஸரி, நாம் பாப்பானைக் கேட்காமல் ராகுகாலத்தில் கிளம்பினோமே என்று தனித்தமிழ்வீரர் நினைத்துக் கொண்டார். "நான் எதற்காக உன்னை இங்கு அழைத்தேன் தெரியுமா" என்றார் பிரபு லின்லித்கோ. "தமிழ் நாட்டில் காங்கிரஸ் செய்யும் அட்டூழியங்களின் அட்டவணையைக் கேட்பதற்கு. அவை யாவன, ஒன்று......" "ஸரி, நில்லு. நீ ரோமன் கதோலிக்கா?" "ஆமாம்." "ஸரி, உன்னைத் தம் சிலவில் ரோமபுரிக்கு உடனே ஆகாயக் கப்பலில் வந்து போப்பு ஸ்வாமிகள் தம்மைக் காணச்சொல்" என்று லண்டனிலுள்ள இதாலிய அம்பாஸடர் மூலமாயும் இந்தியா ஆபீஸ் மூலமாயும் ஒரு தந்தி விடுத்திருக்கிறார், போ." இப்படி வைஸ்ரீகல் லாட்ஜிலிருந்து அனுப்பப்பட்ட தனித்தமிழ் போர் வீரர் வானவழியே பறந்து "வாடிகனில்" வந்து விழுந்தார். போப்புஸ்வாமிகள் கோபங் கொண்டவராகவே அவரை முஸ்ஸோலினியிடம் அனுப்பினார். முஸ்ஸோலினி அதைவிடக் கோபங் கொண்டவராய் அவரை பர்லினுக்கு விட்டெறிந்தார். பர்லினில் ஒரு சிறையில் வைக்கப்பட்டார். இப்படி டாக்டர் ஷாட் மாஸ்கோவிலிருந்து தம் வியாபார ஒப்பந்தங்களை முடித்துக்கொண்டு வருமளவும், நம் தமிழ் வீரர் பர்லினில் ராணுவ மருந்து சாலையொன்றில் தினம் இருபது மணி நேரம்கூலி வேலை செய்துகொண்டு, அரைக்

கோப்பைப் பாலும் முக்கால் ரொட்டியும் ஸதாவர்த்தியாய்க் கொடுக்கப்பட்டு, இருந்து வந்தார். உடம்பு பாதியாய் விட்டது. சிலர் இவர் தென்னிந்தியாவில் மலயாள ப்ரதேசத்திலிருந்து வந்த 'ப்ளாக் ஜ்யூ' என்று சொன்னார்கள். டாக்டர் ஷாட் திரும்பி வந்ததும், இவரை கால் நடையாய் "மேற்கு எல்லைக்கு" அனுப்பு என்று ஹிட்லரின் உத்திரவாம். அதன்படி ஒரு நாள் கிளம்பித் தமிழ் வீரர் தம் கால்வலிவை நிரூபித்துக் கொண்டு ஸிக்ப்ரீட் லையனிடம் வந்தார்; சும்மா, கைவீசிக் கொண்டா வந்தார்? இல்லை, இல்லை. ராணுவப்பொருள் மூட்டைகள் ஒன்றை சுமந்து கொண்டே வந்தார். ஏனெனில், அப்படி ராணுவ ஸம்பந்தமாய் ஏதாவது உழைத்தால்தான் அரைக்கோப்பைப்பாலும், அரை ரொட்டியும் (இதற்குள் ரொட்டித்திட்டம் கால் பாகம் குறைந்து விட்டது) கிடைக்குமாம். ஷாட் மாஸ்கோவிலிருந்து பறந்து தன் காரியத்தைத் தெரிவிக்க நேராய் மேற்கு எல்லையில் ஹிட்லரின் 'காமோப்ளாஜ்' செய்யப்பட்ட குழிக்குட் புகுந்தார். இருவரும் பேசிக்கொண்டிருக்கையில் ஒரு ஸிப்பாய் நுழைந்து ஏதோ தெரிவிக்க, ஷாட் வெளிவந்து நம் தமிழ் வீரரை ஏற இறங்கப் பார்த்தார். "ஸரி, நீ தான்" என்று சொல்பவர்போல் டாக்டர் ஷாட் தமிழ்வீரரை யழைத்துக் கொண்டு உட்புகுந்தார். அங்கிருந்த நான்காவது மனிதர் டாக்டர் ஷ்மிட். அவருடைய தேவையே இல்லாமல் ஷாட் அவர்களே தமிழ் வீரரைப்பற்றித் தான் தெரிவிக்க வேண்டியவற்றை யெல்லாம் ஹிட்லருக்குத் தெரிவித்தார். எல்லாம் இண்டோ—ஆர்யன் பிறிவைச் சேர்ந்த தான சிறந்த ஜர்மன் பாஷையிலே பேசினார். நம்படவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. டாக்டர் ஷாட் மட்டும் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்ததும், தென்னிந்தியாவிற்கு வந்திருந்ததும் நம் தமிழ் வீரருக்கு ஞாபகம் வந்தது. கடுங்குரலில் ஹிட்லர் ஏதோ சொல்லி, நின்றபடியே நம் தமிழ் வீரரைப் பார்த்து, இரு கைகளையும் குவித்துக் கொண்டு, தொண்டையைக் கிழித்துக்கொண்டு கத்தினார். "ஆர்யன், ஆர்யன்" என்று ஆர்ய நிந்தை செய்துவருவதற்காகக் கடுந் தண்டனை உமக்கு விதிக்கப்பட் டிருக்கிறது" என்றுமட்டும் சுருக்கமாய் ஆங்கிலத்தில் சொல்லிவிட்டு, டாக்டர் ஷாட் போய் விட்டார். அப்புறம் என்ன நடந்தது என்று இப்பொழுது என் கனவை நினைத்து நினைத்துப் பார்த்தாலும் ஞாபகத்திற்கு வரவில்லை. ஏதோ பலமான சப்தமொன்று 'டம்' என்று காதடைக்கக் கேட்டது. நம் தமிழ் வீரர் தூக்கிவாரி எறியப்பட்டார் போலிருந்தது. சிங்கப்பூர் பினுங்குக்குப் பறந்து போகும் ஒரு 'ஆர். ஏ. எப்' பினுடைய ரக்கையில் போய் மாட்டிக் கொண்டாராம். அவ்வாகாயக் கப்பல் மழை காற்று உபத்திரவங்களால் வழி தவறி தென்னிந்தியாவிற்கு வந்து போகும்படியாகவே, காவேரி 'டெல்டா' விலே சீர்காழியென்ற உத்தம அக்ரஹாரத்திலே ஒரு ஆரிய அந்தணரின் வாசலிலே பொத்தென்று நமஸ்காரம் செய்தாற்போல், நம் தமிழ் வீரர் விழுந்தாராம். சில நாட்களானதும் தன் பாரிஷ் பாதிரி ஸ்வாமியவர்கள் ஒரு 'பேபல்' எக்ஸ்கம்யூனிகேஷன் ஆர்டரைக் காண்பித்து நம் தமிழ் வீரரை 'ரோமன் கத்தோலிக்' கூட்டத்திலிருந்து ஜாதி ப்ரஷ்டம் செய்து விட்டாராம். காரணம் என்னவென்றால் நம் 'ரோமன் கத்தோலிக்' கிறிஸ்துவ வீரர் சிவன் 'நம் தமிழரின் தெய்வம்' 'ஆரிய சூழ்ச்சி செய்து எடுத்துக் கொண்டனர்' என்று நம்பிக்கை கொண்டு பல விடங்களில் பிரசாரம் செய்து வருகிறார் என்று அவருடைய கக்ஷியில் முன் சேர்ந்திருந்த ஒரு ஆந்திர கனவான் ரிபோர்ட் செய்து விட்டாராம்.

* * *

ஆந்திர கனவான் என்று சொன்னேனல்லவா......ஆந்திர கனவான்களெல்லாம் ஒன்றாய் கூடிவிட்டனர். கனவான்கள் மட்டுமல்ல, எல்லா ஆந்திரரும் ஒன்று கூடிவிட்டனர். பிரமுகர்களும், பிரமுகர் அல்லாதவரும், தேசிய வாதிகளும், பிற்போக்குக் கட்சிக்காரர்களும், மொத்தமாய் இடைவிடாது கத்திக்கொண்டே

இருப்பவருமாய் ஒன்றுகூடி விட்டனர். 'தமிழன் ஆகவில்லை' என்ற ஒரே ஆவேச மானது இவர்கள் அனைவரையும் ஒன் ருய்ச் சேர்த்தது. "நல்ல வேளையாய் ஸுகுண விலாஸ ஸபா" மௌண்ட் ரோடுக்குப் போயிற்று என்ருர் ஒருவர். நான் 'ஸஜ்ஜஸ்ட்' பண்ணினதின்மேல் தான் ஆந்திர மஹா ஸபாவிற்கு இக்கட்டி டம் அமர்த்தப்பட்டது என்று ஒருவர் மார்தட்டிக்கொண்டார். "இது நம் கட் டிடம்தானே. நம் கஜபதி ராஜா எவ்வளவு இந்த ஸபாவுக்குக் கொடுத்திருக்கிருர் தெரியுமா?"

"அடுத்த 'ஸென்ஸஸ்' எப்பண்டி? 'டூரிஸ்ட்' போல வந்து ஒரே ஆந்திராவா சென்னைப் பட்டணத்தைப் பண்ணிவிட்டாப் போச்சு." இப்படி ஒவ்வொருவர் ஒவ் வொரு விதம் பேசிக்கொண்டிருக்கும் போது அக்ராசனர் மேஜையைத் தட்டி ஞர். எல்லாம் நிசப்தமாயிற்று. தான் போட்டிருக்கும் திட்டத்தையும் ஏற்பாட் டையும் அக்ராஸனுதிபதிகாரு விவரித் தார்.

"உத்தர சென்னப் பட்டணமு" "தக்ஷிண சென்ன பட்டணமு" என்ருரம் பித்தார். "ஸ்டான்லி வயாடக்ட்" இப் போது நடுவில் 'ரிபேராய்' இருக்கிறது. அதை கார்ப்பொரேஷனே, கவர்ன்மெண் டாரோ, டிராம்வே கம்பெனிக்காரரோ இப்பொழுது ரிபேர் செய்யக்கூடாது. கால்வாய் அகலத்திற்குப் பாலத்தை வெட்டிவிடவேண்டும். அவ்விடம் போட்டு எடுக்கக் கூடியதான இரும்பு வாராவதி யொன்றே போடப்படவேண்டும். காந்தி-இர்வின் பாலத்திலிருந்து ஆரம்பித்து நேபியர் பாலம்வரைக்கும் கால்வாய் ஓர மாய் ஒரு ஆந்திர மாகினே லைன் சர்க்லைக் கேட்டுக்கொண்டு கட்டிவிடவேண்டும். மஹா ஸபாவின் ஸ்தானமான இந்த வீ. பி. ஹாலை நம் 'பேஸ்' ஆக வைத்துக் கொண்டு 'ஆபரேஷன்'களை யாரம்பிக்க வேண்டும்......இப்படி அக்ராஸனுதிபதி பேசிக்கொண்டிருப்பது திடீரெனக் காதில் விழாமல், ஒரு குண்டு சப்தம்போல் காதில் விழுந்தது. எழுந்திருந்தேன். வெளியே வந்து பார்த்தேன்; ஏதாவது பட்டணத்துக்குக்கூட 'ஏர்ரெய்ட்' வந்து டுத்தோ என்று பயம். ஒன்றையும் காணேம்.

மணி நாலடித்தது. மிகக் கலங்கிப் போன அரைகுறைத் தூக்கம்; தலை மிக வும் கனத்திருந்தது. கடற்கரைக்கு நடப் பதற்காக வந்து தெற்கேபோனேன். நம் நண்பர் ஆசிரியரைக் கண்டேன். "விஜய தசமி மலர் ஒண்ணு போடப்போறேன்; ஏதாவது நீ கட்டாயம் எழுதிக் கொடுக் கனும் என்ருர். "ஆகட்டும் ஸார்" என்று வந்தவன் மேற்கண்ட கனவுகளைக் கண்ட படி எழுதி பாரதமணி ரஸிகர்களிடம் அர்ப்பணம் செய்துவிட்டேன்.

---

(150-ம் பக்கத் தொடர்ச்சி)

டது. தெருவில் போய்க்கொண்டிருந்த இருவர் அவரை எடுத்து வந்தனர். அவ ருடைய நல்லகாலம் பக்கத்திலேயே சேஷையர் வீடு இருந்தது.

சேஷையரும் சர்மாவும் ஒருவரை யொருவர் இந்த நிலைமையில் பார்த்துக் கொள்ளும்போது, ஏக காலத்தில் இருவர் வாயினின்றும் 'அட என்ன கஷ்ட காலம்' என்ற சொற்கள் வந்தன.

* * *

அப்புறமும் மூன்று மாதங்கள் ஆயின. சேஷையர் இன்னும் பத்து ரூபாயைத் திருப்பிக் கொடுத்தபாடில்லை. சர்மா இன் னும் அவருடைய வீட்டிற்குப் பணத்திற் காக நடந்துகொண்டுதா னிருக்கிருர்.

---

# A.C.C. சிமெண்ட்

வாங்கினால் நமக்கு யாதொருவிதமான தொந்திரவுமில்லை.

கிடைக்குமிடம் :

**அப்துல் ஹுஸேன் ஜீவாஜீ & கம்பெனி**


சிமிட்டி, இரும்பு வியாபாரிகள்

20-A, லிங்கி செட்டி தெரு, சென்னை

டெலிபோன் நெ. 2009.

## 22 வருஷமாக

சென்னையில் பிரபலமானவர், எதிர்கால பல நிபுணர்.



ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி வருஷபலன் ரூ. 3. எதிர்கால கேள்வி 6-க்கு ரூ. 1. பொதுபலன் ரூ. 10. ஆயுள்வரை புக்திவாரிபலன் எழுத 25. (ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.)

**ஜோதிஷரத்னம் பண்டிட் M. R. K. மூர்த்தி.**

38, தேவராஜ முதலி தெரு, பி. டி., மதராஸ்.

கிளை ஆபீஸ் 1. ஆடம் தெரு, மயிலாப்பூர்.

**துவாரகநாத் ப்ரொடக்ஷன்ஸ்**



**தானசூரகர்ணாவில்** நடிக்கும்

ரேடியோ ஸ்டார் M. S. திரிபுராம்பா

## வறுமையை ஒப்புக்கொள்வது மானக்கேடல்ல

அதைத் தவிர்ப்பதற்கு எதுவும் செய்யாமலிருப்பதுதான் மானக்கேடு

வான்கார்ட் பாலிஸி வறுமையைத்

- தவிர்க்கக்கூடிய சாதனம் -

உங்கள் வாழ்வின் மதிப்பை

# வான்கார்ட்

பாலிஸி மூலம் பெரிய மூலதனமாக்கி விடுக

*

## வான்கார்ட் இன்ஷூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

9-9 A, பிளாக்கர்ஸ் ரோட் :: மௌண்ட் ரோட், மதராஸ்.

தந்தி : வான்கார்ட் போன் : 8558

# இண்டோ கமர்ஷியல் பாங்கி லிமிடெட்.

ரிஜிஸ்டர்டு தலைமை ஆபீஸ் :- மாயவரம்

சென்ட்ரல் ஆபீஸ் :- சென்னை

| | |
|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ... ரூ. 25,00,000 |
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ... ரூ. 21,25,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ... ரூ. 17,54,368 |

சென்னை ஆபீஸ்கள்

ஆர்மீனியன் தெரு, சைனு பஜார் ரோடு, மாம்பலம், மைலாப்பூர், திருவல்லிக்கேணி.

டைரக்டர்கள்

ஸ்ரீ டி. ஆர். வேங்கட்டராம சாஸ்திரிகள், சி.ஐ.இ.

ஸ்ரீ என். வி. ராகவன், (மாஜி அகவுண்டண்டு ஜனரல்).

ஸ்ரீ வி. வெங்கடராமய்யர், எம்.ஏ., பி.எல்.

ஸ்ரீ ஆர். விஸ்வநாதய்யர், பி.ஏ., பி.எல்.

ஸ்ரீ கே. சிவஸ்வாமி ஐயர்.

ஸ்ரீ கே. சுப்பய்யர்.

ஸ்ரீ ஆர். எஸ். யே. சங்கரய்யர்.

ஸ்ரீ எஸ். என். என். சங்கரலிங்க ஐயர்,
(மானேஜிங் டைரக்டர்)

## பரசுராம சித்த ஔஷதாச்ரமம்

திருவண்ணுமலை (N. A. Dt.)

நீடித்த வியாதிகளை, முப்பு குருவால் செய்த ஔஷதங்களால் நிவர்த்தி செய்யப்படும். டியூபர்குலோஸிஸ் என்ற க்ஷய ரோகத்திற்கும், நீரழிவு ரோகத்திற்கும் விசேஷ ஔஷதங்கள் இருக்கின்றன.

### முப்புகுரு சேர்ந்த "சித்த எண்ணெய்"

இது சர்வரோக நிவாரணி, பரம சஞ்சீவி. ஒரு தடவை உபயோகித்தால் இதன் பெருமை தெரியும். அனேக டாக்டர்களால் பரிசீலனை செய்யப்பெற்றது. குழந்தைகள் பால் கட்டிகளுக்கும், ஈரல் கட்டிகளுக்கும் நிகரற்ற ஔஷதம்.

ஸோல் டிஸ்டிரிபியூடர்கள் :

**ஸாரதா ஸ்டோர்ஸ், காரைக்குடி.**

ஸ்டாக்கிஸ்ட்ஸ் :

**அப்பா அண்டு கம்பெனி,** மதரூஸ்.

**T. N. நாகலிங்கம் பிள்ளை,** மதுரை.

**மீனுக்ஷி ஸ்டோர்ஸ்,** தேவகோட்டை.

**T. N. சொக்கலிங்கம் பிள்ளை,** அண்டு சன்ஸ், மதுரை.



குழந்தைகளின்

ஈரல் குலைக் கட்டிகளுக்கு

சிறந்த ஔஷதம்

## லி வ ரை ட் ஸ்

### லிவரைட்ஸ் கம்பெனி

தனுகு வெஸ்ட் கோதாவரி

தெப்பக்குளம் திருச்சினுப்பள்ளி

திருவல்லிக்கேணி

மதராஸ்

புரொப்ரைட்டர்கள் :

டி. என். செய்னுலு & ஸன்ஸ்


### மன்னுர்குடி டி. மு. கோர்ட்

1938 ஞு O. S. 501

F. M. S. ஐ சேர்ந்த தைப்பிங்கிலிருக்கும் அளகாபுரி கருப்பன் செட்டியார் குமாரர் சொக்கலிங்கம் செட்டியார் — வாதி

மன்னுர்குடி தாலூக்கா பனயடி கோட்டகம் நாக்கைய தேவர் மகன் வடிவேலு தேவர் — 2ம்பிரதிவாதி

இந்த நெம்பரில் ஏற்பட்டிருக்கும் பிரிலிமினரி டிக்கிரியில் கண்ட சொத்துக்களை ஏலம் போட்டு தொகையை வசூலிக்கும் பொருட்டு பைனல் டிக்கிரி செய்து தரவேணுமாய் வாதியால் மனு கொடுக்கப்பட்டு அது விஷயமாய் 2-ம் பிரதிவாதிக்கு நோட்டீசு போனதில் ஷ நோட்டீசுகள் நேரில் சார்வாகாததினுல் 2-ம் பிரதிவாதிக்குள்ள நோட்டீசை அவன் கடைசியாய் இருந்து வந்ததும் அவனுக்கு சொந்தமானதுமான மன்னுர்குடி தாலூக்கா பனையடி கோட்டகம் கிராமத்திலுள்ள வீட்டிலும் இந்தக் கோர்ட்டிலும் ஒட்டி சார்வு செய்யவேணுமாய் மனுக் கொடுக்கப்பட்டு அந்தப்படி உத்திரவாகி ஈரங்கி 30-10-39ல் போடப்பட்டிருக்கும் விபரம் சகலரும் அறியக் கோருகிறேன்.

ஏ. வெங்கடராம அய்யர்,

வாதி வக்கீல்.

14-10-39